ISSN 1391-7501

# உண்மை உதயம் طلوع الحق

உண்மை – 59 ஏப்ரல் - 2013 UNMAI UDHAYAM ஜ. அவ்வல் - 1434 உதயம் - 182

தமிழ் பேசும் முஸ்லிம்களின் இஸ்லாமிய மாத இதழ் - ISLAMIC TAMIL MONTHLY



## குறிவைக்கப்படும் முஸ்லிம் கல்வி

## தென்னந் தோப்பு மாமரம் தேங்காய் காய்க்காது!

Designed By: M. D. Aslam

40/-

ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா (JASM)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமையா மகளிர் அரபுக் கலாபீடம்
## திஹாரிய

## புதிய மாணவிகள் சேர்வு - 2013

### தகைமைகள்

- O/L முடித்து A/L கலைப்பிரிவிற்கு தகுதி பெற்றிருத்தல்.
- 18 வயதை 01.06.2013 அன்று பூர்த்தியடைந்திருத்தல்.
- தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- அல்குர்ஆனை சரளமாக ஓதுதல்.
- படிப்பைத் தொடர்வதற்கு தடையான நோய்கள் எதுவும் இல்லாதிருத்தல்.

### எமது கல்லூரியில் கிடைக்கும் நன்மைகள்

- அல்குர்ஆன் அஸ்ஸுன்னா அடிப்படையில் தொகுக்கப்பட்ட 4 வருடப் பாடத்திட்டத்தை முடித்த பின் 'அல் ஆலிமா சான்றிதழ்' வழங்கப்படும்.
- கலைப்பிரிவில் (A/L) உயர்தரம் கற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளுடன், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுத, வாசிக்க, பேசுவதற்கான பூரண பயிற்சியளித்தல்.
- த.'வா பயிற்சியளித்தல் - தாயிகளை உருவாக்குதல்.
- கணனி பயிற்சியோடு மகளிருக்கான சுயதொழில் பயிற்சியளித்தல்.

### அனுப்ப வேண்டியவை

விண்ணப்ப முடிவுத் திகதி 30.04.2013

1. சுயவிபரக்கோவை அடங்கிய விபரம்.
2. முகவரி இடப்பட்ட 15/- முத்திரை ஒட்டப்பட்ட 9.5 x 4 அளவு கடித உறை.

### மேலதிக விபரங்களுக்கு

Sumaiyya Ladies Arabic College,
235/23A, Lafir Hajiyar Mawatha,
Warana Road, Thihariya. 11875
Tel: 033 22 88520
Mob: 077 7702921/ 071 2272581/ 071 6366050


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உதயம்

طلوع الحق

UNMAI UDAYAM

Islamic Tamil Monthly தமிழ் பேசம் முஸ்லிம்களின் இஸ்லாமிய மாத இதழ்

உண்மை - 59, உதயம் - 182
ஏப்ரல்
ஜமாதுல் அவ்வல் - 1434
ISSN 1391-7501



**ஆசிரியர்**
S.H.M. இஸ்மாயில் ஸலபி
B.A. (Hons)

**துணை ஆசிரியர்**
S.S. ரமழான் ஸலபி
B.A. (Hons) M.A. (Cey)

**வெளியீட்டு ஆலோசனைக் குழு**
- அஷ்ஷெய்க் N.P.M. அபூபக்கர் சித்தீக் (மதனி)
- A.L. கலீலுர் ரஹ்மான் M.A. (Cey)
- M.M. ஹித்மதுல்லாஹ் M.Sc. (Cey)
- மௌலவி செய்னுதீன் S. பரீட்
- அஷ்ஷெய்க் N.P. ஜுனைத் (காஸிமி)
B.A. (Hons) (Madeena)



**வெளியீடு**
Jamaath Ansaris Sunnathil Mohammadiyya
Head Office:
Paragahadeniya (60071)
Sri Lanka.
Tel: 037 2299412 Fax: 037 2299244
Web: www.jasm.lk
E-mail: jasm@sltnet.lk
unmaiudayam@gmail.com


**சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | - 40/- | தெற்காசிய நாடுகள் | - 1100/- |
| தபால் மூலம் | - 50/- | ஐரோப்பிய நாடுகள் | - 1500/- |
| ஆண்டு சந்தா | - 600/- | மத்தியகிழக்கு நாடுகள் | - 1400/- |

ஐக்கிய அமெரிக்க நாடுகள் - 1800/-

## இந்த இதழில்...

ஆசிரியர் பக்கம்:


| | |
|---|---|
| தென்னந் தோப்பு மாமரம் தேங்காய்.... | 2 |
| சக்தி இருந்தும் வீரியமற்றிருக்கும் சமூகம் | 5 |
| அகீதா இஸ்லாமிய்யா | 9 |
| அழைப்பாளர்களுக்கு | 12 |
| தாவரம் பேசுது | 15 |
| இளைஞர் சமுதாயமே!.... | 19 |
| பெண்களே! நரகம் செல்லாதிருக்க.. | 22 |
| இஸ்லாமிய நாகரிகம் க.பொ.த உ~த | 25 |
| நூல் விமர்சனம் | 31 |
| காவிகளால் குறிவைக்கப்படும் முஸ்லிம் கல்வி | 33 |
| இலங்கை முஸ்லிம் அடுத்து என்ன செய்யலாம் | 35 |
| மாறாத வடுக்கள்... | 37 |
| பிக்ஹுல் இஸ்லாம் | 41 |
| அல்குர்ஆனும் ஸுன்னாவும் முரண்படுமா? | 44 |
| கேள்வி ~ பதில் | 48 |


هذه مجلة شهرية إسلامية باللغة التاملية ، وتصدر من مركز نشر العلوم الإسلامية بجماعة
أنصار السنة المحمدية بسريلانكا ، وتحمل بين طياتها الأفكار الإسلامية الصافية
في ضوء الكتاب والسنة ، وقد تقتبس من الكتب العربية بعض النصوص الباطلة
للإستدلال على بطلانها وللتنقيد عليها


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'தென்னந் தோப்பு மாமரம் தேங்காய் காய்க்காது'

முஸ்லிம்களுக்கு எதிரான சதித்திட்டங்கள், வன்முறைகள் என்பன இலங்கை நாட்டுக்கு ஒன்றும் புதியதல்ல. ஆனால் சுமார் ஒன்றரை வருடங்களாக தொடர்ந்தும் முஸ்லிம்கள் மன உழைச்சலுக்கும், மத நிந்தனைகளுக்கும் அவதூறுப் பிரச்சாரத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருவது இலங்கை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

17.03.2013 கண்டியில் நடைபெற்ற பொதுபலசேனாவின் பொதுக் கூட்டத்தில் தமக்குப் பின்புலமாக இருப்பது யார் என்பதை மிகத் தெளிவாகவே அவர்கள் அறிவித்துவிட்டார்கள். சட்ட ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களும் அரசியல் யாப்பின் அடிப்படையில் மக்களை வழிநடத்த வேண்டியவர்களும் இனவாத, மதவாத சக்திகளுக்குப் பக்க துணையாக மாறிவிட்டார்கள். பயிரை மேய வேலிகளே தயாராகிவிட்டன.

இந்நிலையில் இலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகளின் வாய்களுக்குப் பூட்டும், கைகளுக்கு விலங்கும் இடப்பட்டுள்ளன. தேர்தல் களங்களில் சிங்கங்களாக கர்ஜித்தவர்கள் பாராளுமன்றத்தில் அசிங்கங்களாக அமர்ந்து கொண்டிருக்கின்றார்கள். தேர்தல் மேடைகளில் சீறிப் பாயும் தலைவர்கள் பாராளுமன்றத்தில் பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டனர். இவர்களைப் பாராளுமன்ற ஆசனங்களில் அமர வைத்து அழகு பார்ப்பதற்காக இந்த சமூகத்தின் எத்தனையோ இளைஞர்களின் உயிர்கள் தியாகம் செய்யப்பட்டுள்ளன என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். இந்த சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மீது முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

**தென்னந் தோட்டத்துக்கு மத்தியில் ஒரு மாமரம் தனியாக நிற்பதால் அதில் மாங்காய் காய்க்கக் கூடாது, தேங்காய்தான் காய்க்க வேண்டும் என்று எந்த மாங்காய் மடையனாவது கூறுவானா?**

முஸ்லிம் ஆன்மீகத் தலைமை மீது இருந்த நம்பிக்கையும் சிறிது சிறிதாக சிதைந்து வருகின்றது; சிதைக்கப்படுகின்றது. இஸ்லாமிய அமைப்புக்கள் அடுத்து என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியாத நிலையில் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றன.

இந்த சூழ்நிலையில் சிலர் புதிய தலைவர்களைத் தேடுகின்றனர். அப்படிச் சிலர் உருவாகி வருகின்றனர். சமூகத்தை வழிநாடாத்தக்கூடிய அளவுக்கு அவர்களிடம் போதிய அனுபவமோ, ஆற்றலோ, அறிவோ இருக்க வாய்ப்பு இல்லை. மக்கள் இந்தத் தலைமைகள் பின்னால் சென்றால் எதிர்காலம் எப்படி அமையும் என்று சொல்ல முடியாது.

சட்டம் தன் கடமையைச் செய்தால் மக்கள் சட்டத்தின் மீது நம்பிக்கை வைப்பார்கள். ஆனால், இதுவரை நடந்த எந்த துரோகச் செயலுக்கும் எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. யாரும் கண்துடைப்புக்காகக் கூட கைது செய்யப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில போது பொறுமையின் எல்லையைத் தாண்டும் சிலர் தவறான முடிவை எடுக்கலாம். அப்படி தவறான முடிவை எடுத்தால் அவர்களின் முதல் இலக்காக முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவர்களும் அடுத்த இலக்காக இஸ்லாமிய பிரச்சார அமைப்புக்களின் தலைவர்களும் அமையலாம். ஏனெனில், வெறுப்புக் கொண்டவர்கள் முதலில் வெறுப்பை உள்ளுக்குள்தான் வெளிப்படுத்துவார்கள். தமிழ் இளைஞர்களால் தமிழ்த் தலைவர்கள் குறிவைத்து குதறப்பட்டது போன்ற ஒரு சூழ்நிலை உருவாகலாம். எனவே, இந்த மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு தலைமைகள் மீது உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

சட்டம் தன் கடமையைச் செய்யத் தவறினாலும் எல்லாப் பிரச்சினைகளையும் சட்ட ஒழுங்குகளுக்கும் ஜனநாயக மரபுகளுக்கமையவுமே நாம் எதிர்கொள்ள வேண்டும். பொதுபலசேனாவின் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தால் நூற்றுக்கணக்கான வழக்குகளுக்கு அது உள்ளாகி இருக்கும். இப்போது கூட ஒன்றும் கை நழுவிப் போய்விடவில்லை. அவர்களின் மத நிந்தனைகள், அவதூறுகள் என்பவற்றுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

முஸ்லிம்களை ஆயுதப் போராட்டம் ஒன்றின் பக்கம் திருப்புவதற்காகத்தான் இப்படி தொடர்ச்சியான நெருக்குதல் கொடுக்கப்படுகின்றதோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது. அப்படியொன்று நடந்துவிட்டால் இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதம் இருக்கின்றது என்ற பெயரில் முஸ்லிம்களைக் கொன்று குவிக்கலாம். தேடுதலின் பெயரில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இலங்கைத் தீவில் பயங்கரவாதம் இருக்கின்றது என்று கூறிவிட்டால் வெளிநாடுகள் கூட இலங்கைக்கு ஒத்துழைக்கும். அமெரிக்கா போன்ற இலங்கையோடு முரண்பட்டுள்ள நாடுகள் கூட இலங்கைக்கு ஒத்துழைப்பு நல்கலாம். எனவே, பொறுமையும் சட்ட நடவடிக்கையுமே இன்று எம்முன்னால் உள்ள ஒரேயொரு முறையாகும்.

இஸ்லாமிய அமைப்புக்கள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து நல்ல பௌத்த தலைவர்களையும், பிற சமூக மக்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நகர்வுகள் மூல்மாகவும் சர்வதேச சட்டங்களூடாகவும் கூட எமது பிரச்சினையை அணுக வேண்டியுள்ளது.

இலங்கையின் அரசியல் சாசனம் சகல மதங்களுக்கும் சமத்துவமான உரிமையை வழங்கியுள்ளது. ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் தான் விரும்பும் கொள்கையையும், மதத்தையும் பின்பற்றவும் பிரச்சாரம் செய்யவும் உரிமை உள்ளது. ஒரு இலங்கைப் பிரஜை இலங்கையில் எந்த இடத்திலும் விற்கலாம்; வாங்கலாம். இதற்குப் பூரண உரிமை பெற்றுள்ளான். ஒருவன் விரும்பும் ஆடையை அணியும் சுதந்திரம் பெற்றுள்ளான். இவை அத்தனைக்கும் எதிராக பொதுப்பலசேனா செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில் பௌத்தம் தவிர்ந்த ஏனைய கலாசாரங்கள் இருப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு தென்னந்தோட்டம் இருந்தால் அதை தென்னந்தோட்டம் என்றுதான் அழைக்கின்றோம். அங்கே இருக்கும் ஏனைய பயிர்கள் பற்றியும் அலட்டிக் கொள்வதில்லை என அறிவிலித்தனமாக வாதாடுகின்றனர்.

இரு இலட்சம் தென்னை மரங்கள் இருக்கின்றன. அதைத் தென்னந்தோட்டம் என்போம். அதற்கு அருகில் இருபதாயிரம் மாமரங்கள் இருக்கின்றன. அதை மாந்தோப்பு என்போம். அதைத் தொடர்ந்து பத்தாயிரம் வாழைமரங்கள் உள்ளன. அதை வாழைத்தோட்டம் என்றுதான் கூறுவோம். இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் சாதாரண களைகளாக இல்லை. தனித்தனித் தோப்புக்களாக உள்ளனர் என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றார்கள்.

ஏனைய சமய கலாசாரத்தையும், தனித்துவத்தையும் மறுக்கும் விதமாகத்தான் இந்த உலக மகா தத்துவத்தை உதிர்ந்து வருகின்றார்கள் இந்த மாமேதைகள்(?).

ஒரு இலட்சம் தென்னை மரங்களுக்கு மத்தியில் ஒரு மாமரம் நிற்கின்றது. இந்தத் தோட்டத்தை தென்னந் தோட்டம் என்று கூறுவோம். பிரச்சினையில்லை. ஆனால், தென்னந் தோட்டத்துக்கு மத்தியில் ஒரு மாமரம் தனியாக நிற்பதால் அதில் மாங்காய் காய்க்கக் கூடாது, தேங்காய்தான் காய்க்க வேண்டும் என்று எந்த மாங்காய் மடையனாவது கூறுவானா? மாங்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்தாலும் அது தேங்காயுடைய அமைப்பில்தான் இருக்க வேண்டும் என்று கூறுவானா? தென்னந் தோட்டத்துக்கு மத்தியில் இருப்பதால் அந்த மாங்காயைப் பிழிந்தால் சாறு வரக் கூடாது பால்தான் வர வேண்டும் என்பானா? சிங்களவர்கள் அதிகமாக வாழும் நாட்டில் வாழும் முஸ்லிம்களும் தங்களைத் தனித்துவமாக அடையாளப்படுத்திக் கொள்ளாமல் சிங்கள, பௌத்த கலாசாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற வாதமும் இவ்வாறே முட்டாள்தனமாக அமைந்துள்ளது. இது ஒரு கலாசாரத் திணிப்பு, கலாசாரத் தீவிரவாதமாகும்.

முஸ்லிம்கள் தாடி வளர்ப்பதையும், முஸ்லிம் பெண்கள் அபாயா அணிவதையும் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று கூறுகின்றனர். இஸ்லாம் சொன்னதால் அவர்கள் இப்படிச் செய்கின்றார்கள். இது அடிப்படைவாதம் என்றால் பௌத்த துறவிகள் மொட்டை அடிக்கின்றனர்; ஏன் அடிக்கின்றனர் என்றால் பௌத்தம் சொல்கின்றமையால் செய்கின்றார்கள். அதனால் மொட்டையடித்துக் கொள்வதை யாரும் தீவிரவாதமாகக் கருதுவதில்லை. அதே போல முஸ்லிம்கள் தாடி வைப்பதையும் தீவிரவாதமாகக் கருதுவது பொருத்தமாகாது.

முஸ்லிம் பெண்கள் அபாயா அணிவது இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றால் பௌத்த துறவிகள் அணியும் ஆடை பௌத்த அடிப்படைவாதமாகும். முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படையிலும் பௌத்தர்கள் பௌதத்தின் அடிப்படையிலும் வாழ்வதுதான் சரியானது. ஒன்றில் இரண்டும் அவரவர் சமயத்தையொட்டியது என இரண்டையும் அங்கீகரிக்க வேண்டும் அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதமும் பௌத்த அடிப்படைவாதமும் பிழையானது என்று கூற வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவரவர் மதத்தின் அடிப்படையில் வாழ்வதை நாம் அங்கீகரிக்கின்றோம். ஆனால், பொதுபலசேனா பௌத்தர்கள் பௌத்தத்தின் பக்கம் மீள வேண்டும் என்று பிரசாரம் செய்யும் அதே நேரம், ஏனைய சமயத்தவர்கள் தமது தனித்துவமான சமய அடையாளங்களை விட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருப்பது முரண்பாடாகவும், சுயநலம் கொண்ட தீவிரவாதப் போக்காகவும் திகழ்கின்றது.

இவ்வாறு அறிவுக்கும் நடைமுறை உலகுக்கும், நீதி நியாயத்திற்கும், மனித நேயத்திற்கும், இலங்கை அரசியல் யாப்புக்கும், பௌத்த மதத்தின் உயர்ந்த தத்துவங்களுக்கும் எதிராகச் செயற்பட்டு வரும் பொதுபலசேனாவின் செயற்பாடுகளை அரசு தடுப்பதுதான் இந்த நாட்டுக்கு நன்மை பயக்கும். இவர்களது இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராகத் தொடராக வழக்குகள் தொடுக்கப்படுவது எதிர்கால சந்ததிகளுக்கு நாம் செய்யும் பெரிய உதவியாக அமையும் என்பது கவனத்திற் கொள்ளப்படத்தக்கது.

இல்லையென்றால் எல்லா அநியாயங்களையும் அரங்கேற்றிவிட்டு முஸ்லிம்கள்தான் பிரச்சினைக்குரியவர்கள் என்ற தவறான தகவலை வரலாற்றுப் பதிவாக மாற்றி எம்மை குற்றவாளிகளாகக் காட்டுவார்கள்.

**சிந்திப்போம்!..... செயற்படுவோம்!,....**

# சந்தி சிரிக்கும்

சந்தி சிரிக்கும்
சங்கதியெல்லாம்
காதிக் கோட்டில்
கண் முன் கசிகிறது!

புரோக்கர் மாமாக்கள்
பணத்திற் கெதையும்
பாவமாய் எண்ணாமல்

பொய்யையும், புரட்டையும்
மெய்யெனக் காட்டி
பிழைப்பு நடத்துகின்றார்!
அப்பாவிக் குமருகள்
ஆபத்தில் சிக்கி
அலங்கோலப்பட்டு
குடும்பத்தைப் பிரிந்து
குழந்தையும் கையுமாய்

நீதி கேட்டு
காதிக் கோட்டில்
கை கட்டி நிற்கிறார்!

இஸ்லாத்தை மறந்து
ஈமானை இழந்து
முகமூடி அணிந்து
முஸ்லிமாய் வாழ்கிறார்!

~சாரணா கையூம்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி இருந்தும் வீரியமற்றிருக்கும் சமூகம்

அஷ்ஷெய்க் N.P. ஜுனைத் (காஸிமி) B.A. (Hons) Madeena

"பசியோடு இருக்கும் மிருகங்கள் உணவுத் தட்டை நோக்கிப் பாய்ந்து செல்வதைப் போன்று, (எதிரி) சமூகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உங்களுக்கெதிராகச் செயற்பட முற்படுவார்கள். அப்போது ஒருவர், 'அந்நேரம் நாங்கள் எண்ணிக்கை குறைந்தவர்களாக இருப்போமா?' எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் 'இல்லை, அந்நேரம் நீங்கள் எண்ணிக்கை கூடியவர்களாக இருப்பீர்கள். எனினும் நீங்கள் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போன்று இருப்பீர்கள். இன்னும், உங்களைப் பற்றிய பயத்தை உங்கள் எதிரிகளின் உள்ளங்களிலிருந்து அல்லாஹ் கழற்றி எடுத்துவிட்டு, உங்கள் உள்ளங்களிலே 'வஹ்ன்' எனும் சிந்தனையைப் போட்டு விடுவான்' எனக் கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! 'வஹ்ன்' என்றால் என்ன?' என ஒரு மனிதர் கேட்க, 'உலகத்தை நேசிப்பதும், மரணத்தை வெறுப்பதும், என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்."

(அறிவிப்பவர்: தௌபான்(ரழி), ஆதாரம்: அபூதாவுத் - 4288)

இஸ்லாத்தின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிரிகள் அனைவரும் உள்ளக முரண்பாடுகள் தமக்குள் இருந்த போதிலும் தாம் பொது எதிரி மார்க்கமாகக் கருதும் தூய இஸ்லாத்தை அழித் தொழிக்க ஒன்றுபடுவார்கள் என்பதை நாம் விளக்கத்திற்காக எடுத்துக் கொண்ட இந்த ஹதீஸ் சுட்டிக்காட்டுகின்றது. அத்தோடு எண்ணிக்கைப் பலமிருந்தும் எதிர்க்கப் பலமிழந்த கோழைச் சமூகமாக இஸ்லாமிய சமூகம் மாறும் என்பதையும் அது தெரிவித்து, அதற்கான காரணத்தையும் தெளிவு படுத்துகின்றது.

உயிர் பறிப்பு, நில அபகரிப்பு, இராணுவப் படையெடுப்பு, பொருளாதாரச் சுரண்டல், வளச் சூறையாடல்கள், மத நிந்தனைகள், அபகீர்த்திகள்..... என இஸ்லாமும் முஸ்லிம்களும் இன்று உலகளாவிய அளவில் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வரும் அதே வேளை, மற்றொருபுறம் முஸ்லிம்களின் மூளைகள் மீதான எதிரிகளின் ஆக்கிரமிப்பும் பலமாகவே இருந்து வருகின்றது. இதனால் தான் பிற மத கலாச்சாரங்களின் தாக்கங்களையும், இஸ்லாத்திற்கு முரணான காரியங்களையும் முஸ்லிம்களின் அனைத்து விடயங்களிலும் தாராளமாக இன்று காணக் கிடைக்கின்றது. இவை அனைத்திற்கும் பின்னால் ஒழிந்து கொண்டு கச்சிதமாகக் காரியமாற்றுவதில் கணிசமான பங்கை வகித்து வருவது யூத மதத்தின் "ஸியோனிசம்" என்பது எம்மில் பலருக்குத் தெரியாதிருக்கலாம். இஸ்லாமிய எதிர்ப்புணர்வைத் தூண்டும், விதைக்கும் கொள்கை கொண்ட எதிரி சமூகங்கள் குறித்து அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

"நம்பிக்கை கொண்டோருக்கு மனிதர்களில் கடும் பகைவர்களாக யூதர்களையும், இணைவைத்தோரையும் நிச்சயமாக நீர் கண்டு கொள்வீர். மேலும், அவர்களில் 'நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்கள்' என்று கூறுபவர்கள் நம்பிக்கை கொண்டோருக்கு மிக நெருங்கிய நேசத்திற்குரியவர்களாக நீர் கண்டுகொள்வீர். ஏனெனில், பாதிரிகளும், துறவிகளும் அவர்களில் இருப்பதே இதற்குக் காரணமாகும். இன்னும் நிச்சயமாக அவர்கள் பெருமையடிக்கமாட்டார்கள்."

(5:82)

"வேதத்தையுடையோரில் அதிகமானோர் சத்தியம் தங்களுக்குத் தெளிவான பின்னரும் தங்கள் மனதில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை காரணமாக, நீங்கள் நம்பிக்கை கொண்ட பின்னரும் உங்களை நிராகரிப்பாளர்களாக மாற்ற வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். எனினும், அல்லாஹ் தனது கட்டளையைக் கொண்டு வரும் வரை (அவர்களது இச்செயலை) மன்னித்து விடுங்கள்; பொருட்படுத்தாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் பேராற்றல் உடையவனாவான்."

(2:109)

ஊடக சக்திகள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டிக் கொண்டு இஸ்லாமிய எதிர்ப்புணர்வுப் பிரச்சாரம் எதிரிகளால் மேற்கொள்ளப்படினும் மக்கள் மனங்களை வென்று எழுந்து நிற்கும் சக்தியாக அபரிமிதமான வளர்ச்சியை நோக்கி இஸ்லாம் இன்று பயணித்துக் கொண்டிருக்கின்றது. "உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் மார்க்கங்களில் இஸ்லாம் முன்னிலை வகிக்கின்றது; வருடாந்தம் இலட்சக் கணக்கானோர் இஸ்லாத்தில் இணைகின்றனர். யூத, கிறிஸ்தவ மற்றும் பிற மதத்தினரில் பெரும்பாலானோர் மிகக் குறுகிய காலத்துக்குள் இஸ்லாத்திடம் போய் சேர்ந்து கொள்வர்" என கிறிஸ்தவர்களின் தலைமை பீடம் அச்சம் கொள்ளும் அளவுக்கு இஸ்லாம் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

இஸ்லாத்தை அழிக்கத் துடிக்கும் நாடுகளில் முன்னிலை வகிக்கும் அமெரிக்கா உட்பட சீனா, ஜப்பான், பிரான்ஸ், பிரேஸில், பெல்ஜியம், டென்மார்க், சுவீடன், ஆஸ்த்திரியா, கனடா, இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் என அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையாத, நாகரிகமடைந்த, நாகரிகமடையாத நாடுகள் என பட்டிதொட்டியெங்கும் கட்டாய மதமாற்றமின்றி விரும்பிய மன மாற்றத்தோடு இஸ்லாம் படு வேகமாகப் பரவி வருகின்றது.

உலக முஸ்லிம்களின் சனத்தொகை இன்று 160 கோடியையும் தாண்டிவிட்டது என்ற விடயம் இதை உண்மைப் படுத்துகின்றது. இன்னும் சில ஆண்டுகளுக்குள் பிற சமூகத்தாரின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் சில ஐரோப்பிய நாடுகள் கூட இஸ்லாத்திடம் சரணடைந்து விடும் என எதிர்வு கூறப்படும் அளவுக்கு இஸ்லாத்தின் எழுச்சி மேலோங்கி இருக்கின்றது. **"அந்நேரம் நீங்கள் எண்ணிக்கை கூடியவர்களாக இருப்பீர்கள்"** என்ற நாம் விளக்க முற்பட்டிருக்கும் ஹதீஸின் வாசகம் இதை நன்றாகவே உறுதிப் படுத்துகின்றது.

## ஆட்பலம் இருந்தும் அடிவாங்கும் சமூகமானோம்! ஏன்?

ஆட்பலம், ஆயுத பலம் இன்னும் பெற்றோலிய வளம், கடல் வளம், கல்வி வளம் என பலவாறான வளங்களையும் பலங்களாகப் பெற்றுள்ள முஸ்லிம் நாடுகளில் வாழும் முஸ்லிம்களின் நிலை இன்று பரிதாபமாகவே இருக்கின்றது. தம் நாட்டு வளங்களைச் சூறையாடி, இஸ்லாத்தைப் பந்தாடத் துடிக்கும் கயவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த சில அறபுத் தலைவர்கள், முஸ்லிம் நாடுகளின் தலைவர்களின் செயற்பாட்டின் பின்னால் மறைந்திருப்பது சுயநலமும், சுகபோக வாழ்க்கையுமே என்பதை நாம் மறுக்க முடியாது.

சுயநல அரசியலும், சுகபோக வாழ்க்கையும் போதையாக தலைக்கேறி இருக்கின்ற காரணத்தினால்தான் 51 முஸ்லிம் நாடுகளும் ஒன்றுபட்டு உலக முஸ்லிம்களின் அவலங்களுக்குக் குரல் கொடுத்து அவர்களது உரிமைகளை வென்றெடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம். ஆட்பலம் இருந்தும் அடிவாங்கும் சமூகமானோமே இதனால்தான்!

**"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! பிளவுபட்டால் உண்டு சாவு!"** என்ற விடயம் நாம் இங்கு கட்டாயம் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். **"வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போன்று நீங்கள் இருப்பீர்கள்!"** என்ற ஹதீஸின் இந்த வாசகம் இஸ்லாமிய சமூகம் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தைத்தான் சுட்டிக் காட்டுகின்றது. அல்குர்ஆன் இவ்விடயம் குறித்து அழகாகச் சொல்கின்றது.

"மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். உங்களுக்குள் முரண்பட்டுக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின், நீங்கள் துணிவிழந்து, உங்கள் பலமும் இல்லாமல் போய்விடும். பொறுமையாக இருங்கள், நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்."

(8:46)

## பிளவுபட்டிருக்கும் பெரும்பான்மையை விட, ஒன்றுபட்டிருக்கும் சிறுபான்மையே பலமிக்கது!

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நாடுகளிலேயே அவர்களுக்கு பல வழிகளிலும் ஆபத்தும், அழிவும் என்றால் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்ச்சியும், பொறாமையும் கொண்ட எதிரிகளைப் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையாகக் கொண்ட நாடுகளில் வாழும் சிறுபான்மையின முஸ்லிம்களுக்கு ஆபத்து அதிகமாகவே இருக்கும். "பொதுபலசேனா". அமைப்பின் அண்மைக்கால செயற்பாடுகளைப் பார்க்கும் போது எமது நாடும் இதற்கு நல்ல உதாரணமாகும். வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போன்று, சவால்களை எதிர்க்கத் துணிவற்ற பலவீனர்களாக நாம் ஆகாதிருக்க முரண்பாடுகள் களைந்து, காழ்ப்புணர்வுகளை மறந்து இதய சுத்தியுடன் நாம் ஒன்றுபட வேண்டிய தேவை இருந்து கொண்டிருக்கின்றது.

இஸ்லாத்தையும் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களையும் இழிவுபடுத்தி, இனச் சுத்திகரிப்பொன்றின் மூலம் இன்னொரு மியன்மாராக இந்நாட்டை மாற்றத் துடிக்கும் துவேஷம் கக்கும் இனவாத பௌத்த அமைப்பொன்றே இந்த "பொதுபலசேனா" உலகம் முழுவதிலுமுள்ள சியோனிஸ சக்திகளின் சதிவலையில் சிக்கியுள்ள ஒரு சிறு கூட்டமே இந்த முஸ்லிம் எதிர்ப்பு அமைப்பு! எனினும் விலாசமற்றிருந்த இவர்களுக்கு முஸ்லிம் துவேஷப் பிரச்சாரத்தின் மூலம் இன்று விலாசம் கிடைத்திருக்கின்றது. உருவாக்கப்பட்டு ஒரு வருடம் கூட பூர்த்தியாகாத இந்த அமைப்பு, எமது பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுடன் தனது முஸ்லிம் எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தது. பின்னர் முஸ்லிம் வியாபாரத் தளங்கள் மீதான தாக்குதல்கள், எதிர்ப்புப் பேரணிகள், எமது உணர்வைப் புண்படுத்தும்படியான அவதூறுகளையும், பொய்களையும் உள்ளடக்கிய கீழ்த்தரமான துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஹலால் சான்றிதழ் எதிர்ப்பு நடவடிக்கை.... என தமது பணியை விஸ்தரித்து தற்போது எமது பெண்களின் கற்புக்குக் கவசமாகவும், பாதுகாப்பு அரணாகவும் மிளிரும் சின்னமான ஹிஜாபுக்கு எதிரான போராட்ட அறிவிப்போடு தனியான அலுவலகம் ஒன்றையும் பெற்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கேதான் எமது பலம் குறித்தும், பலவீனம் குறித்தும் நாம் அதிகக் கவனக் குவிப்பு செய்ய வேண்டியுள்ளது.

உலகில் 160 கோடியையும் தாண்டிவிட்ட அதிக எண்ணிக்கை கொண்ட முஸ்லிம்களை வெறும் ஒரு கோடி நாட்பது இலட்சம் (1400000) சனத்தொகையைக் கொண்ட யூதர்கள் நசுக்குகின்றார்கள் என்றால், சிறுபான்மையினரான அவர்கள் ஒன்றுபட்டு பெரும்பான்மையினரான நாம் பிளவுபட்டிருப்பதும் ஒரு காரணம் என்பதை மறக்கலாகாது. அரசியல், பொருளாதாரம், ஊடகம், தொழிநுட்பம் என அனைத்தையும் தமது ஆளுகைக்கு உட்படுத்தி எம்மை அவர்கள் அடிமைப்படுத்தி ஆண்டு வருகின்றனர். சிறுபான்மையினராக இந்நாட்டில் வாழும் நாம் ஆழமாகவும் அவசரமாகவும் சிந்திக்க வேண்டிய விடயம் இது!

சிறுபான்மையினராக இருந்த நாம் ஒன்றுபட்டு பெரும்பான்மையினராக இருந்த எதிரிகளோடு போராடி வெற்றி பெற்ற பல சம்பவங்களை இஸ்லாமிய வரலாறு பதிவு செய்து வைத்திருக்கின்றது. ஆட்பலத்திலும், ஆயுத பலத்திலும் மிகைத்திருந்த பெரும்பான்மை எதிரிகளை சிறுபான்மை முஸ்லிம் படையணி "பத்ர்" களத்தில் வெற்றி கொண்டது. தமக்குள் இருந்த உள் முரண்பாடுகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு எதிர்க் குழுக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தாம் பொது எதிரியாகக் கருதும் இஸ்லாத்தை எதிர்க்கத் திரண்டு வந்தார்கள் "அஹ்ஸாப்" போரில். இப் போரிலும் சிறுபான்மையினராக இருந்த முஸ்லிம்களே வெற்றி பெற்றார்கள். "இதன் பின்னர் இடம் பெற்ற பல போராட்டங்களிலும் முஸ்லிம் களுக்கு வெற்றியே கிடைத்தது. இவ் வெற்றிகளுக்குப் பின்னால் இறையுதவியும், சிறுபான்மையினராக இருந்தும் அவர்கள் முரண்படாது ஒன்று பட்டதுமே இரகசியம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதிலிருந்து நாம் படிப்பினை பெறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமக்கெதிராக முடுக்கிவிடப்பட்டிருக்கும் தற்போதைய அசாதாரண நிலை குறித்து நாம் கவனமாக யோசித்து செயற்பட வேண்டி இருக்கின்றது.

- பொதுபலசேனா அமைப்பின் தீவிரச் செயற்பாடு கொள்கை, அரசியல் என அனைத்திலும் முரண்பட்டு பிரிந்து போயுள்ள சிறுபான்மையினரான எம்மை அவசரமாக ஒன்றுபட அழைக்கின்றது.
- அரசியல் தலைமைத்துவத்தில் அநாதையாகியிருக்கும் எம்மை ஆன்மீகத் தலைமைத்துவத்திலாவது ஒன்றுபடுமாறு வேண்டுகின்றது.
- அத்தோடு, அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைமைத்துவங்களினூடாக எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளை வென்றெடுக்கும் அவசியத்தை உணர்த்துகிறது.

- எமது நிலை குறித்து சர்வதேச அளவில் பேசப்படும் அளவுக்குள்ள தனியான ஊடகத் தேவையின் முக்கியத்து வத்தையும் வேண்டி நிற்கின்றது.
- பிற சமூகங்களுடனான சக வாழ்வு குறித்து இன்னும் சற்று ஆழமாகச் சிந்திக்கச் சொல்கின்றது.
- கசப்புணர்வுகளையும் காழ்ப்புணர் வுகளையும் களைந்துவிட்டு, சமூகத்தின் பல்துறைசார் அறிஞர்களோடு பரஸ்பர கலந்துரையாடல்களில் ஈடுபட்டு சிறந்த தீர்வுகள் காண முற்படுமாறு வற்புறுத்துகின்றது.

## "ஹுப்புத் துன்யா"வும் "கராஹியதுல் மௌத்"தும்!

நாம் விளக்கத்திற்காக எடுத்துக் கொண்ட ஹதீஸின் இறுதிப் பகுதி, நாம் ஒன்று படுவதற்குத் தடையாகவும், வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போன்று சவால்களை முறியடிக்கத் திராணியற்ற பலவீனர்களாகவும் இருப்பதற்குமான காரணம் குறித்தும் பேசுகின்றது. அதுதான் "ஹுப்புத் துன்யா" (உலகை நேசித்தல்), "கராஹியதுல் மௌத்" (மரணத்தை வெறுத்தல்) ஆகிய இரு விடயங்களாகும். இவ்விடயங்களிலும் எம்மிடம் மாற்றமொன்று ஏற்படாத வரை எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வெறும் கனவாகத்தான் இருக்கும்.

எமது கொள்கை விதைப்புக் களமும் ஆரோக்கியமாக இல்லை. அங்கேயும் "ஹுப்புத் துன்யா"தான் கோலோச்சுகின்றது. கருத்தைக் கருத்தாலும், பரஸ்பர கலந்துரையாடல்களாலும் அணுகி தீர்வு காண்பதை விட்டுவிட்டு தனிநபர் மானம் போக்கும் கைங்கரியம் தாராளமாக இடம்பெறுகின்றது. உளத்தூய்மை அங்கு மருந்துக்கும் இல்லை. தனிநபர் வழிபாடு தலைக்கேறியதால் இஸ்லாமியப் பண்பாடுகளைப் பேச்சிலும் காணக் கிடைக்கவில்லை; எழுத்திலும் காணக் கிடைக்கவில்லை. கொள்கை விதைப்புக் களத்தில் இந்நோயைப் பரப்பிய விஷக் கிருமி இங்கு "ஹுப்புத் துன்யா" தவிர வேறு என்ன? "பொதுபலசேனா"விடம் சென்று எம்மைக் காட்டிக் கொடுத்துள்ள "அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல்"களைத் தூண்டியது "ஹுப்புத் துன்யா"தான். இசைக்கு இஸ்லாமிய சாயம் பூசவும், சில சுன்னாக்களை சில்லறைகள் என இழிவுபடுத்தவும், இஸ்லாமியக் கொள்கையை விட்டும் தடம் புரண்டு சென்ற சில அறிஞர்களையெல்லாம் இஸ்லாமிய எழுச்சியின் முன்னோடிகள்(?) எனக் காட்ட முனையும் சில இஸ்லாமிய த.்வா அமைப்புக்களுக்குப் பின்னால் இருப்பதும் "ஹுப்புத் துன்யா"வே!

"ஹுப்புத் துன்யா"வினால்தான் அரசியல் ரீதியாகவும் நாம் பிளவுபட்டிருக்கின்றோம். பண்பாட்டு வீழ்ச்சியை நோக்கியும் எமது சமூகம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. சமூக விரோதச் செயல்களை நோக்கி எமது இளைஞர் சமுதாயமே படையெடுத்துச் செல்கின்றது. வியாபாரத்திலும், கொடுக்கல் வாங்கல்களிலும் ஹராம், ஹலால் பேணப்படாத வாழ்க்கை முறை எம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான "ஹுப்புத் துன்யா"க்களைக் களைந்து, காரியத்தில் நாம் இறங்குகின்ற போதுதான் எழுந்து வரும் எமக்கு எதிரான சதிகளுக்கு நிமிர்ந்து நின்று முகம் கொடுக்க முடியும்.

உலகை நேசிக்கும் மனநிலை இருந்தால், மரணத்தை வெறுக்கும் போக்கு தானாக வரும். அப்போது மார்க்கத்துக்கு எதிரான சக்திகளுக்கு எதிராகப் போராடும் வேட்கையும், துணிவும் ஒரு போதும் ஏற்படாது. எனவேதான், "கராஹியதுல் மௌத்" (மரணத்தை வெறுத்தல்) என்ற எமது இரண்டாவது பலவீனம் குறித்து நபியவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

உலகத்தை நேசிக்காது, மறுமை விமோசனத்தின் மீது கொண்ட அதீத காதலினால் மரணத்தை விரும்பிய நல்லவர்கள், காரியத்தில் இறங்கியதால்தான் இஸ்லாம் அன்று வெற்றியை நோக்கிப் பயணித்தது. அப்பாதையில் நாமும் பயணிக்கும் போதுதான் வெற்றி எம் கைவசம்!

**எனவே, பகை மறப்போம்! ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகீதா இஸ்லாமிய்யா!

‡ பைரூஸ் ஸலபி ‡

# அல்லாஹ்வை ஈமான் கொள்ளல்.

ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் ஆறு விடயங்களைக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும். அவற்றில் எவையேனும் ஒன்றை மறுத்தாலும் அவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவனாகவே கருதப்படுவான். ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விடயங்களுமாவன:

1. அல்லாஹ்
2. மலக்குமார்கள்
3. வேதங்கள்
4. தூதர்கள்
5. மறுமை நாள்
6. விதி

இந்த விடயங்களை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம் :

1) கண்களால் பார்க்கக் கூடியவை
2) கண்களால் பார்க்க முடியாதவை (மறைமுகமானவை)

## அல்லாஹ்

**சொல் விளக்கம்:**

"அல்லாஹ்" என்பது ஒரு அரபு மொழிச் சொல்லாகும். இது اله (இலாஹ்) என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இதன் அர்த்தம் வணங்கத் தகுதியானவன் என்தபதாகும். இலாஹ் என்ற சொல்லின் முன்னால் அலிப், லாம் (ال) சேர்க்கப்பட்டுள்ளது. அது சேர்க்கப்பட்டதால் அல்லாஹ் (الله) என்று மாற்றம் பெற்றது.

"அல்லாஹ்" என்ற வார்த்தை உலகம் படைக்கப்பட்டது முதல் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வார்த்தையாகும். பொதுவாக இறைவன், கடவுள், தெய்வம் போன்ற சொற்களால் கடவுள்கள் அழைக்கப்பட்டாலும் மனிதன், சூரியன், சந்திரன், மரம், கல் போன்வற்றிற்கு இப்பெயர்களைப் பயன் படுத்துவதைப் பார்க்கலாம். ஆனால் அல்லாஹ் என்ற வார்த்தையின் தனிச் சிறப்பானது அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் இதுவரை காலமும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகும்!.

**அல்லாஹ் ஒருவனே!**

கடவுள் என்பவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். பல கடவுள்கள் இருக்க முடியாது என்பதை எமது சிந்தனைகளே ஒத்துக் கொள்கின்றன. எவ்வாறெனில், பல கடவுள்கள் இருக்கும்போது அக்கடவுள்களுக்கு மத்தியிலே பிரச்சினை வரும். உதாரணமாக, குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துக்கு மழையை இறக்க வேண்டும் என்று ஒரு கடவுள் நினைக்கின்றார். இன்னொரு கடவுள் அப்பிரதேசத்துக்கு வெயிலைத்தான் கொடுக்க வேண்டும் என நினைக்கின்றார். இப்போது இரு கடவுளர்களின் சிந்தனைகளும் வேறுபட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லப் போனால் இரு கடவுள்களும் நீயா? நானா? என்று சண்டை பிடிக்கக் கூடிய நிலமை வந்து விடும். எனவேதான் பல கடவுள்கள் இருப்பது சாத்தியமற்றது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

"(வானம், பூமி ஆகிய) இவ்விரண்டிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் இருந்திருப்பின் இவையிரண்டும் சீர் குலைந்திருக்கும். அர்ஷுடைய இரட்சகனாகிய அல்லாஹ் அவர்கள் வர்ணிப்பதை விட்டும் தூய்மையானவன்." *(21:22)*

"அல்லாஹ் (தனக்கென) பிள்ளையை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடன் வேறு எந்தக் கடவுளும் இல்லை. அவ்வாறாயின், ஒவ்வொரு கடவுளும் தான் படைத்தவற்றுடன் சென்று, சிலர் சிலரை மிகைத்திருப்பார்கள். அவர்கள் வர்ணிப்பதை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்." *(23:91)*

போன்ற வசனங்கள் பல கடவுள்கள் இருந்தால் பிரச்சினைகள் வரும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமற்றது என்பதைத் தெளிவு படுத்துகின்றன

இறைவன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். பலர் இருக்க முடியாது என்ற கொள்கையை இஸ்லாம் மாத்திரமே போதிக்கின்றது. ஏனைய மதங்களில் கடவுள் கொள்கை போதிக்கப்பட்டாலும், அம் மதங்களைப் பின்பற்றுவோர் சாத்தியமற்ற, சிந்தனைக்கு அப்பாற்பட்ட பல கடவுள்கள் உண்டு என்ற கோட்பாட்டையே பின்பற்றி வருகின்றனர்.

கடவுள் என்பது ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்பது பற்றி அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"உங்கள் வணக்கத்திற்குரியவன் ஒரே ஒரு இரட்சகனே! (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையவன்." *(2:163)*

"அல்லாஹ் ஒருவன்தான் என (நபியே!) நீர் கூறுவீராக!" *(112:1)*

எனவே கடவுளானது ஒன்றே. அவனுக்கு இணையாக யாரும் இல்லை. அப்படியிருந்தால் அவன் கடவுளாக முடியாது என்ற கோட்பாட்டை எமது உள்ளங்களில் ஆழமாக பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹ்வை எவ்வாறு ஒருமைப் படுத்துவது?:**

அல்லாஹ் ஒருவன், தனித்தவன், அவனுக்கு நிகர் யாருமில்லை என்பதைக் குறிக்க அரபியில் அத்தவ்ஹீத் التوحيد என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. "அத்தவ்ஹீத்" என்றால் ஒருமைப்படுத்துதல் என்பது அர்த்தம்.

தவ்ஹீதை மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம்.

1) தவ்ஹீத் அர்ருபூபிய்யா
2) தவ்ஹீத் அல்உலூஹிய்யா
3) தவ்ஹீத் அல்அஸ்மாஉ வஸ்ஸிபாத்

**தவ்ஹீத் அர்ருபூபிய்யா:**

இது படைத்தல், பரிபாலித்தல், உணவளித்தல், கண்காணித்தல் போன்ற செயற்பாடுகள் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. வேறு யாருக்கும் இல்லை என்று உறுதியாக நம்புவதைக் குறிக்கும். இக்கொள்கையை ஜாஹிலிய்யாக் காலத்தில் நபி(ﷺ) அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு முன் வாழ்ந்த எல்லாக் காபிர்களும் ஏற்றிருந்தனர். ஆனால், தவ்ஹீதின் அடுத்த அம்சங்களை மறுத்தனர். இதனால் நரகின் சொந்தக்காரரானார்கள் என்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**தவ்ஹீத் அல்உலூஹிய்யா:**

இது வணக்கம், பிரார்த்தனை அனைத்துக்கும் தகுதியானவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. அவனையன்றி வேறு யாருக்கும் வணக்க வழிபாடுகளைச் செலுத்தக் கூடாது. அவன் தான் வணங்கத் தகுதியானவன் என்று உறுதியாக நம்புவதாகும்.

**அல்அஸ்மாஉ அஸ்ஸிபாத் :**

இது அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்களும் பண்புகளும் உண்டு என்று அல்குர்ஆனிலும் அல் ஹதீஸிலும் வந்திருப்பதை கூட்டமால், குறைக்காமல் இடைச் செருகல் செய்யாமல் உறுதியாக நம்புவதைக் குறிக்கும்.

தவ்ஹீதின் இம்மூன்று பிரதான பிரிவுகளையும் உள்ளடக்கி, முழுமையாக ஈமான் கொள்வதன் மூலமாகவே அல்லாஹ்வை ஒருமைப்படுத்த முடியும். மாற்றமாக இம்மூன்று அம்சங்களில் ஒன்றை மறுத்தாலும் அவன் ஏகத்துவ வாதியாகக் கருதப்படமாட்டான்.

## அல்லாஹ்வுக்குத் தகுதியில்லாத பண்புகள்:

**1. அவன் தூங்க மாட்டான்:**

தூக்கம் என்ற பண்பு அல்லாஹ்வுக்கு இருக்க முடியாது. அப்படியிருந்தால் அவன் தூங்கிய பின் என்ன நடக்கும்? என்பதைப் பற்றி அறிய முடியாது. எனவே தூக்கம் என்ற பண்பு அல்லாஹ்வுக்கு இல்லை.

"(உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் என்றும் உயிருடன் இருப்பவன், நிலைத்திருப்பவன். சிறு தூக்கமோ, பெரும் தூக்கமோ அவனை ஆட்கொள்ளாது. வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடம் யார் தான் பரிந்துரை செய்ய முடியும்? (படைப் பினங்களான) அவர்களுக்கு முன் உள்ளவற்றையும் அவர்களுக்குப் பின் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் நாடியவற்றைத் தவிர, அவன் அறிந்திருப்பவற்றில் எதையும் அவர்களால் அறியமுடியாது. அவனது 'குர்ஸி' வானங்களையும் பூமியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்திருக்கின்றது. அவையிரண்டையும் பாதுகாப்பது அவனுக்கு சிரமமன்று. அவன் மிக உயர்ந்தவனும் மிக்க மகத்துவ மானவனுமாவான்." (2:255)

**2. அவன் சோர்வடையமாட்டான் :**

அல்லாஹ்வுக்கு தன் படைப்பினங் களைக் கண்காணிப்பதன் மூலமாக அல்லது படைப்பதன் மூலமாக எவ்வித சோர்வோ, களைப்போ அவனுக்கு ஏற்படாது.

"மூஸாவிடத்திலும் (அத்தாட்சி இருக்கின்றது.) நாம் அவரை பிர்அவ்னிடம் தெளிவான சான்றுடன் அனுப்பியபோது, அவன் தனது பலத்தின் காரணமாகப் புறக்கணித்து, '(இவர்) சூனியக்காரர் அல்லது பைத்தியக்காரர்' என்று கூறினான்." (51:38)

**3. மரணமடையமாட்டான் :**

படைப்பினங்களுக்கே உரிய பண்பான மரணம் என்பது அல்லாஹ்வுக்குக் கிடையாது. அவன் எப்போதும் உயிரோடு இருப்பவன்.

"மரணிக்காத, (என்றும்) உயிருடன் இருப்பவன் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பீராக! மேலும், அவனது புகழைக் கொண்டு துதிப்பீராக! தனது அடியார்களின் பாவங்களை மிக அறிந்திட அவன் போது மானவன்." (25:58)

**4. அவன் எதனையும் மறக்க மாட்டான் :**

மறதி என்ற பண்பு அல்லாஹ்வுக்குக் கிடையாது.

"அது குறித்த அறிவு என் இரட்சகனிடம் பதிவேட்டில் இருக்கின்றது. என் இரட்சகன் தவற விடவும் மாட்டான். மறந்து விடவும் மாட்டான் என அவர் கூறினார்." (20:52)

**5. அவனுக்குப் பசி, தாகம் ஏற்படாது:**

"நெருங்கக் கூடிய(மறுமையான)து நெருங்கி விட்டது. அல்லாஹ்வையன்றி அதை வெளிப்படுத்தக் கூடியவர் எவருமில்லை." (52:57-58)

**6. அவனுக்கு எந்தத் தேவையுமில்லை.**

"அல்லாஹ் (எவ்வித) தேவையுமற்றவன்." (112:02)

**7. அவனுக்கு மனைவியர் இல்லை.**

"நிச்சயமாக எமது இரட்சகனின் மகத்துவம் உயர்ந்து விட்டது. அவன் (தனக்கு) மனைவியையோ பிள்ளையையோ எடுத்துக் கொள்ளவில்லை." (72:03)

**8. அவனுக்குப் பிள்ளைகள் இல்லை.**

அல்லாஹ் ஈஸா(ﷺ) அவர்களை தந்தையின்றி தாயின் மூலமாக மாத்திரமே படைத்தான். இதனை வைத்து கிறிஸ்தவர்களில் ஒரு சாரார் ஈஸா(அலை) அவர்கள் அல்லாஹ்வின் மகன் என்று கூறுகின்றனர்.

தந்தையில்லாமல் பிறந்ததால் இயேசு இறைமகன் என்றால் தாய், தந்தையின்றிப் பிறந்த ஆதம்(ﷺ) அவர்களையும் இறைமகன் என்று கூறுவார்களா?

கிறிஸ்தவர்கள், ஈஸா(அலை) அல்லாஹ்வின் மகன் என்று கூறுவதை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்.

"எவர்கள் அறியாமை காரணமாகப் பாவம் செய்து, பின்பு விரைவாகவே மன்னிப்பும் தேடுகிறார்களோ அவர்களுக்கே அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு உண்டு. இவர்களுக்கே அல்லாஹ் பாவமன்னிப்பு வழங்குகின்றான். அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக்கின்றான்." (4:17)

யூதர்கள் உஸைர்(அலை) அவர்களை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர். இதுவும் வெறும் கற்பனையாகவே அவர்கள் குறிப்பிடுகின்றனர். அதேபோல் வானவர்கள் (மலக்குமார்கள்) அல்லாஹ்வுடைய பெண் மக்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் கூறக்கூடிய அனைத்து விடயங்களை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன் என்பதை பின்வரும் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

"அவர்களில் சிலர் மற்றும் சிலரை முன் னோக்கி விசாரித்துக் கொள்வார்கள். நிச்சயமாக, எனக்கு ஒரு நண்பன் இருந்தான் என அவர்களில் ஒருவர் கூறுவார். அவன், 'நிச்சயமாக நீ (மறுமையை) உண்மைப்படுத்துவோரில் ஒருவனா?' என்று கேட்பான். நாம் மரணித்து மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகிவிட்ட பின்னரும் நிச்சயமாக நாம் கூலி வழங்கப்படுவோமா? (என்றும் கேட்பான்.) நீங்கள் (அவனை), எட்டிப்பார்க்க விரும்புகிறீர்களா? என அவர் கேட்பார். அவர் எட்டிப்பார்க்கும் போது, நரகத்தின் மத்தியில் அவனைக் காண்பார். 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நீ என்னை அழித்துவிட முற்பட்டாய்' என்று கூறுவார். என் இரட்சகனின் அருள் இல்லையென் றால் (இவ்வேதனைக்கு) முற்படுத்தப் பட்டோரில் நானும் இருந்திருப்பேன் என்று கூறினார்." (37:150-157)

இந்த வகையில், அல்குர்ஆனும் சுன்னாவும் விலக்குவது போலவே அல்லாஹ்வை ஈமான் கொண்டு உண்மை முஸ்லிமாக மாற முயற்சிப்போம்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பாளர்களுக்கு! கொள்கைத் தெளிவு பெறுங்கள்!

**சத்தியத்தை மக்கள் ஏற்கத் தயங்கினால் மக்கள் மத்தியில் சத்தியம் பரவாமல் தடுக்கும் சத்தானிய வேலைக்குத் துணை போனவர்களாக நாம் ஆகிவிடுவோம் என்ற அச்சம் ஏன் தாயிகளிடமிருந்து எடுபட்டுப் போனது?**

இஸ்லாத்தின் பால், சத்தியத்தின் பால் மக்களை அழைக்க வேண்டும் என பலரும் ஆர்வம் கொள்கின்றனர். அல்ஹம்துலில்லாஹ்! இது பாராட்டத்தக்க பண்புதான். த஼ஃவா என்பது குர்ஆனையும் சுன்னாவையும் அடுத்தவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, நபி(ﷺ) வாழ்ந்து காட்டிய அடிப்படையில் மக்களை வாழப் பழக்குவதாகும். இது மகத்தான பணியாகும். இந்தப் பணியை அல்லாஹ்வுக்குச் செய்யும் உதவியாக குர்ஆன் சிறப்பித்துக் கூறுகின்றது.

இருப்பினும் அனேகமான தாஈகள் அடுத்தவர்களுக்கு இஸ்லாத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்; தஃவா செய்ய வேண்டும் என்பதில் காட்டும் ஆர்வத்தில் பத்து சதவீதம் கூட தஃவாவை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிந்து அதனடிப்படையில் மேற்கொள்வதற்கு வழங்குவதில்லை. தஃவா செய்யும் போது நபி(ﷺ) அவர்கள் கடைப்பிடித்த போக்கு எத்தகையது என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதுமில்லை. நபி(ﷺ) அவர்களது முன்மாதிரிப் பிரகாரம் தஃவாவை முன்னெடுப்பதுமில்லை. அவ்வப்போது தமக்கு ஏற்படும் உணர்வுகளுக்கு ஏற்ப தஃவா செய்கின்றனர். இதுதான் இன்று முஸ்லிம் சமூகத்தில் இருக்கும் மிகப் பெரிய குழப்பமாகத் தெரிகின்றது.

அதிகமான வைத்தியர்களே நோயாளிகளாக இருக்கின்றனர். சிலர் நோயைத் தெரியாமல் மருந்து கொடுக்கின்றனர். சிலருக்கு நோய் தெரிகின்றது; மருந்து தெரிவதில்லை. மற்றும் பலரும் தப்பிப்பதற்காக மருந்தைக் கொடுக்கின்றனர். சிலர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய பெரிய பெரிய நோய்களுக்கெல்லாம் பனடோலையும் டிஸ்பிரீனையும் கொடுத்து சமாளிக்கின்றனர். அதற்கெல்லாம் பல வைத்தியர்களே நோய்காரர்களாகத் திரிகின்றனர். இப்படியான இந்தக் களத்தில் எண்ணற்ற குழப்பங்கள், குளறுபடிகள், குற்றம் குறைகள் என குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. எனவே, அழைப்பாளர் களுக்கு என்ற இந்த மகுடத்தில் சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகின்றேன்.

**“உங்களில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் நினைவு கூருவோருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் நிச்சயமாக அழகிய முன் மாதிரி இருக்கின்றது.”** (33:21)

இந்த திருமறை வசனம் நபி(ﷺ) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருப்பதாகக் கூறுகின்றது. நபி(ﷺ) அவர்களது பணியான தஃவாவைச் செய்கின்றவர்கள் நபி(ﷺ) அவர்களது முன் மாதிரியை விட்டு விட்டு அந்தப் பணியைச் செய்ய முடியுமா? அப்படிச் செய்தால் அவர்கள் மறுமையில் அல்லாஹ்வின் சந்திப்பை ஆசை கொள்பவர்களாக இருக்க முடியுமா?

## மென்மையான போக்கு:

**“யூதர்கள் நபி(ﷺ) அவர்களிடம் வந்து ‘அஸ்ஸாமு அலைக்கும்’ (உங்கள் மீது மரணம் உண்டாகட்டும்) என (ஸலாம் கூறுவது போல் நடித்துக்) கூறினர். அதற்கு நபி(ﷺ) அவர்கள் ‘உங்கள் மீதும்’ என்றார்கள். இது கேட்ட ஆயிஷா (ரழி) அவர்கள் உங்கள் மீதுதான் அல்லாஹ்வின் சாபமும், கோபமும் உண்டாகட்டும் எனக் கடிந்து கொண்டார்கள். அப்போது நபி(ﷺ) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களைப் பார்த்து ஆயிஷாவே! மென்மையாக நடந்துகொள் எனக் கண்டித்தார்கள். கெட்ட வார்த்தை பேசுவதும், கடுமையாக நடந்து கொள்வதும் கூடாது என்று கூறினார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள், அவர்கள் என்ன சொன்னார்கள் என்று நீங்கள் கேட்கவில்லையா என்றதும் “நபியவர்கள் நான் என்ன சொன்னேன் என்று நீ கேட்கவில்லையா? என்று திருப்பிக் கேட்டார்கள்.”** (அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி), ஆதாரம்: புஹாரி-6024, 6030,6256 முஸ்லிம்: 11, 2165)

யூதர்கள் ஒரு நாட்டின் தலைவரிடம் வந்து அதுவும் அவர் மனைவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையிலேயே இப்படி அநாகரீகமாக நடந்தும் கூட நபி(ஸல்) அவர்கள் யூதர்களின் தரத்துக்குத் தாழ்ந்து செல்லவில்லை என்பது ஆழ்ந்து அவதானிக்கத்தக்கதாகும். இஸ்லாம் மென்மையான போக்கை எவ்வளவு அழுத்தமாக வலியுறுத்துகின்றது என்பதற்கு இது தெளிவான சான்றாகும்.

இன்றைய த..வாக் களத்தில் யார் அடுத்தவர்களை அதிகமாகக் கண்டித்துப் பேசுகின்றாரோ, கிண்டலடித்துப் பேசுகின்றாரோ, கடுமையான தொணியில் எச்சரிக்கின்றாரோ அவர்தான் கொள்கை வாதியாகவும் கொள்கைப் பிடிப்புள்ளவராகவும் பார்க்கப் படுகின்றார்.

மென்மையாக த..வா செய்ய வேண்டும் எனப் பிரச்சாரம் செய்பவர்களும் தமது அமைப்புக்கு ஆபத்து என்றால் ஆக்ரோஷமடைந்துவிடுகின்றனர். அடிதடியில் இறங்கிவிடுகின்றனர். ஆழ்ந்த அவதானம், தூர நோக்கு என்றெல்லாம் பேசுபவர்களும் அடுத்த சமூகத்திற்குக் காட்டிக் கொடுக்கின்றனர்; மூட்டி விடுகின்றனர் என்றால் த..வாக் களத்தில் நபி(ஸல்) அவர்களின் அழகிய வழிமுறை முற்று முழுதாகப் புறக்கணிக்கப்படுவதைக் காணலாம். மருந்துக்குப் பதிலாக விஷத்தை வைத்தியர்கள் கொடுத்து வந்தால் எப்படி சமூக நோய்கள் குறையும்? மறையும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**"நபி(ஸல்) அவர்கள் ஏசுபவராகவோ, கெட்ட வார்த்தைகளைப் பேசுபவர்களாகவோ, சபிப்பவராகவோ, இருக்கவில்லை."**

*அறிவிப்பவர்: அனஸ்(ரழி),*
*ஆதாரம்: புஹாரி-6031*

கெட்ட வார்த்தைகளைப் பேசுவது, திட்டுவது, சபிப்பது என்பது நபி வழி அல்ல எனும் போது இந்த வழிமுறை மூலம்தான் நான் த..வா செய்வேன் என்று கூறுபவர்கள் எப்படி நபி(ஸல்) அவர்களின் தூய பணியான த..வாவைச் செய்யும் தாயிகளாக இருக்க முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

நபி(ஸல்) அவர்கள் நன்மையை ஏவுவதாக இருந்தாலும் தீமையைத் தடுப்பதாக இருந்தாலும் நிதானமான போக்கைக் கைக்கொண்டுள்ளார்கள். முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்பதில் கரிசனை காட்டியுள்ளார்கள். தனது உணர்ச்சிகளைக் கொப்பளிக்க வேண்டும் என்றோ, கோபத்தில் கொந்தளிக்க வேண்டும் என்றோ அவர்கள் எண்ணியதில்லை.

காட்டறபி ஒருவர் மஸ்ஜிதுன் நபவியில் வந்து சிறுநீர் கழிக்கின்றார். இதைக் கண்ட நபித்தோழர்கள் கோபம் கொண்டு அவரை விரட்ட முற்படுகின்றனர். அவரை விரட்டாதீர்கள்! அவர் சிறுநீர் கழித்த இடத்தில் ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடுங்கள் என்று கூறுகின்றார்கள். அறிவீனம் காரணமாக இப்படி நடந்து கொண்டவரை அழைத்து அமைதியாக இது மஸ்ஜித்; இதில் நாம் அல்லாஹ்வைத் தொழுவோம்; திக்ர் செய்வோம்; இப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்று அறிவுரை கூறினார்கள்.

நபித்தோழர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது, மென்மையாக நடந்து கொள்ள வேண்டும் என அறிவுரை கூறுகின்றார்கள். அவர் சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கும் முன்னர் இதைக் கண்டிருந்தால் உடனே தடுத்திருக்கலாம். கழிக்க ஆரம்பித்த பின்னர் இடையில் விரட்ட முடியாது! அப்படி விரட்டினால் அது அவரையும் பாதிக்கும்; சிறுநீர் முழு மஸ்ஜிதிலும் பட்டு மஸ்ஜிதையும் பாதிக்கும். எனவே, தவறு நடந்துவிட்டால் அதற்கான பரிகாரம் காண்பதுதான் முக்கியம். தவறைச் செய்தவர் அறிவீனத்தின் காரணமாக அதைச் செய்திருந்தால் அது தவறு என மென்மையாக அவருக்குக் கற்றுக் கொடுப்பதுதான் சுன்னாவாகும். த..வாக் களத்தில் இந்த சுன்னாவெல்லாம் முதுகுக்குப் பின்னால் வீசியெறியப்பட்டுள்ளமை வேதனை தரும் அம்சமாகும்.

ஆரம்ப காலத்தில் தொழுகையில் ஒருவர் மற்றவருக்கு ஸலாம் கூறிக் கொள்வர். பின்னர் தொழுகையில் இது போன்ற நடவடிக்கைகள் தடுக்கப்பட்டன. இதனை முஆவியத்திப்னுல் ஹகம் என்ற நபித்தோழர் அறியாதிருந்தார். இவர் தனக்கு நடந்த ஒரு அனுபவத்தை இப்படிக் கூறுகின்றார்.

**"ஒரு நாள் நான் நபி(ஸல்) அவர்களுடன் தொழுது கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் தும்மினார். நான் 'யர்ஹமுகல்லாஹ்' என்று கூறினேன். மக்கள் என்னைக் கோபத்துடன் பார்த்தனர். என்ன எல்லோரும் என்னைப் பார்க்கின்றீர்கள் என்று நான் கேட்டேன். அவர்கள் தமது தொடையில் அடித்து என்னை அமைதியாக**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கச் சொன்னார்கள். நானும் அமைதியாக இருந்தேன். தொழுகை முடிந்தது. நபியவர்களை விட அழகிய முறையில் கற்றுத் தரும் ஒரு ஆசிரியரை அவருக்கு முன்னரோ, பின்னரோ நான் கண்டதில்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் எனக்கு அடிக்கவில்லை; ஏசவில்லை; என்னை வெறுக்கவில்லை. தொழுகையில் மனிதர்களுடன் தொடர்புபட்ட எந்தப் பேச்சும் பேசக் கூடாது! இதில் தக்பீர் சொல்லுதல், தஸ்பீஹ் சொல்லுதல், குர்ஆனை ஓதுதல் போன்றவையே இடம்பெற வேண்டும் எனக் கூறினார்கள்."

(முஸ்லிம்: 33, 537, நஸாஈ: 1218)

நபி(ﷺ) அவர்களுக்கு இந்த மனிதன் இனி இந்தத் தவறைச் செய்யக் கூடாது என்பதுதான் நோக்கம். இதைக் கண்டித்தும் செய்யலாம்; கனிவாகக் கற்றுக் கொடுத்தும் செய்யலாம். ஆனால், ஒரு தனிப்பட்ட நபரிடம் காணப்பட்ட ஒரு நடைமுறைப் பிரச்சினைக்காகத் தனியான ஒரு ஜும்ஆக் குத்பாவையே பயன்படுத்திக் கண்டித்து சாதனை படைக்க விரும்புகின்றனர் சில தாஈக்கள்.

நபி(ﷺ) அவர்கள் சில வேளைகளில் தவறுகளைக் கண்டிக்கும் போது தனி நபர்களைப் பாதிக்காத வழிமுறைகளில் வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள். இப்படி இப்படியெல்லம் செய்யும் கூட்டத்தினருக்கு என்ன நடந்துவிட்டது எனப் பொதுப்படையாகக் கேட்பார்கள்.

"தொழுகையில் தமது பார்வையை மேல் நோக்கி உயர்த்தும் கூட்டத்தினருக்கு என்ன நேர்ந்துவிட்டது? அவர்கள் இதை விட்டு விடட்டும் அல்லது அவர்களது பார்வை பறிக்கப்பட்டு விடட்டும் என்று கூறினார்கள்." (புஹாரி:750)

நபரைக் குறிப்பிடாமல் இப்படிச் செய்பவர்கள், அப்படிச் செய்பவர்கள் என்று கண்டித்துள்ளார்கள்.

எது எப்படி இருப்பினும் ஒரு தாஈ தனது த.்.வாப் பணிக்குத் தனது நடவடிக்கை பாதிப்பாக அமைந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். இதுவும் த.்.வாவில் நபி(ﷺ) அவர்கள் கடைப்பிடித்த சுன்னாதான் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

"நபி(ﷺ) அவர்கள் ஒரு பங்கீட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்போது ஒரு முனாபிக் 'முஹம்மதே! நீதமாய்ப் பங்கு வைப்பீராக!' என்று கூறுகின்றார். நபி(ﷺ) அவர்கள் 'நான் நீதமாக நடந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார்தான் நீதமாக நடந்து கொள்வார்கள்!' என்று கேட்டார்கள். உடனே உமர்(ரழி) அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரே! அனுமதி தாருங்கள், இந்த முனாபிக்கைக் கொன்று விடுகின்றேன்' என்று கேட்டார்கள். அதற்கு நபி(ﷺ) அவர்கள் 'நான் எனது தோழர்களைக் கொலை செய்கின்றேன் என மக்கள் கதைப்பதை விட்டும் அல்லாஹ்தான் பாதுகாக்க வேண்டும் என்று கூறினார்கள்." (அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், ஆதாரம்: முஸ்லிம் - 142, 1063, 2496)

அவன் கொல்லப்பட வேண்டியவன் தான். அவனைக் கொன்றால் நபி(ﷺ) அவர்கள் தனது தோழர்களையே கொன்றுவிடுவதாக தகவல் பரவி விடும். இதனால் இஸ்லாத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும் வீதம் குறைந்து விடும். த.்.வாவுக்குப் பாதிப்பு ஏற்படும். இஸ்லாத்தை ஏற்றால் காபிர்களும் எம்மைக் கொல்வார்கள் அதனால் எமக்குப் பாதுகாப்பு இல்லை என்று மக்கள் எண்ண ஆரம்பித்து விட்டால் இஸ்லாத்தின் வளர்ச்சியே பாதிக்கப் பட்டு விடும் என்பதால் நபி(ﷺ) அவர்கள் இத்தகையவர்களைக் கொலை செய்வதைத் தவிர்த்தார்கள்.

எமது பிரச்சார நடவடிக்கையால், அவதூறுகளால், பொய்க் குற்றச்சாட்டுக்களால், மொட்டைக் கடிதம், அனோமோதய துண்டுப் பிரசுரங்களால் அவர்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டு சாகின்றார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு சத்தியத்தை மக்கள் ஏற்கத் தயங்கினால் மக்கள் மத்தியில் சத்தியம் பரவாமல் தடுக்கும் சாத்தானிய வேலைக்குத் துணை போனவர்களாக நாம் ஆகிவிடுவோம் என்ற அச்சம் ஏன் தாஈக்களிடமிருந்து எடுபட்டுப் போனது?.....

புதுப்பொலிவுடன் இணையத்தில் உலாவரும் எமது இணையதளம்.

www.jasm.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரம் பேசுது!

## நிரூபனமாகும் அறிவியல் உண்மை

M.U.M. முஆத் - (வரகாபொல)

உலக மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் இறைத்தூதர்களை அனுப்பும் போதெல்லாம் அற்புதங்களையும் வழங்கியுள்ளான். இந்த வகையில் தூதுவர் மூஸா(عليه السلام) அவர்கள், சூனியம் கொடிகட்டிப் பறந்த காலத்தில், சூனியத்தையும் மிகைத்த அற்புதத்துடன் அனுப்பப்பட்டார்கள். ஈஸா(عليه السلام) அவர்கள் மருத்துவ சமூகத்தினரிடம் குஷ்டரோகம், பிறவிக் குருடு போன்ற நோய்களுக்கு சுகம் கொடுக்கும் அற்புதத்தோடு அனுப்பப்பட்டார்கள். அதே போன்றுதான் இலக்கணம், இலக்கியம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற அறிவியல் சமூகத்தை மிகைக்கக்கூடிய திருக்குர்ஆனுடன் நபி முஹம்மத்(ﷺ) அவர்கள் இப்பாருக்குத் தூதுத்துவ முத்திரையாக அனுப்பப்பட்டார்கள்.

அறிவியல் ஊற்றாக வந்த இந்த குர்ஆன் அன்று முதல் இன்று வரை அனைத்துத் துறைகளிலும் சாதனைகளை நிகழ்த்தி, ஏக இறைவனிடமிருந்து வந்த வேதம், வழிகாட்டி என்பதனை நிரூபித்து வருகின்றது.

அந்த வரிசையில் நிகழ்த்திய சாதனையொன்றுதான் நவீன 21ஆம் நூற்றாண்டான இந்த நூற்றாண்டில் "வில்லியம் பார்வன்" என்ற ஜேர்மனிய அறிஞரின் தலைமையிலான குழு கண்டுபிடித்து நிரூபித்துக் காட்டிய விஞ்ஞான உண்மையாகும்.

கொடிகளும் தாவரங்களும் ஒன்றுடன் ஒன்று கதைத்துக் கொள்கின்றனவா? என்று ஆராய, வில்லியம் பார்வன் என்ற ஜேர்மனிய விரிவுரையாளரின் தலைமையில் ஒரு குழு ஒன்றினால் ஆய்வொன்று மேற் கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் விளைவாக தாவரங்களின் ஆணி வேரிலிருந்து ஒரு வகையான ஒலி வெளிப்பட்டு, அது அதன் கிளைகளை அடைந்து ஒலிவெளியாகின்றது என்று அறிந்து கொண்டனர். பின்பு அவர்கள் தாவரங்களிலிருந்து வெளியாகும் ஓசையின் யதார்த்தத்தைத் தெளிவுபடுத்துமாறு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் அதற்குத் தெளிவு கூற முற்படவில்லை என்பது ஒரு புறமிருக்க, அப்படியான எந்தவொரு ஒலியும் தாவரங்களுக்கு இல்லை என்று கடுமையாக மறுத்தும் விட்டனர்.

பின்பு அந்தக் குழு மீண்டும் இரண்டாவது தடவையாக பிரித்தானிய விரிவுரையாளர்களுடன் தமது ஆய்வைச் செய்துபார்த்தனர். மிகவும் நுட்பமான கமரா மூலம் நடந்த அந்த ஆய்வின் ஐந்தாம் நாளன்று தாவரங்களிலிருந்து வெளியாகிய ஒலி அவர்களை ஆச்சரியத்தின் எல்லைக்கே இட்டுச்சென்றது. அந்த ஆய்வுக்குழுவின் தலைவரான வில்லியம் பார்வனை ஷஹாதத் கலிமா சொல்ல ஆர்வமூட்டியது. அதுதான் "**அல்லாஹ் அல்லாஹ்....**" என்ற திக்ர் முழக்கத்தின் தெளிவான ஓசையாகும்.

அப்போது அக்குழுவில் இருந்த இந்திய வம்சாவழியைச் சேர்ந்த பிரித்தானிய முஸ்லிம், அந்த அறிஞர் குழுவைப் பார்த்து இவ்வாறு கூறினார். "தாவரங்களிலிருந்து வெளியாகும் ஒலிக்குரிய தெளிவான விளக்கவுரை 1400 வருடங்களாக எம்மிடம் இருக்கின்றது." அதைக் கேட்ட அனைவரும் அசந்து போய்விட்டனர். அந்தவிளக்கம் இறுதித் தூதருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட அற்புதமான அல்குர்ஆனின் 17 ஆவது அத்தியாயமான சூறா பனீஇஸ்ராயீலின் 44 ஆவது வசனமாகும். அது இவ்வாறு கூறுகிறது.

"ஏழு வானங்கள், பூமி மற்றும் அவற்றில் உள்ளவைகளும் அவனைத் துதிக்கின்றன. ஒவ்வொன்றும் அவனது புகழைக் கொண்டு துதித்த வண்ணமே இருக்கின்றன. எனினும், அவைகள் துதிப்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள். நிச்சயமாக அவன் சகிப்புத் தன்மையுடையவனாகவும் மிக்க மன்னிப்பவனாகவும் இருக்கிறான்." *(17:44)*

பின் இந்த ஆய்வின் முடிவாக கீழ்வருவன தீர்மானிக்கப்பட்டன.

1. தாவரங்களுக்கும் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் உண்டு.
2. தாவரங்களிலிருந்து வெளியாகும் ஒலி அதன் ஆணிவேரிலிருந்து வெளிப்பட்டு கிளைகளைச் சென்றடைகின்றது.

தாவரங்களுக்குப் பேச்சு, மூச்சு, உணர்வு என்பன இல்லை என்று வாதிட்டவர்கள் முதன்முதலில் வெளியிட்ட முடிவே இதுவாகும்.

இஸ்லாமிய சகோதரர்களே! இன்று இவர்கள் தாவரங்களுக்கு சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல், சக்தி உள்ளது என்று சொல்வது போன்று, இப்பிரபஞ்சத்தின் அனைத்துப் படைப்புகளுக்கும் இந்த ஆற்றல் உள்ளது என்று சொல்ல இன்னும் நெடுங்காலம் இல்லை. ஏனெனில், அல்குர்ஆன், சுன்னா இதனைக் கூறிவருகின்றன. உதாரணமாக, அல் குர்ஆனின் 33 ஆவது அத்தியாயமான சூறா அல்அஹ்ஸாபின் 72 ஆவது வசனம் இவ்வாறு கூறுகின்றது.

"நிச்சயமாக நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் இந்த அமானிதத்தை எடுத்துக்காட்டினோம். அதைச் சுமப்பதற்கு அவை மறுத்து, அது பற்றிப் பயந்தன. மனிதனோ அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் பெரும் அநியாயக்காரனாகவும் அறிவீனனாகவும் இருக்கின்றான்." *(33:72)*

இதனூடாக வானம், பூமியில் வாழ்கின்ற மனிதன் அல்லாத ஏனைய படைப்புக்களும் சிந்தித்துத்தான் முடிவுகளை எடுக்கின்றன என்பது தெளிவாகத் தென்படுகின்றது.

ஆனால், முஸ்லிம்களாகிய நாங்கள் கூட தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் புத்தியில்லை என்ற கருத்துடையவர்களாகவே இன்றுவரை இருந்து வருகின்றோம். அப்படியல்ல, மாறாக அவற்றுக்கு அல்லாஹ்வுக்கு மாறு செய்து பாவங்கள் புரிவதற்குரிய புத்தியைத் தவிர மற்ற அனைத்து ஆற்றல்களும் வழங்கப்பட்டுள்ளன.

நாம் சுலைமான்(ﷺ) அவர்களின் வரலாற்றைப் படித்தால் அதில் அவர்கள் பறவை, எறும்பு, காற்று, விலங்குகள் போன்றவற்றின் மொழியை அறிந்து அவற்றுடன் கதைத்ததைக் காணமுடியும். மேலும் அவரிடம் இருந்த "ஹுத்ஹுத்" என்ற பறவையின் செயற்பாடுகள், மனிதனல்லாத படைப்புகளுக்கும் சிந்தித்து செயலாற்றும் ஆற்றல் உள்ளது என்பதனை உணர்த்துகின்றது.

மேலும், அல்குர்ஆனிலும் நபி(ﷺ) அவர்களின் வாழ்க்கையிலும் இவற்றுக்கான நிறைய ஆதாரங்கள் உள்ளன. உதாரணமாக, முஹம்மத்(ﷺ) அவர்களுக்கு 12 வயதாக இருக்கும் போது ஆபூதாலிபுடன் ஷாம் தேசத்திற்கு வியாபாரத்திற்காகச் சென்ற போது, புஸ்ரா நகரைச் சேர்ந்த பஹீரா என்று பிரபல்யமான "ஜிர்ஜீஸ்" என்ற துறவி; நபியவர்கள் கணவாயால் வந்த போது அவருக்கு நபிமார்களுக்கு மாத்திரம் சிரம்பணியும் கற்களும் மரங்களும் சிரம் பணிந்ததாகக் கூறினார். மேலும், அவரது நாற்பதாவது வயதில் மக்காவிலுள்ள ஒரு கல் அவருக்கு ஸலாம் கூறிவந்தது என்பன போன்ற செய்திகள் கற்கள், மரங்கள் போன்றவற்றுக்கு அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் செயலாற்றும் ஆற்றல் உள்ளது என்பதை நிரூபிக்கின்றன.

மேலும் உலக முடிவில் முஸ்லிம்கள் யூதர்களை விரட்டி விரட்டிக் கொலை செய்யும் சந்தர்ப்பத்தில் அவர்கள் கற்கள், மரங்கள், புதர்களுக்குப் பின்னால் ஒழிந்து கொள்வார்கள். அச்சந்தர்பத்தில் "கர்காத்" எனும் யூதர்களின் மரத்தைத் தவிர மற்ற அனைத்தும் "அல்லாஹ்வின் அடியானே! இதோ என் பின்னால் ஒரு யூதன் ஒழிந்திருக்கின்றான் அவனைக் கொல்" என்று காட்டிக் கொடுக்கும்.

மேலும் அல்குர்ஆன் கூறும்போது,

"ஒவ்வொரு ஆன்மாவும் சம்பாதித்துக் கொண்டிருப் பவற்றைக் கண்காணித்துக் கொண்டிருப்பவனா (இணை தெய்வங்களுக்குச் சமமாகுவான்?) அவர்கள் அல்லாஹ்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணை தெய்வங்களை ஏற்படுத்து கின்றனர். (அவ்வாறாயின்) அவற்றின் பெயர்களைக் கூறுங்கள். அல்லது பூமியில் அவன் அறியாததை அவனுக்கு நீங்கள் அறிவித்துக் கொடுக்கின்றீர்களா? அல்லது வெற்று வார்த்தைகளைக் கூறுகின்றீர்களா? என்று (நபியே!) நீர் கேட்பீராக! எனினும், நிராகரித் தோருக்கு அவர்களது சூழ்ச்சி அலங்கரித்துக் காட்டப்பட்டு, அவர்கள் (நேர்)வழியை விட்டும் தடுக்கப்பட்டு விட்டனர். அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டு விடுகின்றானோ அவனை நேர்வழியில் செலுத்துபவன் எவனுமில்லை." *(13:33)*

"வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை யும், அவற்றின் நிழல்களும் விரும்பியோ விரும்பாமலோ காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வுக்கே சுஜூது செய்கின்றன." *(13:15)*

"அந்நாளில் அது தனது செய்திகளை வெளியிடும்." *(99:4)*

இதில் இடி, பூமி மற்றும் பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தும், படைத்த நாயனை அறிந்து அவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக சிரம்பணிவதை எடுத்துக் காட்டுகின்றது. இது அவற்றுக்குக் கொடுத்திருக்கும் சிந்தித்து செயலாற்றும் ஆற்றலை நிருபிக்கின்றது.

மேலும், இந்த உயிர்களுக்கு மனிதர்கள் அறியாத நிறைய விடயங்களை அறியக்கூடிய ஆற்றல் உள்ளது. இயற்கை அனர்த்தங்களின் போது அதனை இவை முன்கூட்டியே அறிந்து தனது உயிரைக் காத்துக் கொள்கின்றன.

மேலும், நபியவர்கள் கூறினார்கள். "நாய் ஊளையிடுவதை செவியுற்றால் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுங்கள். ஏனெனில், அது ஷைத்தானைக் கண்டு சப்தமிடுகிறது. சேவல் கூவுவதைச் செவியுற்றால் அல்லாஹ்விடம் ரஹ்மத்தைத் தேடிக்கொள்ளுங்கள். ஏனெனில், அது மலக்குகளைக் கண்டு சப்தமிடுகிறது." இவை போன்ற ஏராளமான அறிவிப்புகள் இப்பிரபஞ்சத்தின் அனைத்துப் படைப்பு களுக்கும் சிந்தித்து செயலாற்றும் ஆற்றல் உள்ளது என்பதை உண்மைப்படுத்துகின்றது. இவை அதி சக்திவாய்ந்த தொலை நோக்குக் கருவியான நுபுவ்வத்தின் மூலம் வெளிப்பட்டவையாகும். இதனைப் பின்வரும் வசனம் மேலும் தெளிவாக்கும்.

"வானங்களில் உள்ளவர்களும் பூமியில் உள்ளவர்களும், சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், உயிரினங்களும் இன்னும் மனிதர்களில் அதிகமானோரும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்கின்றனர் என்பதை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? அதிகமானோர் மீது வேதனை உறுதியாகிவிட்டது. அல்லாஹ் யாரை இழிவுபடுத்துகின்றானோ, அவனைக் கண்ணியப் படுத்துபவன் யாருமில்லை. நிச்சயமாக அல்லாஹ், தான் நாடுவதைச் செய்வான்." *(22:18)*

இவை ஒருபுறம் இருக்க, மேலே நாம் குறிப்பிட்ட வசனங்களை அவதானித் தோமானால் அதிலே "தஸ்பீஹ்" மற்றும் "சிரம்பணிதல்" என்ற வார்த்தைப் பிரயோகங்கள் பிரயோகிக்கப்படுவதைக் காணலாம். இவை இரண்டிலும், இந்த தஸ்பீஹ் என்ற பிரயோகத்திற்குப் பல அறிஞர்களும் பலவிதமாக கருத்திடுவதை அவதானிக்கலாம். அதில் ஒரு விளக்கம் தான், "தஸ்பீஹ் என்பது அல்லாஹ்வைத் துதிப்பது." அதாவது, அவனது வல்லமையை ஆற்றலை நன்கு அறிந்து அவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக அவனைப் புகழ்வதும் "திக்ர்" (ஞாபகம்) செய்வதுமாகும்.

"நிச்சயமாக வானங்கள் மற்றும் பூமியைப் படைத்ததிலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும் சிந்தனையுடையோருக்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன."

"அவர்கள் நின்ற நிலையிலும், அமர்ந்தவர்களாகவும், தங்களின் விலாப்புறங்களின் மீது (சாய்ந்தவர்களாகவு)ம் அல்லாஹ்வை நினைவு கூருவார்கள். மேலும், வானங்கள் மற்றும் பூமியின் படைப்புப் பற்றிச் சிந்தித்து 'எங்கள் இரட்சகனே நீ இவற்றை வீணாகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன். ஆகவே, நீ எங்களை நரக வேதனையிலிருந்தும் பாதுகாப்பாயாக!' (என்றும் பிரார்த் திப்பார்கள்.)" *(3:190,191)*

இதற்குக் கொடுக்கப்படும் மற்றுமொரு விளக்கம் தான் "அல்லாஹ்வுக்குரிய பண்புகளை, அவனுடைய அந்தஸ்த்தை, அவனுக்கேயுரிய வேலைகளை வேறு எந்த வஸ்துக்கும், வேறு எந்தவொரு படைப்புக்கும், வேறு எந்தவொரு சக்திக்கும் கொடுக்காமல் இருப்பது." அதாவது, அல்லாஹ்வுக்கு நிகராக இணையாக அவனுடைய பண்புகள், வேலைகள் என்பவற்றில் யாரையும் இணைக்காமல் இருப்பது என்பதாகும். இக்கருத்தையே பின்வரும் வசனமும் தெளிவுபடுத்துகின்றது.

"வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும், அரசனும், பரிசுத்தமானவனும், யாவற்றையும் மிகைத்தவனும், ஞானமிக்கவனுமான அல்லாஹ்வைத் துதிக்கின்றன." *(61:1)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து வரும் வசனங்களை அவதானித்தால் அவை பின்வருமாறு கூறுகின்றது.

"அவன்தான் (எழுத்தறிவற்ற) உம்மிகளிடம் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப் பினான். அவனது வசனங்களை அவர் அவர்களுக்கு ஓதிக் காட்டி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவார். மேலும், வேதத்தையும், ஞானத்தையும் அவர்களுக்கு அவர் கற்றுக் கொடுப்பார். அவர்களோ இதற்கு முன் தெளிவான வழிகேட்டிலேயே இருந்தனர்."

"இதுவரை இவர்களுடன் சேராத இவர்களிலுள்ள ஏனையோருக்கும் (தூதராக அனுப்பினான்.) அவன் யாவற்றையும் மிகைத்தவன்; ஞானமிக்கவன்." (61:2,3)

இதில் நாம் அவதானிக்கத்தக்க விடயங்கள்தான் ஒரு மனிதனின் சொல்லும் செயலும் ஒன்றாக அமைய வேண்டும். மேலும், நாம் செய்யாததைச் செய்வதென்று கூறுவது அல்லாஹ்வால் மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகும். இந்த இரண்டு கருத்துக்களும் சிரம்பணிதல் என்பதன் விளக்கத்தோடு ஒன்றுபடுகின்றது.

மேலே நாம் பார்த்த விளக்கங்களில் முதலாவது சொல் சார்ந்தது. இரண்டாவது செயல்சார்ந்தது. இவை இரண்டுமே அவசியமானதே. தாவரங்களிடமோ அல்லது வேறு உயிர்களிடமோ இதனை நாம் தெளிவாகக் காணலாம். உதாரணமாக, ஒரு மிளகாய்ச் செடி ஒருபோதும் "நான் இவ்வளவு காலமும் உங்களுக்கு மிளகாய் தந்தேன்; இதன் பிறகு நான் கத்தரிக்காய்தான் தருவேன்." என்று அடம்பிடித்து அதைச் செய்ததுண்டா?

மேற்கூறிய அனைத்து விடயங்களின் மூலமும் தெளிவாகின்ற ஒரு விடயம்தான் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்து, நிராகரித்து வாழ்பவர்களை விட இந்த உயிர்கள் அல்லாஹ்விடம் மேலானது என்பதாகும். இதனால்தான் அல்லாஹ் 7 ஆம் அத்தியாயமான அல்அஃராபின் 179 ஆவது வசனத்தில் இத்தகைய மனிதர்களைக் கால்நடைகளைவிடவும் கேடுகெட்டவர்கள் என்று கூறுகின்றான்.

"ஜின்களிலும் மனிதர்களிலும் அதிகமானோரை நரகத்திற்கென்றே நாம் படைத்துள்ளோம். அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் அவர்கள் விளங்கிக்கொள்ள மாட்டார்கள். இன்னும், அவர்களுக்குக் கண்கள் இருக்கின்றன, அவற்றின் மூலம் அவர்கள் பார்க்க மாட்டார்கள். இன்னும் அவர்களுக்குக் காதுகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் அவர்கள் செவியுற மாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை, (அவற்றை விடவும்) அவர்கள் மிக வழி கெட்டவர்கள். அவர்கள்தாம் (நமது வச னங்களை) அலட்சியம் செய்பவர்கள்" (7:179)

ஆகவே, சகோதரர்களே! முதலில் கூறியது போன்ற எண்ணற்ற அற்புதங்கள், அதிசயங்கள் அல்லாஹ்வின் படைப்புகளில் மறைந்துள்ளன. அவற்றை ஆராய்ந்து அதிலிருந்து படிப்பினை பெறுமாறு அல்குர்ஆனே கூறுகின்றது. ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் கால்நடைகளை விட கேடுகெட்டவர்களாக மாறாமல், உயர்ந்த படைப்பாக இருக்க அல்குர்ஆனை ஆராய்ந்து படித்து அதன்படி வாழ்வோம்.

"வானங்கள் மற்றும் பூமியைப் படைத்ததிலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும், மனிதர்களுக்குப் பயன் தருபவற்றை கடலில் கொண்டு செல்லும் கப்பல்களிலும், வானத்திலிருந்து அல்லாஹ் மழையை இறக்கி, பூமி இறந்த பின் அதனை அவன் இதன் மூலம் உயிர்ப்பிப்பதிலும், எல்லா விதமான உயிரினங்களை அவன் அதில் பரவச் செய்திருப்பதிலும், காற்றுகளை சுழலச் செய்வதிலும், வானம், பூமிக்கிடையில் வசப்படுத்தப்பட்டுள்ள மேகத்திலும், விளங்கிக் கொள்ளும் சமூகத்திற்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன." (2:164)

**அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!**

## தயாராய் இரு!

ஒரு நாள் வரும்
அன்று
நீ குளிக்க மாட்டாய்....
குளிப்பாட்டப்படுவாய்....!
நீ உடை அணிய மாட்டாய்
அணிவிக்கப்படுவாய்....!
நீ பள்ளிவாசல் போக மாட்டாய்
கொண்டு செல்லப்படுவாய்....!
நீ தொழ மாட்டாய்
தொழவைக்கப்படுவாய்....!
நீ அல்லாஹ்விடம் ஒன்றும் கேட்க மாட்டாய்
உனக்காகக் கேட்கப்படும்....!
அன்று உன்னை தனியாக விட்டு விட்டு
உன் உறவினர்கள்
அனைவரும் சென்று விடுவார்கள்.
அதற்கு எந்நேரமும் தயாராக இரு!
அதுதான்
மௌத்!! (மரணம்!!).....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சமுதாயமே! ஈமானை எங்கே தொலைத்தீர்கள்?

- M.M. ஆயிஷா திஹ்ரானி – (தாருல் ஹுதா பெண்கள் அரபுக் கல்லூரி)

"நம்பிக்கையாளர்களான ஆண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக! இதுவே அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்." (24:30)

தற்காலத்தில் உலகம் நவீன அறிவியல் வளர்ச்சியின் உச்சகட்டத்தைத் தொட்டுள்ளது. நவீன தொழிநுட்ப தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாட்டால் உலகம் ஒரு குக்கிராமமாக மாறிவிட்டது; உள்ளங்கையிலேயே உலகம் வந்துவிட்டது என அனைவராலும் சொல்லப்படுவது நாம் அறிந்த விடயமே. மறு புறமாக மனித மாண்புகளும் மறைந்து செல்கின்றமையும் நிதர்சன உண்மையாகும்.

இச் சாதனங்களின் பயன்பாட்டால் நன்மைகள் ஈட்டப்படும் அதே வேளை, மறுபுறம் இளைய சமுதாயம் சீர்கேட்டில் சிக்கித் தவிக்கின்றது என்பதை முஸ்லிம்களாகிய நாங்கள் இன்னும் உணரவில்லை போலும்! இல்லை இல்லை உணர்ந்தும் அது பற்றி கவலைப்படவில்லை போலும்!

உண்மை முஸ்லிம்களாக, ஈமானிய இளைஞர்களாக, பொதுநலன் சார்ந்தோராக, இஸ்லாத்தின் வீரர்களாக, சுவனத்தையே இலக்காகக் கொண்ட இலட்சியவாதிகளாக, முன்மாதிரிமிக்க புனிதர்களாக வாழ வேண்டிய இளைஞர் சமுதாயம் இன்று மேற்கத்தேய ஸியோனிச சக்திகளின் சதி வலைகளில் சிக்கித் தங்களது தனித்துவத்தை இழந்து நரகத்தை நோக்கி விரைகின்ற நிலை வெளிப்படையான உண்மையாக விளங்குகின்றது.

எதிர்காலத்தில் நல்லொழுக்கச் சீலர்களாக, முன்னோடிகளாக, வெற்றியாளர் களாக, வழிகாட்டிகளாக, பெரும் பெரும் அறிஞர்களாக உருவாக வேண்டிய இளைஞர் சமுதாயத்தில் பெரும்பாலானோர் கல்வியை இழந்தவர்களாக, கற்பை இழந்தவர்களாக, சுய கௌரவத்தை இழந்தவர்களாக, காடையர்களாக, சமூகம் வெறுக்கும் குணமுள்ளவர்களாக... என மாறி வாழ்கின்றமை எம்மால் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

இவற்றிற்கு யார் காரணம்? பெற்றோர்களா? ஆசிரியர்களா? அல்லது அவர்கள் வழிகாட்டிகளாக, முன்மாதிரிகளாகக் கொள்பவர்களா?

கடந்த காலங்களில் ஒழுக்கத்திலும் கல்வியிலும் பெயர் போன எமது முஸ்லிம் சமுதாயம் இன்று இவை அனைத்திலும் பாரிய வீழ்ச்சி நிலையையே எய்தி வருகின்றது.

மேற்கத்தயர்களின் கத்தியில்லா, துப்பாக்கியில்லா இலைமறை காயாய் இருக்கின்ற சிந்தனா ரீதியான யுத்தத்திற்கு நாம் முகம் கொடுத்து வருகின்றோம். முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டும் தூரப்படுத்தித் திசை திருப்பவும், இஸ்லாத்தைக் கொச்சைப் படுத்தவும், முஸ்லிம்களை இழிவுபடுத்தவும் இந்த மேற்கத்தேயர்கள் செய்கின்ற அனைத்து சூழ்ச்சிகளுக்குள்ளும் சிக்கித் தவிப்பது வேறு யாருமில்லை; இளைஞர் சமுதாயம்தான்.

மேற்கின் கலாசார நாகரீகங்களின் பால் முஸ்லிம் இளைஞர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக வரையறைகளின்றி ஆபாசக் குப்பைகளைப் புகுத்தியும், மனதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களுக்கு எதிரான விடயங்களைத் தயாரித்து அவற்றை நல்ல விடயமாக உருமாற்றிக் காட்டியும், தவிர்க்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களாக நிலைநாட்டியும் இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் மெல்ல மெல்லத் தகர்த்தெறிவதற்காகச் சிந்தனா ரீதியான திட்டங்களோடு மேற்குலகக் கழுகுகள் வட்டமிட்டுத் திரிவதில் வெற்றியும் கண்டு வருகின்றன.

இவற்றையெல்லம் புரிந்து கொள்ளாத எமது இளைஞர் சமுதாயம் அவற்றைத் தமது வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக்கத்தை இழந்து, மார்க்கத்தை உதறி வீசி அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இவ்வொழுக்க சீர்கேடுகளின் பால் இட்டுச் செல்லும் முக்கிய காரணிகளில் தொலைத்தொடர்பு சாதனங்களே பெருமளவில் முன்நிற்கின்றன. சினிமா ஊடகம், எழுத்து ஊடகம் என்பற்றில் சிக்குண்ட பலர் இன்று பாவத்தின் உச்சியில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று பெரும்பாலானோரின் கவனம் சினிமாவின்பால் ஈர்க்கப்பட்டதால் கலாசாரம் சீர்கெட்டுவிட்டது. ஒழுக்க வீழ்ச்சி உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்றது.

கல்வியைப் புகட்ட வேண்டிய ஒரு சில டியுசன் வகுப்புக்கள், பாடசாலைகள், கலாபீடங்கள் இன்று காதல் கற்பிக்கும் பீடங்களாக மாறிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன.

இதற்கெல்லாம் காரணம் எது; இதை இயக்குபவர்கள் யார்; ஏன் இவற்றை செய்கின்றார்கள் என்பதை நாம் என்றாவது சிந்தித்ததுண்டா? நிச்சயமாக இல்லை. அதில் நாமும் மதி மயங்கிப் போயுள்ளோமே தவிர அவை பற்றி என்றுமே சிந்தித்தது கிடையாது என்பதுதான் உண்மை. அவ்வாறு சிந்தித்திருந்தால் எமக்கு மத்தியில் ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சினைகள் இன்று தீர்ந்திருக்கும்.

இஸ்லாமியக் கலாசாரத்தைப் பின்பற்றத் தயங்கும் பாடசாலைகளும், ஒழுக்க சீலர்களாகத் தங்களது பிள்ளைகளை வளர்த்தெடுக்காத பெற்றோர்களும், சமூக விவகாரங்களில் கவனம் செலுத்தாமல் தானும் தன்பாடும் என விழிகண் குருடர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சில மனிதர்களும், அந்நிய நச்சுக்களுக்குக் குடை பிடிக்கும் கருப்பு உள்ளங்களும் இதற்குக் காரணிகளாக இருக்கின்றார்கள்.

சீர்கெட்ட ஒரு சில இளைஞர் யுவதிகளால் இன்று அனைத்து இளைய சமுதாயமும் வெட்கித் தலை குனியக் கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. கற்புக்கரசிகளாக, உதாரண புருஷிகளாக, நல்லொழுக்க மங்கையர்களாக வாழ வேண்டிய இஸ்லாமியப் பெண்கள் சமூகத்தில் இன்று ஆடை அணிந்த அரை நிர்வாணிகளாக மேக்கப்போடு சுற்றித் திரிகின்றனர். ஆண்களை ஈர்த்து காதலில் தொடங்கி கற்பை இழந்து கருவைக் கலைக்கும் நிலையைக் கூட பல பெண்கள் இன்று தொழிலாகவே செய்து வருகின்ற கேவலமான செயற்பாடுகள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

பெண்கள் கற்பொழுக்கத்துடன், பெண்களுக்குரிய கண்ணியத்துடன் சமூகத்தில் வாழ வேண்டும் என்பதற்கு அல்லாஹ் அல்குர்ஆன் மூலமாகவும் அவனது தூதர் வழியாகவும் எவ்வளவோ போதனைகளை எமக்கு வழங்கியிருக்கின்றான்.

“(நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் அவர்களுக்குக் கூறுவீராக! மேலும், அவர்கள் தமது அலங்காரத்தைத் தமது கணவன்மார்கள் அல்லது தமது தந்தையர், அல்லது தமது கணவன்மார் களின் தந்தையர், அல்லது தமது ஆண் மக்கள், அல்லது தமது கணவன்மார்களின் ஆண் மக்கள், அல்லது தமது சகோதரர்கள், அல்லது தமது சகோதரர்களின் ஆண்மக்கள், அல்லது தமது சகோதரிகளின் ஆண்மக்கள், அல்லது தமது பெண்கள், அல்லது தமது அடிமைகள், அல்லது பெண்கள் மீது நாட்டம் இல்லாத (அவர்களை) அண்டி வாழும் (வயோதிப) ஆண்கள், அல்லது பெண்களின் மறைவிடங்கள் பற்றி விளங்கிக் கொள்ளாத சிறுவர்கள் ஆகியோரைத் தவிர ஏனையவர்களிடம் வெளிப்படுத்த வேண்டாம். தாம் மறைத்திருக்கும் தமது அலங்காரம் அறியப்படுவதற்காக தமது கால்களால் தட்டவும் வேண்டாம்.”

*(24:31)*

எனவே, பெண்கள் சமுதாயம் விழிப்புடன் செயற்படுமானால் ஒழுக்கச் சீர்கேடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவரை இல்லாதொழிக்க முடியும். இது இஸ்லாத்தினதும் வழிகாட்டலாகும்.

## எமக்கு யார் முன்மாதிரிகள்?

சிறு வயது முதலே ஒவ்வொருவரினது மனதிலும் ஒவ்வோர் ஆசை, இலட்சியம் இருந்திருக்கும். இதில் பலரது ஆசை, இலட்சியம் சினிமா நடிகர்-நடிகைகள், விளையாட்டு வீர-வீராங்கனைகள்.... என சிறு வயது முதல் மனங்களில் ஆழமாகப் பதிந்திருக்கும்.

இதற்கு ஒரு விதத்தில் பெற்றோரும் காரணம்தான். சிறு வயதில் பிள்ளைகள் சினிமாக்களைப் பார்ப்பதைத் தடுக்காமையும், அவர்களை அந்த நடிகர் நடிகைகளுக்கு பிள்ளைகளின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் ஒப்பிட்டுப் பேசுவதும் சரியான வழிகாட்டலை அவர்களுக்கு வழங்காமையும் அடிப்படைக் கரணங்களாக அமைகின்றன.

அல்குர்ஆன், எமக்குரிய முன்மாதிரிகள் யார்? நாங்கள் யாரை முன்மாதிரிகளாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை ஆதாரத்தோடும் சரித்திர சான்றுகளோடும் கூறித் தருகின்றது. அந்த வகையில், இணை வைத்தலைத் தட்டிக் கேட்ட இப்றாஹீம்(ﷺ), அழகும் அந்தஸ்தும் கொண்ட பெண் அழைத்தும் அல்லாஹ்வைப் பயந்து கொண்ட யூசுப்(ﷺ), ஈமான் நிறைந்த துல்கர்னைன்(ﷺ), சூறா கஹ்பில் கூறப்படும் இளைஞர்கள், கற்புக்கரசி மர்யம்(ﷺ), ஆயிஷா(ரழி), செல்வத்தோடு வாழ்ந்தாலும் ஈமானைக் காத்துக் கொண்ட பிர்அவ்னின் மனைவி அன்னை ஆஸியா மற்றும் உம்மஹாதுல் மு.'.மினீன்கள்..... என சொல்லிக் கொண்டே போகலாம்.

மேற்சொன்னவர்களைத் தவிர மது, கொலை, கொள்ளை, விபச்சாரம்.... என பாவத்தில் புரண்டு இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கொச்சைப்படுத்தும் எமது எதிரிகளையே நாம் முன்மாதிரிகளாகக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஏன் இன்னும் உணரவில்லை; உணரத் தயங்குகின்றீர்கள்!

எங்களுக்கு மிகவும் ஏற்ற முன்மாதிரி, நற்குணத்தின் இருப்பிடம் என்பவற்றை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஓர் அழகிய முன்மாதிரியான நபி(ﷺ) அவர்களை எங்கள் முன்மாதிரியாக இயம்பத் தவறவில்லையே! காலை விழித்தது முதல் இரவு தூங்கும் வரை ஒரு மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எம் உத்தம நபி முஹம்மத்(ﷺ) அவர்கள் மூலமாக அல்லாஹ் எவ்வளவு தெளிவாகச் சொல்லித் தந்துள்ளான் என்பதை நாம் இனியேனும் புரட்டிப் பார்ப்பது எமது கடமையல்லவா! இவர்களை விடுத்து எவ்வகையிலும் தகுதியற்றோரை நாம் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையில் எமது ஈமானை எங்கே பறிகொடுத்தோம்!

## பெற்றோர்களே உங்கள் கடமை என்ன?

**“நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். உங்க் மேய்ப்பைப் பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள்”** (புஹாரி)

குழந்தைகள் உங்களுக்கு வழங்கப்பட்ட அமானிதங்கள்; அருட்கொடைகள். இவை பற்றிய விசாரணை உறுதியானதே என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

குழந்தைகள் வைத்தியராகவோ, ஆசிரியராகவோ, பொறியியலாளராகவோ உருவாக்குவது மட்டுமல்ல உண்மையான வெற்றி. அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பி மறுமையில் பெறும் வெற்றியே உண்மையான வெற்றி! அப்படிப்பட்ட வெற்றியை நோக்கிய பிள்ளைகளாக மாற்றுவது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும்.

## தண்டனை யாருக்கு?

குற்றம் புரிபவர் தனி நபரானாலும் அதைத் தடுக்காதவிடத்து மற்றவரும் குற்றவாளிதான். பாவங்கள் அதிகரிக்கும் போது அல்லாஹ்வின் தண்டனை சூழ்ந்து கொள்ளக் கூடும் என்பது சமகால நிகழ்வுகள் ஊடாகவும் நாங்கள் அறிந்து கொள்ள முடியுமாகவுள்ளது.

எனவே, பாவத்தைக் கண்டும் தடுக்காத விழிகண் குருடர்களாக வாழும் போது நபியவர்கள் கூறிக் காட்டியது போல கண்டும் தடுக்காதிருந்த கப்பல் பயணிகளின் நிலையே ஏற்படும் என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.


ஆகவே, அல்லாஹ்வின் அருள் பெற்ற, அவனது தண்டனைகளிலிருந்து ஈடேற்றம் பெற்ற சமூகமாக நாம் மாற ஈமானும் இறையச்சமுமே அடிப்படை அம்சங்கள்

32 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே! நரகம் செல்லாதிருக்க



மௌலவியா ஹிமாயா வஜீஹுதீன் (இஸ்லாஹி)

சென்ற இதழின் தொடர்ச்சி

**7. உறவினர்களைச் சந்திக்கச் செல்லுதல்.**

இஸ்லாம் உறவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றது. அது போல இரத்த உறவுகளுக்கு முக்கியத்துவமும், சிறப்பும், உயர்வும் கொடுத்துள்ளதைக் காணலாம். இதை வேறு எந்த மதங்களிலும், கொள்கையிலும், இயக்கங்களிலும் பார்க்க முடியாது. உறவுகளை மதிக்க வேண்டும்; சேர்ந்து வாழ வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்தி ஆர்வமூட்டுவது போல உறவுகளை அறியாமலும், அவற்றைத் துண்டித்தும், வெறுத்தும் வாழ்வதை இஸ்லாம் கண்டிக்கின்றது. இது குறித்து அல்குர்ஆன் பல இடங்களில் பேசுவதைக் காணலாம்.

"மனிதர்களே! உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் அதிலிருந்து அதன் துணைவியைப் படைத்து, அவையிரண்டிலிருந்தும் அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான். எவனைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும் மேலும், இரத்த உறவுகளை(த் துண்டித்து நடப்பதை)யும் அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கின்றான்."

(4:1)

யார் யார் உறவினர்களுடன் நேசம் கொண்டிருக்கின்றார்களோ அவர்களுடன்தான் இறைவனும் நேசம் பாராட்டுகின்றான். யார் குடும்ப உறவைத் துண்டித்து நடக்கின்றார்களோ அத்தகைய அன்பற்றவர்களுடன் இறைவனும் அன்பு பாராட்டுவதில்லை என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இதன் முக்கியத்துவத்தைப் பெண்களாகிய நாம் உணர்ந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். தொட்டதற்கும், பிடித்ததற்கும் உறவுக்காரர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு பகை பாராட்டுவதால் இறை நேசத்திலிருந்து அவர்கள் துண்டிக்கப்பட்டு விடுகின்றனர். இதை விடப் பெரிய நஷ்டம் ஒரு முஸ்லிமுக்கு வேறு என்னதான் இருக்க முடியும். குடும்ப உறவை முறிப்பது பற்றி நபி(ﷺ) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

**"குடும்ப உறவைத் துண்டிப்பவன் சுவனம் நுழையமாட்டான்"**

அறிவிப்பவர்: ஜுபைர் இப்னு முத்இம்(ரலி)
ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்

உறவினர்கள் நம்மைப் புறக்கணித்தாலும் நாம் அவர்களை ஒதுக்கிவிடாமல் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்தல் வேண்டும். யார் கருணையுடனும், கனிவுடனும் நடந்து கொள்கின்றாரோ அவருக்கு இறைவன் உதவிய வண்ணமிருப்பான். அதை விடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்வம் கொண்டு, வீண் பெருமை பேசி உறவினரை உதாசீனம் செய்பவரை இறைவன் ஒரு போதும் நேசிப்பதில்லை என்பதைத் திருமறையும், நபிமொழிகளும் நன்கு எடுத்துரைக்கின்றன.

உறவினர்களுக்கிடையே அன்பைப் பரிமாறுவதிலும் பொருள்களைக் கொடுப்பதிலும் வாங்குவதிலும் கூடுதல், குறைவு இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஏதேனும் சின்னச் சின்ன உரசல்கள் கூட எழலாம். எனினும் அவற்றையெல்லாம் மனதிற் கொண்டு ஒருவரோடு ஒருவர் வன்மம் பாராட்டி உறவை முறித்துக் கொள்தலை இஸ்லாம் ஒரு போதும் விரும்புவதில்லை.

இது போன்ற சில்லறைப் பிரச்சினைகளை ஊதிப் பொரிதாக்கிக் கோள் மூட்டி குடும்பத்தவர்களுக்கிடையே பிரச்சினை உண்டுபண்ணி வேடிக்கை பார்ப்பதற்காக ஆங்காங்கே கூத்தாடிகள் உலா வந்து கொண்டிருக்கின்றனர். உறவுகளை முறித்து வைப்பதில் இந்தக் குடிகேடர்களுக்கு ஒரு கேவலமான ஆனந்தம் இருக்கின்றது போலும்.

**"நீங்கள் ஒருவரை ஒருவர் வெறுக்காதீர்; ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்ளாதீர்; ஒருவரை ஒருவர் பகிஷ்காரம் செய்யாதீர்; இன்னும் சகோதரர்களைப் போல் இறைவனின் அடியார்களாகவே இருந்து கொள்வீர்களாக! மேலும் ஒரு முஸ்லிம் தன்னுடைய சகோதரனுடன் மூன்று நாட்களுக்கு மேல் தனது தொடர்பை முறித்துக் கொள்வதென்பது சட்ட விரோதமாகும்."**

(அறிவிப்பவர்: அனஸ்(ரலி),
ஆதாரம்: புஹாரி)

அபூதர்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **"நீர் நன்மையான அமல்களில் எதனையும் (அது சிறியதாயினும்) இலேசாகக் கருதாதீர்! (அது) உம் சகோதரரை முக மலர்ச்சியுடன் சந்திப்பதாயினும் சரியே!"**

(முஸ்லிம்)

ஒரு சகோதரனோடு முக மலர்ச்சியுடன் பேசுவது ஸதகாவாகும். அது போல புன்னகை பூப்பது, இனிமையாகப் பேசுவது, உறவினர்களோடு அன்பாக நடந்து கொள்வது, அவர்களின் இன்ப-துன்பங்களில் பங்கு கொள்வது போன்ற அனைத்தும் நற் செயல்களும் ஸதகாவாகும்.

**08. வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரித்தல், அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளல்:**

விருந்தினரைக் கண்ணிப்படுத்தல் என்பது இஸ்லாமியக் குடும்பவியலில் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கும் ஒரு பண்பாகும். விருந்தினர் என்றால் யார்? நம் வீட்டுக்கு வருகை தரும் நமக்கு நன்கு அறிமுகமான உறவினர்கள் மற்றும் நண்பர்களை விருந்தினர் எனப் பொதுப்படையாகச் சொல்கின்றோம். இவர்கள் மட்டும்தான் விருந்தினர்களா? இல்லை. நமக்கு முன்-பின் அறிமுகமில்லாத நிலையில் ஊருக்குப் புதிதாக வருகை தருபவரும் விருந்தினர்தான். இருப்பினும், தற்காலத்தில் அறிமுகமில்லாத விருந்தினரை உள்ளே அழைப்பது பற்றி சற்று சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். **"அல்லாஹ்வின் மீதும், மறுமைநாளின் மீதும் நம்பிக்கை வைத்திருப்போர் தம் விருந்தினர்களை உபசரிக்கட்டும். முதல் நாள் அன்பளிப்புக்கு உரிய தினமாகும். அதில் மிக உயர்ந்த உணவை விருந்தினருக்கு ஊட்ட வேண்டும். விருந்துபசாரம் மூன்று நாட்கள் வரையுண்டு. (அதாவது இரண்டாவது, மூன்றாவது நாட்களில் விருந்தளிப்பதற்கு அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.) அதற்குப் பின் அவர் செய்யும் உபசரிப்பு அனைத்தும் தர்மமாகும். விருந்தாளி தனக்கு விருந்தளிப்பவரை நெருக்கடியிலும், கவலையிலும் ஆழ்த்துமாறு அவரிடம் தங்கி இருப்பதும் கூடாது."** (அறிவிப்பவர்: குவைத் இப்னு அம்ரு(ரலி), ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

வீட்டுக்கு வரும் விருந்தினரை ஸலாம் கூறி வரவேற்று அவர்களுடன் முக மலர்ச்சியோடு பேசுவதும், அவர்களை உபசரிப்பதும், அவர்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுவதும் ஸதகாவாகும்.

**09. யாசகம் கேட்டு வருவோருக்குக் கொடுத்தல்:**

யாசகம் கேட்டு வீடு தேடி வருபவர்களுக்கு எம்மிடமுள்ள செல்வங்களின் மூலமாக அல்லது பொருட்கள் மற்றும் உணவளித்தல் போன்றவற்றின் மூலமாக அவர்களுக்கு உதவ வேண்டும். அவ்வாறு எம்மிடம் கொடுக்கக் கூடிய எதுவுமே இல்லை என அறிந்தால் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவர்களின் மனம் நோகாதுபடி நடந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் தர்மங்களை வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லது. அல்லது அதை மறைத்து ஏழைகளுக்கு வழங்கினால் அது உங்களுக்கு மிக நல்லதாகும். அது உங்கள் தீமைகள் சிலவற்றை உங்களை விட்டும் நீக்கிவிடும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாவான்."

(2:271)

அஸ்மா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

"என்னிடம் நபி(ﷺ) அவர்கள் 'நீ (கொடுக்காமல்) கட்டி வைக்காதே! அல்லாஹ்வும் உனக்குக் கட்டி வைத்துவிடுவான்' என்று கூறினார்கள். மற்றுமோர் அறிவிப்பில் 'நீ செலவு செய்வாயாக! கணக்குப் பார்க்காதே! அல்லாஹ்வும் உனக்குக் கணக்குப் பார்த்துத்தான் தருவான். கட்டி வைக்காதே! அல்லாஹ்வும் உனக்குக் கட்டி வைத்துவிடுவான்' என்று கூறினார்கள்."

(புஹாரி, முஸ்லிம்)

இல்லையென்று வருபவர்களுக்கு நாம் செய்யும் ஸதகா அவர்களின் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் அமைவது சிறந்தது. அத்தோடு மாற்று மதத்தினராக இருப்பவர்களுக்கு சிலர் ஸதகா செய்வதில்லை. ஏனெனில், அவர்களுக்குக் கொடுத்தால் நன்மை கிடைக்காது என்ற பிழையான புரிதலும் அவர்களுக்குக் கொடுத்தால் நாளை மறுமையில் எமக்குப் பரிந்துரை கிடைக்குமா? என்ற தவறான எண்ணமுமே இதற்குக் காரணம். இவற்றைக் கைவிட்டு எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்ற நல்ல (நிய்யத்தோடு) எண்ணத்தோடு கொடுக்கப் பழகுவோம். நன்மையைப் பெறலாம். இன்ஷா அல்லாஹ்!

## 10. பிறருக்கு உதவி செய்தல்:

பிறருக்கு உதவுவது ஒரு மு..மினின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகும். நாம் செய்யும் நற்செயல்களே எமது வெற்றிக்கு அடிப்படையாக அமைகின்றன. பிறரின் தேவைகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு உதவி செய்தல் நற்செயலாகவும் ஸத்காவாகவும் அமைகின்றது.

"மேலும், நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு நன்மை செய்யுங்கள்." (22:77)

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள். "சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் மனிதர்களின் ஒவ்வொரு மூட்டுக்களும் ஸதகா செய்கின்றன. இருவருக்கு மத்தியில் நீர் நீதி வழங்குவது ஸதகாவாகும். ஒரு மனிதருக்கு அவரது வாகனத்தின் விடயத்தில் நீர் உதவி செய்வது, அவரை வாகனத்தில் ஏற்றி விடுவது, அல்லது அவர் பொருட்களை அதன் மீது ஏற்றி விடுவதும் ஸதகாவாகும். இனிய வார்த்தையும் ஸதகாவாகும். தொழுகையின் பக்கம் நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் ஸதகாவுடைய நன்மை இருக்கின்றது. பாதையில் இடரளிக்கும் பொருட்களை அகற்றுவதும் ஸதகாவாகும்."

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி),
ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்

எனவே, எங்களால் முடிந்த அனைத்து வழிகளிலுமான நற்செயல்கள் மூலமாக பிறருக்கு உதவுவோம். அதன் மூலமாக மஹ்ஷரில் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவோம்.

## 11. பிராணிகளுக்குக் கருணை காட்டுதல்:

பொதுவாக எமது சுற்றுப் புறச் சூழலில் உயிரினங்கள் இருப்பது இயற்கையே! அவை நாம் வளர்க்கும் பிராணிகளாயினும் சரியே! அவற்றுக்கான உரிமைகளை வழங்குவது அவசியமாகும். அவற்றை அடித்து, துன்புறுத்தி வேதனை செய்வது கூடாது. அவற்றுக்குத் தேவையான நீரையும், ஆகாரத்தையும் வழங்க வேண்டும். இது குறித்து நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

"ஒரு மனிதர் பாதையில் சென்று கொண்டிருந்த போது அவருக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. (அருகே) ஒரு கிணற்றைக் கண்டு அதில் இறங்கித் தண்ணீர் அருந்தினார். பின்னர் அவர் (கிணற்றை விட்டு) வெளியே வந்தார். அப்போது ஒரு நாய் தாகத்தால் தனது நாக்கை வெளியாக்கி ஈர மண்ணை நக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். தனக்கு ஏற்பட்ட தாகம் போன்றுதான் இந்நாய்க்கும் தாகம் ஏற்பட்டுவிட்டது என அம்மனிதர் (தனக்குள்) கூறிக் கொண்டு, கிணற்றில் இறங்கித் தம் தோல் காலுறையில் தண்ணீர் நிரப்பி அதனைத் தன் வாயில் கடித்துக் கொண்டவராக கிணற்றின் மேலே வந்து அந்நாய்க்குப் புகட்டினார். (அல்லாஹ்வின் ஒரு படைப்பின் மீது இரக்கம் காட்டிய அவருக்கு) அல்லாஹ் அவரின் செயலை ஏற்று அவரது பிழைகளை மன்னித்து விட்டான். அப்போது ஸஹாபாக்கள், 'யாரஸூலுல்லாஹ்! உயிர்ப் பிராணிகள் விடயத்திலும்

29 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நாகரிகம் ஸமீன் எஸ். றமழான் (ஸலபி)

க.பொ.த (உ/த) 22

# மறுமை நம்பிக்கை

சென்ற மாத (மார்ச்) இதழின் தொடர்ச்சி.....

**உலக அழிவும் அதனோடு தொடர்பான விடயங்களும்:**

இந்த உலகம் நிரந்தரமற்றது. ஒரு நாள் இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் அழியும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இந்த உலக அழிவு என்பது திடீரென்று நிகழும் சம்பவமன்று. மாறாக அதற்குரிய அடையாளங்கள் அனைத்தும் நிகழ்ந்ததன் பின்னரே மறுமை நிகழும். அவ்வடையாளங்கள் இரு வகைப்படும்.

01. பெரிய அடையாளங்கள்
02. சிறிய அடையாளங்கள்.
    - ✔. நடந்து முடிந்தவை
    - ✔. நடந்து கொண்டிருப்பவை
    - ✔. நடக்க இருப்பவை

சிறிய அடையாளங்களைத் தொடர்ந்து பெரிய அடையாளங்கள் இடம்பெறும். பெரிய அடைாளங்களான பத்தும் நிகழத் தொடங்கிவிட்டால் அனைத்தும் தொடராக நிகழ்ந்து மறுமை ஏற்பட்டு விடும்.

இதனைத் தொடர்ந்து முதலாவது ஸூர் ஊதப்பட்டதும் உலகிலுள்ள அனைத்தும் அழிந்து போய்விடும்.

**மனிதன் மீண்டும் எழுப்பப்படலும் அதனோடு தொடர்பான விடயங்களும்:**

மண்ணறையில் அடக்கப்பட்டு மண்ணோடு மண்ணாக உக்கிவிட்ட மனிதன் மீண்டும் எழுப்பப்டுவான் என்றும் இத்தினத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் மு·மின்கள் நம்பவேண்டும்.

ப·த் - எழுப்பப்படல், ஹஷ்ர் - ஒன்றுகூட்டப்படல், ஹிஸாப் - கேள்விகணக்கு, ஷபாஅத் - பரிந்துரை, ஸிராத் - பாலம், ஜன்னா- சுவனம், நார்- நரகம் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாக ஒவ்வொரு மு·மினும் எவ்வித சந்தேகமுமின்றி உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**உயிர்ப்பித்து எழுப்புவதை நம்புவது:**

உலகம் அழிக்கப்பட்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர் மழையொன்றை அல்லாஹ் பொழியச் செய்வான். பின்னர் ஸூர் எனும் எக்காளம் இரண்டாவது தடவையும் இஸ்ராபீல்(அலை) அவர்களால் ஊதப்படும்போது மரணித்தோர் உயிர்ப்பித்தெழுப்பப் படுவார்கள். பிறகு அவர்கள் அனைவரும் இறைவன் முன்னிலையில் - பாதணிகளின்றியும், ஆடைகள் இன்றியும், விருத்த சேதனம் செய்யப்படாமலும் நிற்பார்கள்.

இந்நிகழ்வுகள் அல்குர்ஆனும் ஸுன்னாவும் விளக்கியுள்ள அனைத்து விடயங்களையும் ஒவ்வொரு மனிதனும் முழு மனதோடு ஈமான் கொள்ள வேண்டும்.

“நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்போம். இது நம்முடைய பொறுப்பிலுள்ள ஒரு வாக்குறுதியாகும். நிச்சயமாக அதனை நாம் நிறைவேற்றயே தீருவோம்.” (21:104)

“நிச்சயமாக நீங்கள் மரணிக்கக் கூடியவர்கள் தாம். பிறகு திண்ணமாக நீங்கள் மறுமை நாளில் எழுப்பப்படுவீர்கள்.” (23:16)

“மறுமை நாளில் மனிதர்கள் அனைவரும் பாதணிகளின்றியும் விருத்த சேதனம் செய்யப்படாமலும் எழுப்பப்படுவார்கள்” (புகாரி, முஸ்லிம்)

இந்த உண்மையை ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நடுநிலையான பகுத்தறிவும் சிரிய சிந்தனையும் இவ்வாறாதோர் வாழ்க்கையை விரும்புகின்றது. ஏனெனில், உலகில் தூதர்களின் வாயிலாக சுமத்தப்பட்ட கடமைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நற்கூலி அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்றே பகுத்தறிவு உணர்த்துகிறது.

"நாம் உங்களை வீணாகவே படைத்தோம் என்றும் நம்மிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படவே மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?" (23:115)

"(நபியே), இந்தக் குர்ஆனின் படி வாழ்வதை - வாழவைப்பதை உம்மீது கடமையாக்கியவன் உம்மை மறுமையின் பக்கம் „கொண்டு செல்லக் கூடியவனாக இருக்கிறான்." (28:85)

2. விசாரணையையும் கூலி கொடுப்பதையும் நம்புவது:

மறுமையில் ஒவ்வொரு மனிதனும் விசாரனைக்குட்படுத்தப்படுவான். உலக வாழ்வில் அவன் மேற்கொண்ட அனைத்துச் செயல்களுக்கும் மறுமையில் பொறுப்புச் சொல்லியாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த விசாரணை பக்கச் சார்பு, பாரபட்சம் என்பன இல்லாமல் நீதியின் அடிப்படையில் இடம்பெறும். அநீதிக்கே இடமில்லாத இவ்விசாரணையில் நன்மைகள், தீமைகள் அனைத்தும் கடுகளவாயினும் சீர்தூக்கப்படும்.

3. சுவனம் நரகத்தை நம்புவது.

மனிதனது உலக வாழ்வுக்கான கூலியாக இது அமைகின்றது.

**மறுமை வாழ்வின் சாத்தியம்:**

மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதை இறை நிராகரிப்பாளர்கள் மறுக்கிறார்கள். அது சாத்தியமில்லாதது எனக் கருதுகிறார்கள். அவர்களின் கருத்து தவறானது. அது தவறானது என்று இறைமார்க்கமும் புலனறிவும் பகுத்தறிவும் தெளிவுபடுத்துகின்றன.

எந்தவொரு பொருளுக்கும் ஆரம்பம் ஒன்றிருப்பின் அதற்கு முடிவும் இருக்க வேண்டும் என்பது ஓர் எளிய விதியாகும். இல்லாமையிலிருந்து படைத்த இறைவனுக்கு மீண்டும் அவற்றை நகலாக உயிர்ப்பிப்பது கடினமான ஒன்றல்ல. உலகின் அன்றாட நிகழ்வுகள் எந்தவொன்றும் நிரந்தரமானது அல்ல. மாறாக, அனைத்தும் என்றோ ஒரு நாள் அழியும் சாத்தியம் உண்டு என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த வாதங்களைப் பின்வரும் ஆதாரங்களை மையமாகக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

**இறை மார்க்கத்தின் ஆதாரம்**

**அல்குர்ஆன்:**

"இறந்தபின் மீண்டும் ஒருபோதும் எழுப்பப்பட மாட்டோம் என்று இறை நிராகரிப்பாளர்கள் வாதாடுகிறார்கள். (அவர்களிடம்) நீர் கூறும், 'இல்லை என் இறைவனின் மீது சத்தியமாக நீங்கள் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள். பின்னர் நீங்கள் (உலகில்) என்னென்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு அறிவிக்கப்படும். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதானதாகும்." (64:7)

**இறை வேதங்கள் அனைத்தும் இந்த உண்மையை ஒருமித்துக் கூறுகின்றன.**

**புலனுணர்வின் ஆதாரம் :**

மரணித்தவர்களை உயிர்ப்பித்தெழுப்புவதை இந்த உலகத்திலேயே அல்லாஹ் தன் அடியார்களுக்குக் காண்பித்துக் கொடுத்துள்ளான். முன்னைய நபிமார்கள் தமது சமுகத்தவருக்கு மறுமை பற்றி எத்திவைத்த போது அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். அதற்கெதிரான சவால்களுக்கு முன்னைய நபிமார்கள் முகம் கொடுக்கலாயினர். அந்த சந்தர்ப்பங்களில் அல்லாஹ் தன் வல்லமையை உணர்த்தியுள்ளான்.

அல்பகறா எனும் அல்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தில் இதற்கு ஐந்து உதாரணங்கள் உள்ளன.

**முதல் உதாரணம் :**

மூஸா நபி(ﷺ) அவர்களிடம் அவரது சமூகத்தார் "அல்லாஹ்வை பகிரங்கமாக நாங்கள் பார்க்காத வரையில் உம்மை நம்ப மாட்டோம்" என்றபோது அல்லாஹ் அவர்களை மரணிக்கச் செய்தான். பிறகு அவர்களை உயிர்ப்பித்தான். அது விடயத்தில் பனூஇஸ்ராயீல்களை நோக்கி அல்லாஹ் கூறினான்.

"மூஸாவே, நாங்கள் அல்லாஹ்வை (உம்முடன் உரையாடும் நிலையில் எங்கள் கண்களால்) பகிரங்கமாகக் காணாத வரை உமது கூற்றை நாங்கள் ஒருபோதும் நம்பமாட்டோம்' என்று நீங்கள் கூறியதை நினைவுகூறுங்கள். அப்போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே உங்களை ஒரு பேரிடி தாக்கிற்று. உடனே நீங்கள் மாண்டு வீழ்ந்து விட்டீர்கள். அதன்பிறகும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு உங்களை உயிர்ப்பித்து எழுப்பினோம்." (2:55-56)

**இரண்டாவது உதாரணம்:**

இது கொலை செய்யப்பட்ட ஒருவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாகும். அவர் விடயத்தில்தான் பனூஇஸ்ராயீல்கள் தங்களுக்கிடையே தர்க்கித்துக் கொண்டார்கள். கொலை செய்தவரைக் கண்டு பிடிப்பதற்காக இறந்தவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக ஒரு பசுவை அறுத்து அதன் ஒரு பகுதியைக் கொண்டு, கொலை செய்யப்பட்ட அந்த நபரை அடிக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான்.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்.

"மேலும் இதனை நினைவு கூறுங்கள். நீங்கள் ஒருவரைக் கொலை செய்துவிட்டு அதுபற்றி தர்க்கித்து ஒருவர் மற்றொருவர் மீது குற்றம் சாட்டிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் நீங்கள் மறைத்துக் கொண்டிருந்ததை வெளிப்படுத்த அல்லாஹ் முடிவு செய்தான். '(அறுக்கப்பட்ட) அப்பசுவின் ஒரு பாகத்தைக் கொண்டு கொலையுண்டவனை அடியுங்கள்.' என நாம் கட்டளையிட்டோம். (பாருங்கள்) இவ்வாறே அல்லாஹ், மரித்தவர்களை உயிர்ப்பிக்கின்றான். மேலும் நீங்கள் நல்லறிவு பெறும் பொருட்டு தன் அத்தாட்சிகளை உங்களுக்குக் காண்பிக்கின்றான்." (2:72-73)

**மூன்றாவது உதாரணம்:**

இது மரணத்திற்குப் பயந்து தங்களின் இல்லங்களில் இருந்து வெளியேறிய கூட்டத்தாரை அல்லாஹ் மரணமாக்கிப் பிறகு உயிர்ப்பித்தான்.

அது பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

"மரணத்திற்கு அஞ்சி தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியவர்களை நீங்கள் கவனிக்கவில்லையா? அவர்களோ ஆயிரக்கணக்கில் இருந்தனர். நீங்கள் இறந்து விடுங்கள் என்று அல்லாஹ் அவர்களுக்குக் கூறினான். பின்னர் அவர்களை மீண்டும் உயிர்ப்பித்தான். உண்மையில் அல்லாஹ் மனிதர்கள் மீது பேரருள் பலிப்பவனாகவும் இருக்கிறான். ஆனால் மனிதர்களில் பெரும்பாலானோர் நன்றி செலுத்துவதில்லை." (2:243)

**நான்காவது உதாரணம்:**

அழிந்து கிடந்த ஒரு கிராமத்தைக் கடந்து சென்ற ஒரு மனிதரின் கதை இது. அழிந்துவிட்ட கிராமத்தை அல்லாஹ் எங்கே உயிர்ப்பித்து உருவாக்கப் போகிறான் என்று அவர் அலட்சியமாகக் கருதினார். அல்லாஹ் அவரை மரணமடைய செய்து ஒரு நூற்றாண்டு காலம் வரை அப்படியே கிடக்கச் செய்தான். பிறகு அவருக்கு உயிர்கொடுத்து எழுப்பினான்.

அல்லாஹ் கூறுகிறான்.

"முகடுகள் இடிந்து வீழ்ந்து கிடந்த ஓர் ஊரினைக் கடந்து சென்ற ஒரு மனிதரின் உதாரணத்தை நீர் கவனிக்க வில்லையா? அவர் (முற்றிலும்) அழிந்து போய்விட்ட இந்த ஊர் மக்களை அல்லாஹ் எப்படி மீண்டும் உயிர்ப்பிக்கப் போகிறான்? என வினவினார். அதற்கு அல்லாஹ் அவருடைய உயிரைக் கைப்பற்றி நூற்றாண்டுகள் அவரை உயிரற்றவராய்க் கிடக்கச் செய்தான். பின்னர் அவரை உயிர்த்தெழச் செய்து, 'நீர் எவ்வளவு காலம் இவ்வாறு கிடந்தீர்? என வினவினார்கள். அதற்கு அவர், ஒரு நாள் அல்லது சில மணிநேரங்கள் நான் இப்படிக் கிடந்திருப்பேன் என்று கூறினார். அல்லாஹ் 'இல்லை (இந்நிலையிலேயே) நீர் நூறாண்டுகள் கிடந்தீர்! உமது உணவையும் பானத்தையும் சற்றுப் பாரும் அவை சிறிதும் கெட்டுப் போகவில்லை. மேலும் உமது கழுதையைப் பாரும்! (அதன் எழுலும்புகள் கூட மக்கிப்போய்விட்டன.). உம்மை மக்களுக்கோர் சான்றாக விளங்கச் செய்வதற்காகவே நாம் இவ்வாறு செய்தோம் எனக் கூறினான். அந்த எலும்புகளை நாம் எவ்வாறு ஒன்று சேர்த்து பின்னர் சதையால் அவற்றைப் போர்த்துகிறோம் என்பதைப் பாரும். இப்படி உண்மை அவருக்குத் தெளிவானபோது திண்ணமாக அல்லாஹ் எல்லாப் பொருள்களின் மீதும் பேராற்றலுடையவன். என்பதை நான் அறிகிறேன் என்று கூறினார்." (2:259)

**ஐந்தாவது உதாரணம் :**

இது இறையன்பரான நபி இப்றாஹீம்(ﷺ) அவர்களின் சரிதையில் உள்ளது. மரணித்தவர்களை எவ்வாறு அல்லாஹ் உயிர்ப்பிக்கிறான் என்பதைத் தனக்குக் காண்பித்துத் தருமாறு ஒருபோது அல்லாஹ்விடம் இப்றாஹீம் நபி வினவினார்கள். அதற்கு நான்கு பறவைகளை அறுக்குமாறும் அவற்றைத் துண்டு துண்டுகளாக்கி அவருக்கு அருகிலுள்ள மலைகள் மீது வைத்துவிட்டு அவற்றை அழைக்குமாறும் அல்லாஹ் அவருக்குக் கட்டளையிட்டான். அந்த இறைச்சித் துண்டுகள் ஒன்றோடொன்று இணைந்து மீண்டும் பறவைகளாய் மாறி அவரை நோக்கிப் பறந்து சென்றன.

இது பற்றி பின்வரும் வசனங்களில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.

"என் இறைவனே, மரணித்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காண்பித்துத் தருவாயாக' என்று இப்றாஹீம் கூறியதையும் நினைவு கூர்வீராக. அதற்கு இறைவன் 'நீர் நம்பிக்கை கொள்ளவில்லையா? என்று கேட்டான். 'ஆம் (நம்பிக்கை கொண்டுள்ளேன்) எனினும் எனது மனம் அமைதி அடையும் பொருட்டே கேட்கிறேன்' என்று அவர் கூறினார். அதற்கு அல்லாஹ், 'அப்படியானால் நீர் நான்கு பறவைகளைப் பிடித்து அவற்றை (நன்கு பழக்கி) உம்முடன் இணங்கி இருக்கச் செய்யும். பின்னர் (அவற்றைத் துண்டுகளாக்கி) அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையில் வைத்துவிடும். பின்னர் அவற்றை நீர் கூப்பிடும். அவை உம்மிடம் விரைந்து வரும். மேலும் அல்லாஹ் நிச்சயமாக வல்லமை மிக்கோனும் நுண்ணறிவாளனுமாக இருக்கிறான் என்பதை நீர் நன்கு அறிந்து கொள்ளும்' என்று கூறினான்" (22:260)

இந்த ஐந்தும் நிஜமாக நடைபெற்ற, புலனுணர்வுக்குட்பட்ட உதாரணங்களாகும். மரணித்தவர்களை உயிர்ப்பித்து எழுப்புவது சாத்தியமே என இவை தெளிவுபடுத்துகின்றன. மரணித்தவர்களை வல்ல அல்லாஹ்வின் அனுமதி கொண்டு உயிர்ப்பிப்பது, அவர்களை மண்ணறையில் இருந்து வெளிக் கொணர்வது போன்ற விடயங்களில் ஈஸா நபி(ﷺ) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்த அற்புதத் தன்மையும் நோக்கத்தக்கது.

## பகுத்தறிவின் சான்றுகள்

**முதலாவது:**

அல்லாஹ்தான், இந்த வானங்கள், பூமி அவற்றில் உள்ள படைப்புக்கள் ஆகிய அனைத்தையும் உண்டாக்கியவன்! அவற்றை முதன் முதலாக படைத்தவன் அவனே. படைப்புக்களை முதன் முதலாகப் படைக்கும் ஆற்றல் கொண்ட இறைவனுக்கு அவற்றை மீண்டும் படைப்பதற்கு முடியாமல் போகாது. நிச்சயமாக அது எளிமையாகவே இருக்கும்.

"படைப்புக்களை முதன் முதலாகப் படைத்தவன் அவனே. பின்னர் மறுமுறையும் அவனே அவற்றைப் படைப்பான். அது அவனுக்கு எளிதான காரியமே." (3027)

"நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்போம். இது நம்முடைய பொறுப்பிலுள்ள ஒரு வாக்குறுதியாகும். திண்ணமாக அதனை நாம் நிறைவேற்றியே தீருவோம்." (21:104)

"கூறும்! எவன் முதலில் அவற்றைப் படைத்தானோ அவனே அவற்றை உயிர்ப்பிப்பான். மேலும் அவன் படைப்பு நுட்பம் ஒவ்வொன்றையும் நன்கறிந்தவனாவான்." (36:79)

**இரண்டாவது:**

இந்தப் பூமி, பசுமையான மரமோ செடியோ எதுவுமின்றி வறண்டு தரிசாகக் கிடக்கிறது. பிறகு மழை பொழிந்தவுடன் உயிர் பெற்று பசுமையாய்ச் சிலிர்த்தெழுகிறது. அனைத்து விதமான அழகிய தோற்றமுடைய தாவரங்கள் அதில் முளைக்கின்றன. இறந்து கிடக்கும் பூமிக்கு உயிர்க் கொடுக்கும் ஆற்றல் படைத்த இறைவன், இறந்தவர்களையும் உயிர்ப்பித்தெழுப்பும் ஆற்றல் கொண்டவன்தான். என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது.

"பூமி வறண்டு கிடப்பதையும் அதில் நாம் மழையைப் பொழிந்தவுடன் அது சட்டென்று சிலிர்த்தெழுவதையும் தழைத்தோங்குவதையும் நீர் காண்கிறீர். இது அல்லாஹ்வின் சான்றுகளில் ஒன்றாகும். திண்ணமாக இறந்து கிடக்கும் இப்பூமிக்கு எந்த இறைவன் உயிரூட்டினானோ அந்த இறைவன் இறந்த மனிதர்களுக்கும் (மறுமைநாளில்) உயிர் கொடுத்து எழுப்பக் கூடியவனாவான். திண்ணமாக அவன் ஒவ்வொன்றின் மீதும் ஆற்றல் கொண்டவனாக இருக்கிறான்." (41:39)

"மேலும் நாம் வானத்திலிருந்து அருள் மிக்க நீரினை இறக்கினோம். அதன் மூலம் தோட்டங்களையும் அறுவடை தானியங்களையும் கனிகள் நிறைந்த குலைகள் அடுக்கடுக்காய்த் தொங்குகின்ற நீண்ட நெடிய பேரீச்சை மரங்களையும் முளைக்கச் செய்தோம். மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவதற்காக! இறந்து கிடக்கும் பூமிக்கு இந்த நீரினால் நாம் உயிரூட்டுகிறோம். (இறந்துவிட்ட மனிதர்கள் பூமியிலிருந்து) வெளிப்படுவதும் இவ்விதமேயாகும்." (50:9-11)

## ஹிஜாப் அணிந்து புகைப்படம் எடுப்பதற்கு ரஷ்ய அரசாங்கம் அங்கீகாரம்

ரஷ்யாவில் வேலைநிமித்தம் வந்துள்ள முஸ்லிம்பெண்களுக்கு, ஆள்அடையாள அட்டைக்கான பத்திரங்களின் போது ஹிஜாப் அணிந்து புகைப்படம் எடுப்பதற்கு ரஷ்ய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. முகத்தை மறைக்காமல் ஹிஜாப் அணிந்து புகைப்படம் எடுப்பதற்கு மேற்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் மத்திய குடிவரவு சேவையின் பேச்சாளர் ஸலினா கோர்னில்வோ தெரிவித்துள்ளார். இதே நடைமுறையே ரஷ்யாவின் கடவுச்சீட்டு புகைப்படங்களிலும் கடைபிடிக்கப்பட்டுவருவதாக கோர்னில்வோ மேலும் தெரிவித்துள்ளார். சர்வதேச மனிதஉரிமை உடன்படிக்கைகள் மற்றும் ரஷ்யாவின் மத்திய அரசாங்கத்தின் அரசியலமைப்பின் படி ரஷ்யாவில் மதரீதியான வணக்கங்களுக்கு பூரண உரிமை வழங்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ புகைப்படங்களை ஹிஜாபுடன் எடுப்பதற்கு எதிராக 2003ஆம் ஆண்டு ரஷ்யாவின் உள்நாட்டு அமைச்சினால், அந்நாட்டு உயர்நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேன்முறையீடு வெற்றியளிக்கவில்லை. எனவே புகைப்படமெடுத்தல் மற்றும் கைரேகை அடையாளம் தொடர்பாக புதியசட்டங்கள் கொண்டுவரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 ஆம் பக்கத் தொடர்ச்சி..

எங்களுக்கு நன்மை உண்டா?' என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் 'ஆம் ஒவ்வொரு உயிரினத்திற்கும் இரக்கம் காட்டுவதிலும் நன்மை உண்டு' என்றார்கள்." (அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி), ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

பிராணிகள் விடயத்தில் நாம் இரக்கம் காட்டி அவற்றின் தாகத்தையும், பசியையும் போக்குவது கொண்டு நாம் நரக நெருப்பிலிருந்து விடுதலை பெறலாம்.

## 12. நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்:

"நம்பிக்கையாளர்களான ஆண்களும் பெண்களும் அவர்களில் சிலர் மற்றும் சிலருக்கு உதவியாளர்களாவர். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமையை விட்டும் தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவான். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன்; ஞானமிக்கவன்." *(9:71)*

இஸ்லாம் ஆண்களுக்கு வலியுறுத்தி உள்ளது போலவே நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் பணியை பெண்களுக்கும் வலியுறுத்திக் கூறியுள்ளது. அதன் வெளிப்பாடானது எமது சொற்கள், செயல்கள், நடத்தைகள், நிலைப்பாடுகள் மூலமாகக் காணப்பட வேண்டும். அவரவர் அறிவுக்கும், சக்திக்கும் ஏற்றவாறு இப்பணியில் நாம் ஈடுபட வேண்டும். அது எம்மை நரக நெருப்பை விட்டும் தூரப்படுவதோடு ஸதகாவாகவும் மாறிவிடுகின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஆதமின் மக்கள் ஒவ்வொருவரும் முன்னூற்று அறுபது மூட்டுக்களுடன் படைக்கப்பட்டிருக்கின்றார்கள். யார் அந்த முன்னூற்று அறுபதின் எண்ணிக்கை அளவிற்கு 'தக்பீர்' (அல்லாஹு அக்பர்), 'தஹ்மீது' (அல்ஹம்துலில்லாஹ்), 'தஹ்லீல்' (லாஇலாஹ இல்லல்லாஹ்), 'தஸ்பீஹ்' (சுப்ஹானல்லாஹ்) கூறுகின்றாரோ மேலும், பாவ மன்னிப்புத் தேடுகின்றாரோ, மக்களின் பாதையை விட்டு கல், முள், எலும்பு ஆகியவற்றை அகற்றுகின்றாரோ, நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கின்றாரோ அவர் தம்மை நரகை விட்டுத் தூரப்படுத்திக் கொண்டவராக அந்நாளில் நடமாடுகின்றார்."

அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி),
ஆதாரம்: முஸ்லிம்

## 13. அண்டை அயலவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளல்:

இஸ்லாம் அண்டை அயலவர்களைப் பற்றி பல மேன்மைமிகு வழிகாட்டல்களையும், அறிவுரைகளையும் வழங்கியுள்ளது. மனிதத் தொடர்புகளில் அண்டை வீட்டாருக்கு இஸ்லாம் வழங்கியுள்ள உயர்வை வேறு எந்த மதங்களின் போதனைகளிலும் காண முடியாதுள்ளது.

"நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். இன்னும் பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், அனாதைகள், வறியவர்கள், உறவினர்களான அயலவர்கள், அந்நிய அயலவர்கள், அருகிலுள்ள நண்பர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் அடிமைகள் ஆகியோர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பெருமையடித்து, கர்வம் கொள்வோரை நேசிக்கமாட்டான்."

*(4:36)*

"முஸ்லிம் பெண்களே! ஓர் அண்டை வீட்டுக்காரப் பெண் மற்றொரு அண்டை வீட்டுக்காரப் பெண்ணை இலேசாக எண்ணி விட வேண்டாம். அது ஒரு ஆட்டுக்கால் குழம்பு கொடுப்பதிலும் சரியே! என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்."

(புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் அயலவர்கள் குறித்து குர்ஆன், ஹதீஸ் மூலமாக பல்வேறு போதனைகளை எமக்கு வழங்கியுள்ளதை நாம் அறிவோம். எனவே, அயலவர்களுடன் சகோதரத்துவ உணர்வு, அன்பு, பாசம், நீதி, நேர்மை போன்ற பண்புகளுடன் நடந்து கொள்வதோடு அவர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கி ஒற்றுமையுடனும், ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் தன் உயிர், பொருள், மானம், சொத்து என்பவைகளைப் பாதுகாக்கும் அளவுக்கு அயலவர்களினது உயிர், மானம், பொருள், சொத்து என்பவைகளையும் பாதுகாப்பது அவர் மீது கடமையாகும் என்பதை அறிந்து செயற்படுவோம்.

## 14. வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்:

"சுத்தம் ஈமானின் பாதி!" என்ற நபிமொழிக்கமைய எமது உடல், உடையில் சுத்தத்தைப் பேணி தூய்மையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிப்பது போலவே நாம் வாழும் வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க பெண்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம். இஸ்லாம் அழகானது. அது அழகையே விரும்புகின்றது. வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திருந்தால்தான் நோய்கள், கிருமிகளிடமிருந்து குடும்பத்தில் உள்ளவர்களையும் எம்மையும் தற்காத்துக் கொள்ள முடியும். ஏனெனில், ஒரு மனிதன் ஆரோக்கியத்தையும் நிம்மதியையுமே விரும்புகின்றான்.

வீட்டை ஒழுங்குபடுத்தி, சுத்தம் செய்து நேர்த்தியாக வைத்திருப்பது போலவே வெளிப் பகுதிகளையும் பசுமையாகவும், கவர்ச்சியாகவும் ஆக்க வேண்டும். பயன் தரும் மரங்கள், பசுமையானதும் கண்ணுக்குக் குளிர்ச்சியானதுமான பூமரங்களை வைத்து சுற்றுச் சூழலை அழகுபடுத்தலாம். ஏனெனில், கண்கள் நல்லவற்றைப் பார்க்கும் போது மனதுக்கு ஒரு அமைதி ஏற்படும். வீட்டுக்கு வருபவர்களும் அதனையே விரும்புவார்கள்.

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள். **"ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நாட்டினால் அதிலிருந்து மனிதர்களோ, கால்நடைகளோ, பறவைகளோ சாப்பிடுமேயானால் (பயன்பெறுமேயானால்) அது அவருக்கு கியாமல் நாள் வரை ஸதகாவாக இருக்கும்."**

அறிவிப்பவர்: ஜாபிர்(ؓ), ஆதாரம்: (முஸ்லிம்

இவ்வாறு நாம் செய்யும் வேலைகள் மூலமாக அடுத்தவர்கள் பயன் அடையும் போது அது எமக்கு ஸதகாவாகவும் நன்மையான விடயமாகவும் அமைகின்றது. அதுவே எம்மை நரக நெருப்பிலிருந்து காக்கும் கேடயமாகவும் அமைந்து விடுகின்றது என்பதை ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் அறிய வேண்டும்.

இவ்வாறு எமது அன்றாட செயற்பாடுகளை, நடைமுறை வாழ்க்கையினை இபாதத்தாக அமைத்துக் கொள்வதன் மூலமாக நாம் உயர்ந்த சுவனத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

## புத்த விகாரையிலிருந்து ஆயுதம் மீட்பு

**பிக்குகள் ஆயுதப்படைக்குத் தயாரா?**

பௌத்த பேரினவாதம் பேசித்திரியும் பௌத்த பிக்குகள் அடுத்த கட்டத்திற்குத் தயாராகிவிட்டனரா எனும் சந்தேகம் எழுந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அதீத பிரயத்தனத்தால் மூடி மறைக்கப்பட்ட ஆயுத மீட்பு விவகாரம் ஒன்று தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

ரத்னபுர, பனமுர பகுதியில் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கையில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றதுடன் 37 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக லங்கா - ஈ - நியுஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஆயுதத்திற்கும் தனக்கும் தொடர்பில்லை. ஆனால், அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் படி விகாராதிபதி ரதுகஹயாய குணரத்ன தம்மிடம் கையளித்ததாக அவர் தெரிவித்திருப்பதாகவும் அறிய முடிகிறது.

தீவிரவாத கொள்கையுடைய குறித்த விகாராதிபதியிடமிருந்து பழமை வாய்ந்த விகாரை காப்பாற்றப்பட வேண்டும் எனப் பிரதேச வாசிகள் கருத்து வெளியிட்டிருக்கும் அதே வேளை, குறித்த சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அதுரேலியவிற்கும் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.


கடந்த மார்ச் 02 ஆம் திகதி குறித்த நபர்கள் இப்பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றை மேற்கொண்டதாகவும் தகவலறிந்து கடமையாற்ற முனைந்த பொலிஸார் கூட தடுக்கப்பட்டதாகவும் இவ்விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் தலையீடு இருப்பதாகவும் இத்தகவல் தெரிவிக்கிறது. குறித்த தேடுதலின் போது T56 ரக துப்பாக்கி, கிரனைட் மற்றும் பல்வேறு வகைத் துப்பாக்கி ரவைகளும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டதாக அறிய முடிகிறது.

News From:- http://racisminsrilanka.blogspot.com/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விமர்சன நோக்கு




## போராட்டத்திற்கு முன்னர் அறிவித்தல்.

"நாம் இதுவரை கூறியதை விட்டு விட்டு நவீன பரிபாஷையில் சர்வதேச சட்டம் என வழங்கப்படும் விவகாரத்துடன் தொடர்பான ஹதீஸின்பால் செல்வோம். அப்துல்லாஹ்பின் மர்வான் அறிவிக்கின்றார். போராட்டத்திற்கு முன்னரான அழைப்புப் பற்றி - போராட்டத்திற்கு முன்னர் இஸ்லாத்தில் நுழையும்படி மக்களுக்கு அழைப்பு விடுப்பது குறித்து -நாபிஃ(ரஹ்)விடம் வினவி எழுதினேன். 'இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில்தான் இவ்வாறு இடம் பெற்றது. நபி(ﷺ) அவர்கள் பனூ முஸ்தலக் கோத்திரத்தாரை முன்னறிவிப்பின்றி அவர்கள் எதிர்பாராத நிலையிலேயே தாக்கினார்கள்' என நாபிஃ எனக்கு பதில் எழுதினார்கள்." (பக்கம்: 149)

ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்கள் இந்த ஹதீஸை மறுக்கின்றார்கள். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் நாபிஃ தவறிழைத்துவிட்டார் என்றும், தவறிழைப்பது அவரது வழமை என்றும் கூறி அவரின் மீது நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் பெண்களின் மல வாயிலில் உறவு கொள்ளலாம் என அவர் கூறினார் என அவர் மீது இல்லாத அவதூறையும் ஷெய்க் அவர்கள் அள்ளி வீசியுள்ளார்.

இந்த ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்படுவதாகக் கூறுகின்றார் என்று கூறுவதை விட, குர்ஆனுடன் இணைந்து செல்லவில்லை என்று கூறுகின்றார் என்பதே பொருத்தமானது. அதனால் இந்த ஹதீஸை மறுக்க வேண்டுமாம். இது பற்றி அவர் கூறும் போது,

'இந்த அறிவிப்பின் நம்பகத்தன்மை ஆட்டம் காணும் நிலையிலிருந்தும் கூட அஹ்லுல் ஹதீஸின் மார்க்கம் பற்றிய குறைஞானம் காரணமாக அதனை மக்கள் மத்தியில் சந்தைப்படுத்துகின்றனர். எந்த அளவுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள் எனின், 'எச்சரிக்கையின்றி தாக்குதல்' என சன்ஆனி தலைப்பிட்டு ஹதீஸ்களைத் தொகுத்துள்ளார்.

எச்சரிக்கையின்றி தாக்குதல்? இந்நடத்தை எவ்வாறு பின்வரும் வசனங்களுடன் இயைந்து செல்ல முடியும்?

'ஏதாவது ஒரு கூட்டத்தினரிடமிருந்து துரோகத்தை நீர் பயந்தால் அதற்கு சமமாகவே அவ்வுடன்படிக்கையை அவர்கள் பால் எறிந்துவிடும். நிச்சயமாக அல்லாஹ் துரோகம் செய்வோரை நேசிக்க மாட்டான்.' (அல்அன்பால்: 58)

'எனவே, அவர்கள் இதனைப் புறக்கணித்து விட்டால் நான் என்னுடைய தூதை உங்கள் யாவருக்கும் சமமாக அறிவித்துவிட்டேன். உங்களுக்கு `வாக்களிக்கப்பட்டது (வேதனை) `சமீபத்தில் இருக்கின்றதா? அல்லது தூரத்தில் இருக்கின்றதா? என்பதை நான் அறியமாட்டேன் என்று நபியே நீர் கூறுவீராக!' (அல்அன்பியா: 109)
(பக்கம் 150~151)

இங்கு இவரது வாதத்தின் வலிமையற்ற தன்மையை விபரிப்பதற்கு முன்னர், இவரின் வார்த்தைப் பிரயோகத்தில் உள்ள வக்கிரத் தன்மையை விபரிக்க வேண்டிய தேவை உள்ளது. இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர் நாபிஃ மீது அவதூறு கூறிய ஷெய்க் கஸ்ஸாலீ, நாபிஃ(ரஹ்) பற்றிக் கூறும் போது "பொய்யாக வாதிடுகின்ற, பாதை தவறிய அறிவிப்பாளரின் பக்கம் நிற்பதைக் காண முடிகின்றது." (பக்கம் 152)

என்று கூறுகின்றார். ஹதீஸ்துறை அறிவிப்பாளர்கள், அறிஞர்கள், நூற்களைத் தொகுத்த மேதைகள் அனைவரையும் குறை கூறும் இவர், விமர்சன ஒழுங்கு பற்றியும் நளினமான போதனை பற்றியும் மக்களுக்கு உபதேசிப்பது வெட்கக் கேடானதாகும்.

இந்த நாபிஃ(ரஹ்) பற்றி இமாம் மாலிக்(ரஹ்) அவர்கள் கூறும் போது, "இப்னு உமர்(ரலி) அவர்களைத் தொட்டும் நாபிஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஹதீஸை அறிவித்தால் அவர் அல்லாதவர் மூலமாக அந்த ஹதீஸை நான் செவியேற்கவில்லை என்பதை நான் ஒரு பொருட்டாக எடுக்கமாட்டேன்" எனக் கூறுகின்றார்கள். அதாவது, நாபி؛. அவ்வளவு நம்பிக்கையானவர் என அவர் சான்று அளிக்கின்றார்.

அறிஞர் அல்ஹலீலிய்யு(ரஹ்) அவர்கள் இவர் பற்றிக் கூறும் போது, "நாபி؛. மதீனாவில் வாழ்ந்த தாபியீன்களில் முக்கிய இமாமாவார்கள். அவர் அறிவில் இமாமாவார். அவரை அனைவரும் ஏகோபித்து அங்கீகரித்துள்ளனர். ஸஹீஹான அறிவிப்பாளராவார். இவர் நாபி؛. அவர்களைச் ஸாலிமை விடச் சிறந்தவர் என்று முற்படுத்துவார். மற்றும் சிலர் ஸாலிமுக்கு சமமாகக் கருதுவர். அவர் அறிவித்த எந்த அறிவிப்புக்களிலும் தவறு விட்டதாக அறியப்பட்டதில்லை" என்று கூறுகின்றார்.

இப்னு உமர்(﵁) அவர்களே, நாபி؛. மூலம் நமக்கு அல்லாஹ் அருள் புரிந்துவிட்டான் என்று இவரைச் சிலாகித்துப் பேசுகின்றார்கள். இத்தகைய அறிவிப்பாளரைத் தான் கண்மூடித்தனமாகப் பொய்யாக வாதிடுகின்றவர், "பாதை தவறிய அறிவிப்பாளர்" என ஷெய்க் கஸ்ஸாலி விமர்சிக்கின்றார் என்றால் இவரை எப்படி ஒரு மேதையாக ஏற்க முடியும்? என்று சிந்தித்துப் பாருங்கள்.

நபி(ﷺ) அவர்கள் பனூமுஸ்தலக் கூட்டத்தார் மீது திடீர் தாக்குதல் நடாத்தினார்கள் என்ற இந்த ஹதீஸ் புஹாரி-2541, முஸ்லிம்- (1730, 4616), அபூதாவுத்- (2635, 2633,), அஹ்மத்- (4857, 4873, 5124, 4873) போன்ற மற்றும் பல கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போராட்டத்திற்கு முன்னர் த؛.வா இடம் பெற வேண்டும். நமது த؛.வா ஏற்கனவே எட்டிய சமூகத்துடன் போராட்டத்தை ஆகுமாக்கும் ஹதீஸாக அறிஞர்கள் இதை எடுத்துக் கொள்கின்றனர். ஒருவர் தனக்குத் தானே முரண்படுவது அவரது நிலைப்பாடு தவறு என்பதற்குத் தக்க சான்றாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. திடீர் தாக்குதலை அனுமதிக்கும் இந்த ஹதீஸை வலிந்து மறுக்கும் ஷெய்க் அவர்களின் நிலைப்பாட்டைப் பாருங்கள்.

நூலாசிரியர் தனது முன்னுரையில் ஆப்கானிய போராளிகள், செஸ்னியாப் போராளிகள், மற்றும் பலஸ்தீனப் போராளிகளைப் பாராட்டுகின்றார். இந்தப் போராட்டங்களில் எல்லாம் திடீர் தாக்குதல்கள்தான் முஸ்லிம்களுக்குக் கைகொடுத்தன. திடீர் தாக்குதலில் ஈடுபடும் போராளிகளைப் போற்றிப் புகழ்ந்து விட்டு திடீர் தாக்குதலை அனுமதிக்கும் ஹதீஸை அறிவித்த அறிவிப்பாளரைச் சாடுவது என்பது முரண்பாடாகத் தெரியவில்லையா?

*தொடரும்.... இன்ஷா அல்லாஹ்!*

21 ஆம் பக்கத் தொடர்ச்சி..

என்பதை அல்குர்ஆன் குறிப்பிட்டுவிட்டது. இதற்கு எமக்குத் தேவை இஸ்லாமிய சூழலே!

கொலைக்குப் பெயர் போனோரை இறையச்சமுடையோராகவும், அகம்பாவம் கொண்டு மிருகங்களாக வாழ்ந்தோரை அன்பின் பார்த்திரங்களாகவும், சிலைகளையும் கற்களையும் வணங்கிக் கொண்டிருந்தோரை ஒரே இறைவனை வணங்கச் செய்ததும், உலக அலங்காரத்தில் மூழ்கி சுகபோகத்தில் திளைத்து உலகையே எண்ணி வாழ்ந்தோரை சுவனத்து மனிதர்களாக மாற்றியதும், மதுவிலும் மாதுவிலும் மூழ்கி அட்டகாசம் செய்தோரை ஒழுக்கசீலர்களாக மாற்றியதும் யார்? எது? இந்த உலக அறிஞர்களா? அவர்களின் போதனைகளா? நிச்சயமாக இல்லை. புனிதம் மிகு அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும்தான் என்பதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இளைஞர் சமுதாயமே! நீங்கள் பாவம் இழைத்திருந்தால் பாவ மன்னிப்புத் தேடி தொலைத்த ஈமானை மீட்டிப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். மேற்கத்தேயரின் சதி வலையில் சிக்குண்டு எமது ஈமானைத் தொலைத்து எமது வாழ்வை நரகப் படுகுழியில் செலுத்திவிடாமல் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் வழிகாட்டல்களை எடுத்து எமது முன்மாதிரிகள் யார் என்பதை இனம் கண்டு எம்மை நாமே பாதுகாத்து சுவனத்துச் சொந்தக்காரர்களாக மாற முயற்சிப்போம்! அதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுடைய வியாபாரம் மற்றும் மார்க்க ரீதியான கடமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போலவே கல்வி முன்னேற்றத்திற்கும் எதிரான எதிர்ப்புக்களை இனவாதிகள் தற்போது வெளிப்படுத்தி வருகின்றனர்.

முஸ்லிம்களுடைய விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்க்கும் போது கல்வி அறிவிலோ பொருளாதார ரீதியிலோ முஸ்லிம்கள் வளர்ச்சியடைந்தது போதாது என்பதே உண்மை. ஆனால், பெரும்பான்மை சமூகத்தின் பார்வையில் சின்னஞ்சிறிய கூட்டமாகிய முஸ்லிம்களுடைய வளர்ச்சி பெரும் வளர்ச்சியாகவே தென்படுகிறது.

100 பேர் கொண்ட கூட்டத்தில் ஓரிருவர் நல்லது செய்தாலோ கெட்டது செய்தாலோ பெரிதாகத் தென்படாது. அதே வேலையை 10 பேர் கொண்ட கூட்டத்தில் ஒருவர் செய்யும் போது அது பெரும் காரியமாகக் காட்சித்தரும். இத்தகைய நிலையே இன்று நாட்டில் காணப்படுகிறது.

களையும் அரசாங்கம் கையேற்று பத்திரமாக பூட்டிவைத்துள்ளது. உருப்படியான எந்தத் தீர்வினையும் தரவில்லை.


சிங்களப் பாடசாலைகளிலும் முஸ்லிம் பிள்ளைகளுக்குப் போதிய இடம் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் இஸ்லாமிய கலாசாரங்கள் பேணிக் கொள்வதற்கு அனுமதிப்பதில்லை. வலுக்கட்டாயமாக மத ரீதியான அனுஷ்டானங்களுக்கு முஸ்லிம் மாணவ மாணவிகளை உட்படுத்துகிறார்கள். இஸ்லாமியப் பாடங்களைப் படிப்பிப்பதற்குக் கூட ஆசிரியர்கள் இன்றி பிள்ளைகள் தவிக்கிறார்கள்.

முஸ்லிம் பாடசாலைகளில் போதிய முன்னேற்றம் இல்லாத வேளையிலும் கஷ்டப்பட்டு படித்து முன்னே வரக்கூடிய பிள்ளைகளின் புள்ளி விபரங்களைப் பார்த்து மொத்த முஸ்லிம் சமூகமும் முன்னேறி சிங்கள சமூகத்தைப் பின்தள்ளியுள்ளது என்பது எவ்வளவு பெரிய அபாண்டம் அநியாயம்.

இம்தியாஸ் யூசுப் ஸலபி

# காவிகளால் குறிவைக்கப்படும்

# முஸ்லிம் கல்வி





முஸ்லிம்களுடைய கல்விரீதியான பல பிரச்சனைகள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. வளப்பற்றாக்குறை, ஆசியர் பற்றாக்குறை ஆளுமையுள்ள அதிபர்கள் இன்மை பாடசாலை தரங்களிலுள்ள குறைபாடு போன்ற பல பிரச்சினைகள் ஆய்வுரீதியாகப் புள்ளி விபரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தனை ஆய்வு

கடைசியாக நடந்த (Low College) சட்டக் கல்லூரி பரீட்சையில் முஸ்லிம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப இடங்களில் -அதிக புள்ளிகளுடன்- வெற்றிப் பெற்றுள்ளார்கள் என்பதைக் கண்டவுடன் பொதுபலசேனா என்ற இனவாதக் குழு சட்டக் கல்லூரி பரீட்சையின் பெறுபேறுகளை ஏற்க முடியாது. அவைகளை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும். இந்தப் புள்ளிகளின் அடிப்படையில் நுழைவுச்சீட்டை வழங்கக்கூடாது என பத்திரிகை மாநாடுகள் நடாத்தி, ஊர்வலங்கள் சென்று, கோஷங்கள் எழுப்பிப் போராட்டங்கள் நடாத்தினர். அது மட்டுமன்றி சட்டக் கல்லூரிக்குள் நுழைந்து அதிகாரிகளுக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் துரத்தித் துரத்தி அடித்த காட்சிகளை மீடியாவில் பார்க்கும் போது இவர்களுடைய போக்கு எத்தகைய விளைவினைக் கொண்டதாக இருக்கும் என்பது தெளிவாகிறது.

தாடிவைத்த ஒரு அதிகாரியை விரட்டிச் சென்று அடிக்கும் போது "தம்பிலா, தம்பிலா" என்று கூறியே பௌத்த பிக்குகள் அடித்தனர். கலவரம் முடிந்த பின் பார்த்த போது அவர் முஸ்லிமல்ல, அவரும் சிங்கள பௌத்தர் என்று தெளிவாகியது.

இத்தனை அட்டகாசங்களுக்குப் பின்னும் அரசு அவர்களது கோரிக்கைகளை ஏற்று சட்டக் கல்லூரிக்கான பெறுபேறுகளை இடைநிறுத்தி விசாரணைகள் நடாத்த குழுக்களை நியமித்துள்ளது.

அரசுக்கெதிராக மக்கள் தங்களுடைய உரிமைகளைக் கோரி ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் செய்யும் போது சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதாகக் கூறி அவ்வார்ப்பாட்டங்களுக்குத் தடைவிதித்து, கண்ணீர் புகையடித்து, அடிதடிகள் நடாத்தி, சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துகிறார்கள். ஜனநாயகத்திற்கு விரோதமாக மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி சட்ட ஒழுங்குகளுக்கு முரணாக நடக்கும் இவ் இனவாத குழுக்களுக்கெதிராக இது வரை எத்தகைய நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாதது ஏன்? காவி ஆடைகளுக்கு அரசு அஞ்சுகிறதா? அல்லது ஆதரவு தெரிவிக்கிறதா?

வருடாந்தம் புலமைப் பரிசில் பரீட்சை சாதாரண மற்றும் உயர்தர (O|L, A|L) பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகும் போது பெரும்பான்மை சமூகத்தினர் அதிகப்படியான புள்ளிகளுடன் வெற்றிபெற்றிருப்பதைக் காண முடிகிறது. அப்படியாயின் இதிலும் மோசடிகள் நடக்கப் பெற்றுள்ளது, மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று சிறுபான்மை சமூகம் கோரினால் அரசு செவியேற்குமா?

அரசாங்கம் நியமித்த நான்கு குழுக்கள் தங்களுடைய விசாரணைகளின் அறிக்கைகளைத் தற்போது கையளித்துள்ளன. இவ்வறிக்கையின் படி சட்டக் கல்லூரி பரீட்சையில் மோசடிகளோ அல்லது பரீட்சைத் தாள்கள் வெளியானதாகவோ எவ்வித ஆதாரங்களும் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் செய்தியை அறிந்தவுடன் அதே இனவாதிகள் பத்திரிகை மாநாட்டைக் கூட்டி பரீட்சைத் தாள்களை (வினாப் பத்திரங்களை) ஆங்கில மொழியில் தயாரித்து பிறகு அதனை சிங்கள மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். இதனால் சரியான அர்த்தம் புரியாத சில வரிகள் இடம் பெற்றுள்ளதனால் சிங்கள மாணவர்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகிப் புள்ளிகளை இழந்துள்ளனர். அதற்கான 17 புள்ளிகளை அரசு வழங்க வேண்டும் என தற்போது கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

எந்த நியாயமும் மனிதாபிமானமுமின்றி அநியாயமாக குற்றங்களைச் சுமத்தி பெரும் புரளிகளைக் கிளப்பியதற்காக இவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது கேள்விக் குறியே. எனினும் சிங்கள சமூகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய காரியம் இது. முஸ்லிம் மாணவ மாணவிகள் மீது சுமத்தப்பட்ட அபாண்டங்களுக்கு தெளிவான முடிவு கிடைக்கப் பெற்றது சந்தோசமான செய்தி. அல்ஹம்துலில்லாஹ்.

சட்டம் ஒழுங்கு எல்லோருக்கம் பொதுவானதாக இருக்கவேண்டும். இல்லையேல் நாடு குட்டிச் சுவராகி விடும்.

"விசுவாசிகளே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீது (உங்களுக்கு)ள்ள துவேஷம் அவர்களுக்கு அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் இறையச்சத்திற்கு மிக நெருக்க மானதாகும். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கிறான்." *(5:08)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்கள்

# அடுத்து என்ன செய்யலாம்?

அனுராதபுர ஷியார உடைப்பு முதல் இன்றுவரை முஸ்லிம்கள் பல்வேறுபட்ட இனவாத செயற்பாடுகளையும் அது தொடர்பில் அரசின் அசமந்தப் போக்கையும் கண்டு மனம் நொந்து போயுள்ளனர். கூட்டங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் எனக் களைத்துப் போயுள்ளனர். மன ரீதியாக முஸ்லிம்கள் பெரும் உளைச்சலுக்கும் சோர்வுக்கும் உள்ளாகியுள்ளனர்.

எனவே, முதலில்,

1. முஸ்லிம்களுக்கு மன ஆறுதல் தரக்கூடிய விதத்தில் எமது பேச்சு, எழுத்து, செயற்திட்டங்களை அமைக்க வேண்டியுள்ளது. இந்த வகையில் உலமாக்களும் இயக்கங்களும் அச்சமூட்டும் உரைகளையும் உபதேசங்களையும் குறைத்து ஆறுதல் கூறி நம்பிக்கையூட்டும் வழிமுறைகள் பக்கம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

2. அச்சம் தவிர்ப்போம்:

   இது அச்சப்பட வேண்டிய சந்தர்ப்பம்தான். அச்சப்படும் சந்தர்ப்பத்தில்தான் அஞ்சாதே! என்று கூற வேண்டும்.

   நபி(ﷺ) அவர்கள் குகையில் இருந்த போது கவலைப்படாதே! அல்லாஹ் எங்களுடன் இருக்கின்றான் என்று கூறிய உபதேசம் இன்று இலங்கை முஸ்லிம்களுக்குத் தேவையாக இருக்கின்றது.

3. பத்தாயிரம் எதிரிகள் அணிதிரண்டு மதீனா நோக்கி வருகின்றார்கள் என்று முனாபிக்குகள் அச்சமூட்டிய போது அது மு∴மின்களுக்கு ஈமானை அதிகரித்தது. "ஹஸ்புனல்லாஹ் வனி∴மல் வகீல்!" என்றே கூறினார்கள்.

   எனவே, அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டும் பக்குவத்தை ஏற்படுத்துவோம். முஸ்லிம்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யார் மீதும் நம்பிக்கை வைக்க முடியாதுள்ளது.

4. பிரிந்திருந்து முஸ்லிம்கள் இதன் மூலம் ஒன்றுபடும் வாய்ப்பை அல்லாஹ் தந்துள்ளான். இதனை நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அனைவரும் ஒருமுகப்பட்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவைப் பலப்படுத்தி எமது செயற்திட்டங்களை முன்னெடுக்க முனைய வேண்டும்.

5. எமது சமூகத்தில் உள்ள அரசியல், சமய, சமூகத் துரோகிகளையும், முனாபிக்குகளையும் இந்தப் பிரச்சினை மூலம் அல்லாஹ் எமக்கு இனம் காட்டியுள்ளான். இந்தத் துரோகிகள் தாமாகத் திருந்தாவிட்டால் இவர்களின் மரண நிகழ்சியில் கூட கலந்து கொள்வதில்லை என நாம் உறுதி கொள்ள வேண்டும்.

6. எமது நாட்டில் உள்ள அரசியல் தலைமைகள் சிலவற்றின் அப்பட்டமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோக்கியத்தனத்தை அல்லாஹ் இனம் காட்டியுள்ளான். எனவே, அரசியல் என்கின்ற வட்டத்தில் இருந்து விலகி சிந்தித்து வாக்களிக்கும் மனநிலைக்கு முஸ்லிம்கள் வர வேண்டியதன் அவசியத்தை அல்லாஹ் உணர்த்தி உள்ளான்.

7. கஷ்டத்தில்தான் இலேசு உள்ளது என குர்ஆன் கூறுகின்றது. இந்தக் கஷ்டம் சில இலகுபடுத்தல்களை எமக்கு ஏற்படுத்தும்.

(உதாரணமாக:)

ஒன்றுபடுத்தவே முடியாது என்றிருந்த அமைப்புக்கள் ஒன்றுபட்டு செயற்பட ஏங்குவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

8. பிற சமூக மக்களுக்கு இஸ்லாம் பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வம் பிறந்திருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

9. எந்தச் சந்தர்ப்பத்திலும் சமூக ஒற்றுமை என்ற பெயரில் பிற சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு இஸ்லாமிய வரம்புகளை மீறக் கூடாது. சமூக விவகாரங்கள், மனித நேயப் பணிகள் மூலமாக சமூக நல்லிணக்கத்திற்கு முயற்சிக்க வேண்டும். எமது சமூகம் பிற சமூகத்திற்குத் தனிப்பட்ட முறையில் நிறையவே செய்துள்ளது. அவை போதியளவு விளம்பரப்படுத்தப்பட்டு மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

10. மீடியாக்களின் முக்கியத்துவத்தை இந்த நிகழ்வுகள் முஸ்லிம் சமூகத்திற்கு உணர்த்தியுள்ளது. ஜம்இய்யதுல் உலமாவின் கீழ் ஒன்றுபடும் முஸ்லிம் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து எமக்கான மீடியாவை உருவாக்கு வதற்கான நல்ல வாய்ப்பை இந்த நிகழ்வுகள் ஏற்படுத்தித் தந்துள்ளது.

11. தொடர்ந்து இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் எதிராக வழக்குகள் தொடரப்பட்டு அவை பதிவுகளாக்கப்பட வேண்டும். நடந்த நிகழ்வுகள் அனைத்துக்குமான தரவுகள், புகைப்படங்கள், தகவல்கள் முழுமையாக முஸ்லிம்களிடம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## பன்றிக் கொழுப்பு கலந்த பொருட்கள்
# எச்சரிக்கை!

அன்றாடம் பயன்படுத்கூடிய பொருட்களில் கீழ்கண்ட கலவைக் குறியீடுகள் (E-INGREDIENTS) இருக்கின்றனவா என ஒப்பிட்டுப்பார்த்து அதை முற்றிலும் நிராகரிக்க வேண்டும். ஏனெனில் இவையனைத்தும் பன்றியின் கொழுப்பிலிருந்து செய்யப்பட்டவை ஆகும்..

**E100, E110, E120, E140, E141, E153, E210, E213, E214, E216, E234, E252, E270, E280,E325, E326, E327, E334, E335, E336, E337, E422, E430, E431, E432, E433, E434, E435, E436, E440, E470, E471, E472, E473, E474, E475, E476, E477, E478, E481, E482, E483, E491, E492, E493, E494, E495, E542, E570, E572, E631, E635, E904.**

பன்றிக் கொழுப்பை உட்கொள்வதாலும், பயன்படுத்துவதாலும் உடலில் ஏற்படும் மாற்றங்கள் - வெட்கம் அகன்று விடுதல், தீய எண்ணங்களை உருவாக்கிவிடுதல், வன்முறை எண்ணங்களை வளர்த்துவிடல் போன்ற தன்மைகள், தங்களையறியாமலே மாற்றம் அடையச் செய்யக்கூடிய தன்மை பன்றிக் கொழுப்பு கொண்டுள்ளது என்பது மற்றுமொரு செய்தி.

பார்த்தவர் பகிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ் நல்லருள் புரிவானாக! அமீன்!....

திருத்தி வாழ்வோம் நம்மை பார்த்து திருந்தி வாழ்வோம் இன்ஷா அல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டும் அகலாத

# மாறாத வடுக்கள்

**1995 இல் அதாவது 18 வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரையொன்றை இங்கே மீள் பிரசுரம் செய்கின்றோம். ஒரு முறை முழுமையாக வாசித்துப் பாருங்கள்.**

இலங்கை அரசிற்கும் புலிகளுக்கு மிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் 1995 ஏப்ரல் 19 இல் கடற்படையின் "ரனசுரு" "சூரியர்" ஆகிய பீரங்கிப் படைகளைப் புலிகள் வெடிக்கச் செய்ததுடன் முறியடிக்கப்பட்டது. மூன்றாம் ஈழப் போர் ஆரம்பமானது.

இத்தோடு இலங்கையில் ஓர் அரசியல் அலை ஏற்பட்டது எனலாம். பொதுமக்களில் அநேகமானோர் அன்றாட அரசியல் நிலவரங்களை அறிவதில் பெரிதும் ஆர்வம் காட்டினர். குறிப்பாக யுத்த நிலவரம் பலரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தெடுத்தது. இதனால் பத்திரிகைகள் தொடக்கம் பொது மக்கள் வரை அனைவரும் யுத்த நிலவரம் பற்றிய விமர்சனத்தில் தான் அதிக அக்கறை காட்டி வந்தனர்.

இவ்வேளையில், நல்ல உள்ளங்கள் விரும்பாத ஆட்கடத்தல், இன மோதல்களை உருவாக்கும் தீய சக்திகளின் வியூகங்கள், ஏரியோரச் சடலங்கள் என்பன நடை பெற்றாலும் அவை பெரிதுபடுத்தப்படாமல் யுத்த மேகத்துக்குள் புதையுண்டு போயின.

மூன்றாம் ஈழப் போருக்குப் பின் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிய, அவர்களின் உள்ளத்தை ரணப்படுத்திய சில தகவல்களை இங்கு ஒன்று சேர்த்து நோக்குவோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிக்கப் பட்டால் புலிகளின் இலக்காக கிழக்கும், அரச படையின் இலக்காக வடக்கும் குறிப்பாக யாழ்ப்பாணமும் இருக்கும் என்ற உண்மையை ஓரளவு அரசியல் அவதானமுள்ள நம்நாட்டு குடிமகனும் அறிந்து வைத்திருந்தான். இதனை உண்மைப் படுத்துவது போல் புலிகளின் முதல் தாக்குதல் வடக்கில் இருந்து துவங்கப்பட்டது. யுத்தத்தில் புலிகளின் கை ஓங்கி, கிழக்கு மாகாணம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டால் கிழக்குவாழ் முஸ்லிம் களுடனான அவர்களது செயற்பாடுகள் எப்படி இருக்கும்?

வடக்கிலிருந்து எம் உடன் பிறப்புக்கள் அனைத்து உரிமைகளும், உடைமைகளும் பறிக்கப்பட்டு அகதிகளாக, அநாதரவான நிலையில் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்ட அநியாயம் கிழக்கிலும் அறங்கேற்றப்படுமா?

ஏற்கனவே வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட எம் உடன் பிறப்புக்கள் அகதி முகாம்களில் அல்லல்படும் காட்சி கிழக்கு முஸ்லிம்களைத் திணறச் செய்தது. ஆரம்பகால விடுதலைப் போரில் பங்குகொண்டு பல உயிர்த்தியாகங்களைச் செய்த, பல கோடிப் பணத்தைக் கொடுத்து உதவி செய்த வடக்கு முஸ்லிம்களை விரட்டியதன் மூலம் புலிகள் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஏற்படுத்திய வடு ஆறமுன்னர் இன்னுமோர் வெளியேற்றமா?

ஏற்கனவே ஏற்பட்ட பொருள் இழப்புக்கள், சமூக, சமய, கலாசாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்கள், அறிவுத்துறை வீழ்ச்சி என்பவற்றை ஈடுசெய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் போது மறுபடியும் எம் சமூகம் வெளியேற்றப்பட்டால்....? இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள்!

இச்சந்தேகங்களை சற்று வலுப்படுத்தி நிலைமையை இன்னும் கொஞ்சம் நெருக்கடியாக்கும் சம்பவங்களும் நடக்கத்தான் செய்தன.

முஸ்லிம்கள் ஒரு குறித்த காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டும் என்ற அச்சுறுத்தல் கடிதங்கள் (காத்தான்குடி, புத்தளம் போன்ற பகுதிகளில்) புலிகளின் பெயரில் அனுப்பப்பட்டன. இக்கடிதங்கள் பலத்த சந்தேகங்களையும், அச்ச உணர்வையும் கிளப்பிவிட்டது. இது தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தும் இனவாத சக்திகளின் சதியா? புலிகளின் பெயரைப் பயன்படுத்தி எரிகின்ற வீட்டில் பிடுங்குகின்ற தந்திரத்தைக் கையாளத் திட்டமிட்ட கொள்ளைக் கோஷ்டியின் சேஷ்டையா?

முஸ்லிம் இளைஞர்களையும் இராணுவத்துடன் இணைத்துக் கொள்ள அரச படை கையாண்ட தந்திரமா?

புலிகளின் உத்தரவாக, இருக்குமானால் கிளம்பு என்றால் கிளம்புகின்ற நிலையில்தான் முஸ்லிம்கள் இருக்கின்றனரா என்பதைக் கண்டறியும் புலிகளின் "வெள்ளோட்ட அச்சுறுத்த"லாக இருக்குமா?

இவ்வாறு பல திக்குகளிலிருந்தும் கிளர்ந்து வந்த கேள்விகள் கலைந்து வருகின்றன. இருப்பினும் கிழக்கு முஸ்லிம்களின் குடியுரிமை பற்றி உறுதியான ஒரு தீர்மானத்தைக் கூற முடியாத நிலை இன்னும் நீங்கவில்லை.

## புல்மோட்டையில் இராணுவ வெறியாட்டம்:

யுத்தம் வெடித்த பின் கிழக்கு மாகாணத்தின் நுழைவாயிலாகத் திகழும் திருமலை மாவட்டத்தில் அமைந்துள்ள புல்மோட்டைப் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் உயிர் காக்கும் நோக்குடன் இடம்பெயர்ந்தனர். இவர்களே மூன்றாம் ஈழப் போர் ஏற்படுத்திய முதல் அகதிகளாவர்.

மக்களைக் கேடயமாகப் பாவிக்கும் நோக்குடனும், இல்மனைட் சுத்திகரிக்கும் தொழிற்சாலை மூடப்பட்டு அதனால் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் பிற்பகுதியில் அரச படையில் முஸ்லிம்களின் வெளியேற்றம் தடுக்கப்பட்டது. எனினும் அங்குள்ள முஸ்லிம்கள் புலி, படைத்தரப்பு என்ற இரு பக்க நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக இராணுவத்தினரின் அராஜகப் போக்கால் படைத்தரப்பு பற்றிய அச்ச உணர்வு அப்பகுதி மக்களிடம் மேலோங்கியுள்ளது.

புலிகளால் தாக்கப்பட்டு ஐந்து இராணுவத்தினர் இறந்ததையடுத்து வெறிகொண்ட இராணுவ வீரர் இருவர் வீட்டிற்குள் புகுந்து ஐந்து முஸ்லிம்களைக் கொன்று குவித்து தமது வெறியைத் தணித்துக் கொண்டனர். இவ்வெறியாட்டத்திற்குப் பலியான ஐவரில் 70 வயது மூதாட்டியும் 3 வயதுக் குழந்தையும் உள்ளடங்குவர்.

மேற்படி வெறியாட்டத்தால் 24 வயதுடைய ஏழு மாதக் கர்ப்பிணி, 9 மாதக் குழந்தை உட்பட இரு இளைஞர்கள் என்போர் காயப்பட்டுள்ளனர். இதே பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வீட்டில் இருந்த 55 வயதுடைய முதியவர் இருவரையும் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இவ்வாறாக இப்பகுதியில் நடைபெற்ற தொடர்ந்தேர்ச்சியான இராணுவ அத்துமீறல்கள் முஸ்லிம்களின் உயிருக்கு உத்தரவாதமற்ற சூழ்நிலையையும், இராணுவத்தினர் பற்றிய அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள், உளவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளானவர்கள் என இராணுவத் தரப்பில் சாட்டு சொல்லப்பட்டாலும் நடந்த அநியாயத்தை முஸ்லிம்களாலும் மனிதாபிமானமுள்ள மற்றவர்களாலும் இலகுவில் மறந்துவிட முடியாது. (புல்மோட்டையைச் சேர்ந்த முஸ்லிம்கள் பலர் இன்னும் புதிய அகதிகள் என்ற முத்திரையுடன் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்கிச் சட்டைக்குள் காம வெறி

ஏறாவூர் சதாம் ஹுஸைன் கிராமத்தில் இராணுவ அரண் ஒன்றில் பணியாற்றிய பொலிஸ் அதிகாரியொருவர் அதற்கு அருகில் உள்ள ஆண் துணையற்ற பெண்ணிடம் அடிக்கடி வாலாட்டிப் பார்த்துள்ளார். அது பலிக்காததால் கற்பழிப்புத் திட்டம் தீட்டினார். அப்பெண் வீட்டில் இல்லாத வேளையில் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு மேற்படி அதிகாரியும், இன்னும் இரு பொலிஸாரும் வீட்டில் மறைந்திருந்துள்ளனர்.

26.06.1995 சம்பவ தினத்தன்று பஸீரா (24) என்ற மேற்படி பெண்ணும் அப்பெண்ணின் பெறா மகனான றிஸ்வி (9)யும், அப்பெண்ணின் இரண்டு வயது பெண் குழந்தையும் மாலை நேரத்தில் வீட்டிற்குள் வந்து மின்சாரம் இல்லாததால் நேரத்துடன் உறங்கச் சென்றுள்ளனர். அவ்வேளையில் பஸீரா என்ற பெண் மூன்று பொலீஸாரினாலும் மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டாள். உண்மை வெளியே தெரியக் கூடாது என்பதற்காக பஸீராவையும், றிஸ்வியையும் கோரமான முறையில் கொலை செய்திருந்தனர். இருப்பினும் இரு வயதுக் குழந்தையின் செய்கைகள், சமிக்ஞைகள் மூலம் பொலிஸாரின் குட்டு அம்பலமானது.

பொலிஸ்துறை அதிகாரியிடம் இது பற்றி ஊர் மக்கள் முறைப்பாட்டை முன்வைத்த போது அவர் அதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. "புலிகள் செய்திருப்பார்கள்" என்று சமாதானம் வேறு கூறினார். அத்தோடு அப்துர் ரஹ்மான் எனும் நிரபராதி ஒருவர் மீது பழியைப் போடும் சதியும் பொலிஸ் தரப்பால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அநியாயத்திற்கு எதிராக ஏறாவூரைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட இளைஞர்களால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. நியாயமான இந்த ஆர்ப்பாட்டததை வெறித்தனமாக அடக்க முயன்ற படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் அப்துல் காதர் (34) என்ற இளைஞர் அதே இடத்தில் துடிதுடித்து இறந்து போனார். மேலும், 9 பேர் படுகாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கற்பழிப்பு, கொலை, பொய்க் குற்றச்சாட்டு, மீண்டும் கொலை எனப் படிப்படியாக பல தவறுகள் அரங்கேற்றப் பட்டும் கூட நீதித்துறை செத்துவிட்டதோ என ஐயப்படும் அளவுக்கு இது பற்றிய பேச்சையே காணோம். ஏறாவூர் பொலிஸ் அதிகாரி மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரியாக இடம் மாற்றப்பட்டுள்ளாராம். நியாயமான தண்டனை தான் பாருங்கோ!

இதன் பின் கூட ஏறாவூர் இளைஞர்கள் அநியாயமாக பொலிஸாரால் தாக்கப்பட்டும் கூட தமிழ் அரசியல்வாதிகளால் இது பற்றி எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. குறைந்தபட்சம் இந்தக் கொடுமைகயைக் கண்டிக்கவும் இல்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளும் இது விடயத்தில் கூடிய கரிசனை காட்டவில்லை.

## களுத்துறை படுகொலைகள்:

களுத்துறையில் (1995 ஜுலை 17 இல்) பொலிஸ்காரர்களால் நியாயமற்ற முறையில் நான்கு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். களுத்துறை கலீல் பிரதேச இறுதியில் உள்ள மைதானத்தில் விளையாடுவது தொடர்பாக எழுந்த சர்ச்சையில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் சிரிய வாய்த்தர்க்கம் எழுந்துள்ளது.

அன்று மாலையில் முஸ்லிம்களின் வீடுகள் தாக்கப்படவே வீட்டில் இருந்தோர் வேலிக் கம்புகள், கற்கள் என்பவற்றைத் தூக்கிக் கொண்டு வீதிக்கு வந்துள்ளனர். முஸ்லிம்கள் ஆயுதம் வைத்திருந்தனர் என்பது பொய் என்பதை எஸ்.எஸ்.பி. திரு சந்திரா பெரேரா என்பவரின் வாக்கு மூலம் உறுதி செய்கிறது.

வீதியில் கூடி நின்ற முஸ்லிம்களுடன் எவ்வித ஆயுதமும் இல்லாமல் சாதாரணமாக எஸ்.எஸ்.பி. திரு சந்திரா பெரேரா அவர்கள் சுடாதீர்கள் எனத் தடுத்தும் நான்கு உயிர்கள் பலியாக்கப்பட்டன. அவர் தடுக்காவிட்டால் பொலிஸ். வெறிக்கு இன்னும் பல உயிர்கள் பலியாகியிருக்கலாம்.

மரணித்தவர்களிலும், காயப்பட்டவர் களிலும் பலர் பிரச்சினையுடன் சம்பந்தமற்ற வர்கள். 11ஆம் வருட மாணவன் முஹமட் பாரிஸ் என்பவனும், அவ்வழியாகத் தொழில் புரிந்து விட்டு வீடு வந்த எம்.சீ. பிர்தௌஸ் (21) என்பவரும் கூட கொல்லப்பட்டனர். சம்பவம் பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற தினகரன் பத்திரிகை நிருபர் அத்தாஸ் ரூமி என்பவரும் சூட்டுக் காயத்திற்கு உள்ளானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சையைத் தீர்க்க வேண்டிய பொலிஸார் சமாதானத்தை ஏற்படுத்துவதை விட்டு விட்டு இன வெறியுடன் செயற்பட்டுள்ளனர். எவ்விதக் குழப்பமுமின்றி முஸ்லிம்கள் பொலிஸ் அதிகாரியுடன் நிலவரம் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும் போதே சுடப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையால் சிங்கள சகோதரர்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் முட்டாள்தனமான வெறியுணர்வு மக்களிடம் பரவிவிட்டதால் இரு பக்கப் பெரியவர்களும் ஒன்றிணைந்து சமாதான முயற்சியில் ஈடுபட்டு நிலைமையை சீர் செய்தமை வரவேற்கப்பட வேண்டிய ஒரு முன்மாதிரியாகும்.

எது எப்படியாயினும் இந்த உயிர்களை மீட்கவோ, பொலிஸ் படையின் இன வெறியாட்டத்தையும், அநியாயத்தையும் மறக்கவோ முடியாதல்லவா?

இவ்வாறு தொடர்ச்சியாக இடம் பெற்ற அசம்பாவிதங்கள் முஸ்லிம்களின் இன்றைய அரசியல், சமூக, பொருளாதார நிலவரங்களை நெருக்கடியாக்கியுள்ளது. முஸ்லிம்கள் பற்றிய வெறுப்புணர்வு ஆயுதப் படையினரிடம் பரவியிருக்கலாமோ என்ற அச்சமும் இனங்களுக்கிடையே பிரிவினை உண்டு பண்ணும் சூழ்ச்சி நடக்கின்றதோ என்ற ஐயமும் விரவிக் காணப்படுகின்றது.

**எனவே,**
**விழித்திருங்கள்! பொறுத்திருங்கள்!**
**இன ஒற்றுமையைப் பேணுங்கள்!**
**வேற்றுமையை வளர்க்கும் சக்தி எதுவென்றாலும் அதற்குத் துணை போகாதீர்கள்! என்று வேண்டுவதுடன், ஒரு முஸ்லிமின் ஆத்திரம் அது நியாயமாக இருந்தாலும் முழு சமூகத்தையுமே பாதிக்கும் சாத்தியமுள்ளது என்று எச்சரிக்கையும் செய்கின்றோம்.**

(இக்கட்டுரை எழுதப்பட்டு பல தினங்கள் கடந்துவிட்டன. அதனால் அண்மைக் காலத்தில் நடந்த அத்துமீறல்கள், கெடுபிடிகள் பற்றி இங்கே நாம் குறிப்பிடவில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

(ஆ-ர்)

**(உண்மை உதயம்: ஒக்டோபர்-டிசம்பர் 1995, உண்மை: 8, இதழ்: 29)**

இந்தக் கட்டுரையை சில நோக்கங்களுக்காவே நாம் மீள் பிரசுரம் செய்தோம்.

1. 1995 இல் இனவாத வெறியாட்டத்துக்கு இரையான உயிர்கள், கற்பிழப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான அடக்குமுறைகள் சிலவற்றை இக் கட்டுரை தொட்டுக்காட்டுகின்றது. இது பற்றி எழுதிய எனக்கே இவை மறந்துவிட்டன. பழைய இதழ்களைப் பார்க்கும் போது கண்களில் பட்டதை உங்கள் பார்வைக்கு முன்வைத்துள்ளேன். நமது வரலாற்றைத்தான் நாம் முறையாகப் பதிவு செய்யவில்லை. எமக்கு ஏற்பட்ட அவலங்கையாவது நாம் முறையாக ஆவணப்படுத்தக் கூடாதா? பொதுபலசேனாவினால் தொடர்ந்து நடாத்தப்படும் வரம்பு மீறல்கள் ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். நடந்த பல நிகழ்ச்சிகளை இப்போதே நாம் மறக்க ஆரம்பித்து விட்டோம். எனவே, திகதிவாரியாக இவர்களது வரம்பு மீறல்கள் வரலாற்றுப் பதிவாக வேண்டும்.

2. 1995 நிலவரத்தோடு ஒப்பிடும் போது தற்போது இருக்கும் நிலை பரவாயில்லை என்று கூறலாம். அப்போது அரச படைகளே இனவாதத்தைக் கக்கின. இப்போது சிங்கள மதகுருக்கள் அதைச் செய்கின்றார்கள். ஆனால், முறைப்பாடுகள் செய்யப்பட்ட இடங்களில் காவல் துறையினர் உடனடி நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

   மக்களது மனதுக்கு அமைதியையும் ஆறுதலையும் அளிப்பதற்காகவே இதைக் கூறுகின்றோம்.

3. அன்று எம்மை நோக்கிக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத வெறியில் இருந்து எம்மை அல்லாஹ் பாதுகாத்தான். இன்றைய நிலையில் இருந்தும் அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பான் என நம்பிக்கை வைப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்ஹுல் இஸ்லாம் - சுத்தம்

தொடர் : 09

I

S.H.M. இஸ்மாயீல்

# குளிப்பு

இஸ்லாமிய சட்டத்தில் குளிப்பு என்பது குளிக்கும் நிய்யத்துடன் உடல் முழுவதும் சுத்தமான தண்ணீரை ஓடவிடுவதைக் குறிக்கும். இஸ்லாமிய சட்டப்பிரகாரம் குளிப்பைப் பின்வரும் அம்சங்கள் கட்டாயமாக்கும்.

## 1. விந்து வெளிப்படுதல்:

ஆணுக்கோ, பெண்ணுக்கோ உறக்கத்திலோ, விளிப்பிலோ விந்து வெளிப்பட்டால் குளிப்பது கடமையாகிவிடும்.

**"நீர் வெளிப்பட்டால் நீரே அதற்குப் பரிகாரமாகும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."**

(அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரி(ரழி), ஆதாரம்: முஸ்லிம்- 343-80)

**"உம்மு சுலைம்(ரழி) அவர்கள் நபி(ﷺ) அவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக அல்லாஹ் சத்தியத்தைச் சொல்வதற்கு வெட்கப்படுவதில்லை. ஒரு பெண்ணுக்கு (தூக்கத்தில்) இஸ்கலிதமானால் அவள் மீது குளிப்புக் கடமையாகுமா?' எனக் கேட்டார்கள். அதற்கு நபி(ﷺ) அவர்கள் 'ஆம் (இஸ்கலிதமான) ஈரத்தைக் கண்டால்' எனப் பதிலளித்தார்கள்."**

அறிவிப்பவர்: உம்மு ஸலமா(ரழி),
ஆதாரம்: புஹாரி- 282, 3328, 6091, 6121,
முஸ்லிம்: 738

1. ஒருவர் தூக்கத்தில் இஸ்கலிதமாகி அவர் சந்தேகம் கொண்டு அதற்கான ஈரத்தையோ, அடையாளத்தையோ ஆடையில் காணாவிட்டால் அவர் மீது குளிப்புக் கடமையில்லை.
2. தூக்கத்திலிருந்து ஒருவர் விழிக்கிறார். அவர் இஸ்கலிதமானதாக அவர் எண்ணவில்லை. இருப்பினும் அவரது ஆடையில் ஈரமோ அல்லது விந்துவின் அடையாளமோ இருந்தால் அவர் குளிப்பது கட்டாயம் ஆகும்.

ஒருவர் தூங்கி எழுந்து தொழுது முடிந்த பின்னர்தான் ஆடையில் இஸ்கலிதமான அடையாளத்தைக் காண்கின்றார். இவர் குளித்துவிட்டு கடைசியாகத் தூங்கி எழுந்த பின்னர் தொழுத தொழுகையையே மீட்டித் தொழ வேண்டும்.

## 2. இல்லறத்தில் ஈடுபடல்:

இல்லறத்தில் கணவன், மனைவி ஈடுபட்டால் குளிப்பது இருவர் மீதும் கடமையாகிவிடும். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் விந்து வெளிப்பட்டால்தான் குளிப்பது கடமை என்றிருந்தது. பின்னர் அந்தச் சட்டம் மாற்றப்பட்டு விந்து வெளிப்படா விட்டாலும் குளிப்பது கடமை என்று சட்டம் விதிக்கப்பட்டது.

**"ஒருவர் தம் மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபட்டு விட்டாலே குளிப்பு கடமையாகிவிடும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி),
ஆதாரம்: புஹாரி- 291

உடலுறவின் மூலம் குளிப்புக் கடமையாகும் என்பது ஏகோபித்த முடிவாகும் என இமாம் நவவீ(ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

கணவனும் மனைவியும் உடலுறவில் ஈடுபடாமல் இன்பமாக இருந்தால் குளிப்புக் கடமையாகாது. இவ்வாறு ஈடுபடும் போது ஒருவருக்கு விந்து வெளிப்பட்டால் வெளிப்பட்டவர் மீது மட்டும் குளிப்புக் கடமையாகும்; ஆனால் அடுத்தவர் மீது கடமையாகாது. தாம்பத்திய உறவில் ஈடுபட்டுவிட்டால் விந்து வெளிப்பட்டாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படாவிட்டாலும் இருவர் மீதும் குளிப்புக் கடமையாகிவிடும்.

கணவன் தாம்பத்தியத்திற்கு அழைத்தால் குளிக்கத் தண்ணீர் இல்லை அல்லது தன்னால் குளிக்க முடியாது என்பதற்காக அழைப்பை மனைவி மறுக்கக் கூடாது. இது குறித்து இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) குறிப்பிடும் போது,

**"கணவன் தாம்பத்தியத்திற்காக அழைத்தால் மனைவி அதை மறுக்கலாகாது. உறவுகொண்டுவிட்டு குளிக்க முடிந்தால் குளிக்க வேண்டும். முடியாவிட்டால் தயம்மும் செய்து தொழ வேண்டும்"** எனக் குறிப்பிடுகின்றார்கள்.

(பதாவா: 21/454)

### 3. மரணம்:

மரணித்த முஸ்லிமைக் குளிப்பாட்டுவது உயிருடன் இருக்கின்ற முஸ்லிம்கள் மீது கடமையாகும். மரணம் குளிப்பைக் கடமையாக்கும் என்ற அடிப்படையில் இங்கே கூறப்படுகின்றது. இந்த சட்டத்திலிருந்து போரில் கொல்லப்பட்ட ஷஹீதுகள் விதிவிலக்குப் பெறுவர். நபியவர்கள் ஜனாஸாவைக் குளிப்பாட்டக் கூறிய ஹதீஸ்கள் அனைத்தும் இதற்கான ஆதாரமாகும்.

### 4-5. மாதவிடாய், பிள்ளைப்பேறு இரத்தம் நின்றுவிடுதல்:

மாதவிடாய் ஏற்பட்டு அது நின்றதும் பெண்கள் குளித்துச் சுத்தமாகுவது கட்டாயமாகும். இதே சட்டம்தான் 'நிபாஸ்' எனப்படும் பிள்ளைப் பேறு இரத்தத்திற்கும் பொருந்தும். இது குறித்து தனித்தலைப்பில் ஆராயப்படும். (இன்ஷா அல்லாஹ்!)

### 6. காபிர் இஸ்லாத்தை ஏற்றல்:

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றால் குளிப்பது கடமையா? இல்லையா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உள்ளது. இஸ்லாத்தை ஏற்பவர் முழுக்காளியான நிலையில் இஸ்லாத்தை ஏற்றாலே தவிர குளிப்புக் கடமையில்லை எனக் கூறும் அறிஞர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**"கைஸ் இப்னு ஆஸிம்(ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற போது இலந்தை இலை கலந்த நீரால் குளிக்குமாறு அவருக்கு நபி(ஸல்) அவர்கள் ஏவினார்கள்."** திர்மிதி: 605, நஸாஈ: 188, அஹ்மத்: 20887~20611, இப்னு ஹிப்பான்: 1240

இந்த அறிவிப்பு ஸஹீஹானது என அறிஞர் அல்பானி(ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

இங்கே நபியவர்கள் ஏவினார்கள் என்பதை "கட்டளைகள் கடமையைக் குறிக்கும்" என்ற அடிப்படையில் குளிப்பு கடமை என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த ஹதீஸைப் பதிவு செய்த இமாம் திர்மிதீ(ரஹ்) அவர்கள் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினால் அவர் குளித்துக் கொள்வதோடு தனது ஆடையையும் கழுவிக் கொள்வது முஸ்தஹப்பானது என அறிஞர்கள் கருதினர் என்று குறிப்பிடு கின்றார்கள்.

இஸ்லாத்தை ஏற்கும் முன்னர் குளிப்பது என்பது அறியப்பட்ட வழிமுறையாக இருந்துள்ளது. அபூஹுரைரா(ரழி) அவர்களின் தாயார், துமாமா, உஸைன் இப்னு ஹுஜைர் போன்றோர் இஸ்லாத்தை ஏற்கும் முன்னர் குளித்ததாக அறிவிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஒருவர் இஸ்லாத்தை ஏற்கப்போகின்றேன் என்று கூறும் போது போய் குளித்துவிட்டு வா! என்று கூற வேண்டியதில்லை. ஏற்ற பின்னர் குளிக்க வழிகாட்டுவது ஏற்றமானதாகும்.

## சுன்னத்தான குளிப்புக்கள்:

சில சந்தர்ப்பங்களில் குளிப்பது சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் வலியுறுத்தப்பட்டும் உள்ளது.

### 1. ஜும்ஆவுடைய குளிப்பு:

வெள்ளிக்கிழமை தினத்தில் ஜும்ஆவுக்காகக் குளிப்பது வலியுறுத்தப் பட்டதாகும். அபூஹுரைரா, அம்மார் இப்னு யாஸிர், அபூஸயீதுல் குத்ரி(ரழி) போன்ற நபித்தோழர்களும் மற்றும் பல அறிஞர்களும் வெள்ளிக்கிழமைக் குளிப்பை வாஜிபானது என்று கூறுகின்றனர்.

**"உங்களில் ஜும்ஆவுக்கு வருபவர் குளித்துக் கொள்ளட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்."**

அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி),

ஆதாரம்: புஹாரி~ 894



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜும்ஆ நாளில் குளிப்பது பருவ வயதை அடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்."

அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரி(ரலி),
ஆதாரம்: புஹாரி- 895

இது குறித்து இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் விளக்கும் போது, "ஜும்ஆவுடைய தினத்தில் குளிப்பது கட்டாயமில்லை. இருப்பினும் நான் அதை விரும்புகின்றேன். ஆரம்பத்தில் மஸ்ஜித் அதிக நெருக்கமாக இருந்தது. மக்கள் கம்பளி ஆடை அணிந்து வந்தனர். அவர்கள் சிரமப்பட்டு பணி புரிந்துவிட்டு வந்தனர். இதனால் மஸ்ஜிதில் வியர்வை நாற்றம் எடுத்தது. எனவே, நபியவர்கள் குளித்துவிட்டு வருமாறு ஏவினார்கள்." என்று குறிப்பிடுகின்றார். இதிலிருந்து குளிப்பது கடமையில்லை என்பதை அறியலாம்.

பார்க்க: முஃஜமுல் கபீர் தபராணி- 11548

## 2. இரு பெருநாட்களிலும் குளித்தல்:

"அலி(ரலி) அவர்களிடம் ஒருவர் குளிப்பதைப் பற்றி வினவினார்கள். முடிந்தால் ஒவ்வொரு நாளும் குளித்துக்கொள் என்றார்கள். அதற்கவர் இல்லை, அவசியம் குளிக்க வேண்டிய குளிப்புக்கள் பற்றிக் கூறுங்கள் என்று கேட்ட போது, 'வெள்ளிக்கிழமை, (ஹாஜிகளுக்கு) அரபாவுடைய நாள், ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள் தினங்களில் குளிக்க வேண்டும் என்று கூறினார்கள்."

பைஹகி: 3032, 3126,
ஷரஹ் மஆனியல் ஆதார்: 679

இந்த அதரின் (ஸஹாபியின் கூற்று) அடிப்படையில் பெருநாள் குளிப்பை சுன்னத்தான குளிப்பாகக் கருதுகின்றனர்.

## 3. அறபாவுடைய குளிப்பு:

ஹஜ் செய்பவர்கள் அறபாவுடைய தினத்தில் குளிப்பது ஏற்றமானதாகும். இதற்கு அலி(ரலி) அவர்களின் முன்னைய கூற்றே ஆதாரமாக அமைந்துள்ளது.

## 4. இஹ்ராம் அணிபவர் குளித்தல்:

"நபியவர்கள் இஹ்ராம் அணியும் முன்னர் குளித்தார்கள்."

பார்க்க: திர்மிதி-830, இப்னு குஸைமா- 2595)

## 5. ஜனாஸாவைக் குளிப்பாட்டியவர்:

ஜனாஸாவைக் குளிப்பாட்டியவர் குளிக்க வேண்டும் என்ற கருத்தில் ஹதீஸ்கள் வந்துள்ளன. அவை குளிப்பாட்டியவர் குளித்துக் கொள்வது நல்லது என்ற கருத்தில் அமைந்துள்ளன. இது குறித்த ஹதீஸ்கள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன.

## 6. மக்காவுக்குள் நுழையும் போது:

"இப்னு உமர்(ரலி) மக்காவின் எல்லையை நெருங்கிவிட்டால் தல்பியாவை நிறுத்திவிடுவார். பின்னர் 'துவா' எனும் இடத்தில் தங்கி சுப்ஹு தொழுதுவிட்டு குளிப்பார்கள். நபியவர்கள் இவ்வாறே செய்தார்கள் என்றும் கூறுவார்."

அறிவிப்பவர்: நாபிஃ(ரஹ்),
ஆதாரம்: புஹாரி- 1573

## 7. ஒரு முறை உறவு கொண்டவர் மறுமுறை இன்னொரு மனைவியுடன் உறவு கொள்வதற்கு முன்:

நபியவர்கள் ஒரே இரவில் தமது மனைவியருடன் (தனித்தனியாக) இல்லறத்தில் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு மனைவியிடம் செல்லும் போதும் குளித்துக்கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் ஒன்றாகக் குளித்தால் என்ன? என்று வினவப்பட்டதற்கு இவ்வாறு செய்வது சுத்தமானது; தூய்மையானது; பரிசுத்தமானது என்று கூறினார்கள்."

அறிவிப்பவர்: அபூராபிஃ,
ஆதாரம்: இப்னுமாஜா-590

இதை இமாம் அல்பானி ஹஸன் என்று கூறுகின்றார்.

## 8. முஷ்ரிக்கைப் புதைத்தவர்:

"அலி(ரலி) அவர்களின் தந்தை முஷ்ரிக்காக மரணித்தார். இது பற்றி அலி(ரலி) அவர்கள் நபியவர்களிடம் கூறிய போது நீ போய் அவரைப் புதை! என நபியவர்கள் கூறினார்கள். அடக்கம் செய்த பின்னர் நபியவர்களிடம் வந்தேன்; குளித்துக் கொள் என்று கூறினார்கள்."

அறிவிப்பவர்: அலி(ரலி),
ஆதாரம்: நஸாஈ- 190, அஹ்மத்- 759, 807, 1093)

இதை அல்பானீ "ஹஸன்" என்று கூறுகின்றார்.


இன்ஷா அல்லாஹ் தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல் குர்ஆனும், ஸுன்னாவும் முரண்படுமா?

தொடர் 11



# வழிகேடனின் கருத்தில் அறிவியல் மோசடி

ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற நூலில் ஹதீஸ்களை மறுக்கும் வழிகேட்டுக்குத் துணையாக முன்வைக்கப்பட்ட போலியான ஆதாரங்கள் குறித்து அலசி வருகிறோம்.

1. "உமர்(ரழி) அவர்கள் கடைப்பிடித்த வழிமுறை" எனும் தலைப்பில் உமர்(ரழி) அவர்கள் சம்பந்தப்பட்ட அறிவிப்பில் நூலாசிரியர் செய்த இருட்டடிப்பு சம்பந்தமாகவும்,

2. "ஆயிஷா(ரழி) அவர்களின் வழிமுறை" என்ற தலைப்பில், மரணித்தவர்களுக்காக மக்கள் (ஒப்பாரி) வைத்து அழுவதால் மையித்து வேதனை செய்யப்படுகின்றது என்ற செய்தியைக் குர்ஆனுக்கு முரண்படுவதாகக் கூறி ஆயிஷா(ரழி) அவர்களை விமர்சித்தது குறித்து நூலாசிரியர் எழுப்பியுள்ள வாதங்கள்.

என்பவற்றிற்கு முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்களது நூலுக்குப் பதிலளிக்கும் போது விளக்கமளித்துள்ளோம். இவர்கள் இஹ்வானிய நூலைப் பார்த்து அதில் உள்ள வாதங்களைத்தான் முன் வைத்துள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

3. "இமாம் இஸ்மாஈலீ அணுகிய முறை" என்ற தலைப்பில் நூலாசிரியர் எழுதிய செய்திக்கான மறுப்பையும் இமாம் இஸ்மாஈலியின் விளக்கம் தவறானது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

4. "இமாம் குர்துபீயின் கூற்று" என இமாம் குர்தூபீயின் கருத்துக்கு மாற்றமான கருத்தைத் திணித்து நூலாசிரியர் செய்த அறிவியல் மோசடி குறித்தும் விரிவாகப் பார்த்தோம்.

5. இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களை மறுக்கும் வழிகேட்டை வன்மையாகக் கண்டிக்கும் ஒரு இமாமாவார்கள். இமாமவர்களது கருத்துக்கு மாற்றமான நிலைப்பாட்டை "இமாம் இப்னு தைமிய்யாவின் வழிமுறை" எனும் தலைப்பின் மூலம் எடுத்து வைத்துச் செய்த அறிவியல் மோசடி குறித்தும் விரிவாகப் பார்த்தோம்.

இமாம்கள் பெயரில் நூலாசிரியர் செய்த மற்றும் சில மோசடிகள், சதிகள் குறித்து தொடர்ந்து நோக்குவோம். முஹம்மத் பின் அப்துல்லாஹ் என்பவன் ஒரு வழிகேடனாவான். அவனுக்கு பல இமாம்களும் மறுப்புக் கூறியுள்ளனர். அவர்களில் இப்னு ஹஸ்ம் அவர்களும் ஒருவராவார். அவனது கருத்துக்கு இமாம் மறுப்புக் கூறுவதற்காக எடுத்து எழுதியதை இமாம் இப்னு ஹஸ்ம் சரிகண்டது போல் எழுதி மோசடி செய்துள்ளனர்.

"முஹம்மது பின் அப்துல்லாஹ்வின்" கூற்று என்ற தலைப்பில் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற நூலில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

**"முஹம்மது பின் அப்தில்லாஹ்வின் கூற்று:**

**இந்த அறிஞரின் கூற்றை இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள் அல்இஹ்காம் என்ற தன்னுடைய நூலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்.**

**முஹம்மது பின் அப்தில்லாஹ் கூறுகின்றார்: ஹதீஸ் மூன்று வகையாகும்.**

**1. குர்ஆனுக்கு ஒத்து அமைகின்ற ஹதீஸ். இதை ஏற்றுக் கொள்வது கட்டாயம்.**

**2. குர்ஆனில் இருப்பதை விட கூடுதலான தகவலைத் தருகின்ற ஹதீஸ். இதையும் குர்ஆனுடன் இணைத்து ஏற்றுக் கொள்வது கட்டாயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குர்ஆனுடைய கருத்துக்கு முரணாக வரும் ஹதீஸ். இது ஒதுக்கப்பட வேண்டியது. (நூல்: அல்இஹ்காம், பாகம்-2, பக்கம்- 209))”
(ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா?: பக்கம்-17)

இந்த இடத்தில் நூலாசிரியர் செய்த பல்வேறுபட்ட அறிவியல் அயோக்கியத் தனத்தையும் அமானித மோசடியையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1. மேலே நூலாசிரியர் எழுதியதைப் பார்க்கும் போது, இமாம் இப்னு ஹஸ்ம்(ரஹ்) அவர்கள் இந்தக் கருத்தைச் சரி கண்டு அவரது நூலில் பதிவு செய்திருப்பதாகவே எவரும் நினைப்பர். இது ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற நூலின் ஆசிரியரின் சித்து விளையாட்டுக்களில் ஒன்றாகும்.

ஆனால், இமாம் இப்னு ஹஸ்ம்(ரஹ்) அவர்கள் முஹம்மது பின் அப்துல்லாஹ்வின் கூற்றைத் தனது நூலில் குறிப்பிட்டு அதற்கு மறுப்பு எழுதுகின்றார்கள். அவர் மறுத்து எழுதியிருக்க பாமர மக்களை மட்டுமல்லாது அறிஞர்களையும் ஏமாற்றும் விதத்தில் மோசடி செய்துள்ளார்.

உதாரணமாக, தற்போது பல தாஈக்களும் வழிகெட்ட கொள்கையாளர்களின் கூற்றுக்களைக் குறிப்பிட்டு மறுப்பு எழுதுகின்றனர். ஒருவர் தர்கா வழிபாட்டுக்கு ஆதாரம் காட்டும் போது இந்த தாஈக்கள் மறுப்பு எழுதுவதற்காக தர்காவாதியின் கூற்றை ஒரு நூலில் குறிப்பிட்டுள்ளார் என்று வைத்துக் கொள்ளுங்கள். தர்கா வழிபாடு செய்யும் ஒருவர் மறுப்பு எழுதுவதற்காக இந்த தாஈக்கள் எழுதியதை ஆதாரமாக எழுதிவிட்டு அவரின் நூலை ஆதாரமாகக் காட்டினால் இது அயோக்கியத்தனமா? இல்லையா? இந்த வேலையைத்தான் நூலாசிரியர் செய்துள்ளார்.

இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் முஹம்மது பின் அப்துல்லாஹ்வின் கூற்றைப் பதிவு செய்துவிட்டு பின்வருமாறு குறிப்பிடு கின்றார்கள்.

قال علي بن أحمد لا سبيل إلى وجود خبر صحيح مخالف لما في القرآن أصلا وكل خبر شريعة فهو إما مضاف إلى ما في القرآن ومعطوف عليه ومفسر لجملته وإما مستثنى منه لجملته ولا سبيل إلى وجه ثالث

**மொழிபெயர்ப்பு:** ஸஹீஹான அறிவிப்பு குர்ஆனுக்கு எந்த வகையிலும் முரணாக இருக்க வழியே இல்லை என இமாம் அலி இப்னு அஹ்மத்(ரஹ்) கூறுகின்றார்கள். (மேலும்) ஷரீஆவின் ஒவ்வொரு செய்தியும் குர்ஆனுடன் இணைந்ததாக இருக்கும். மேலும் பொதுவாகச் சொல்வதை விபரிப்பதாக இருக்கும். அல்லது விதிவிலக்கு அளிப்பதாக இருக்கும். மூன்றாவதொன்றாக இருக்க வாய்ப்பே இல்லை. இவ்வாறு எழுதிவிட்டு தொடர்ந்தும்,

وقد سألت بعض من يذهب هذا المذهب عن قول الله تعالى وقد ذكر النساء المحرمات في القرآن ثم قال تعالى

وَالْمُحْصَنٰتُ مِنَ النِّسَآءِ اِلَّا مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ۚ كِتٰبَ اللّٰهِ عَلَيْكُمْ ۚ وَاُحِلَّ لَكُمْ مَّا وَرَآءَ ذٰلِكُمْ اَنْ تَبْتَغُوْا بِاَمْوَالِكُمْ مُّحْصِنِيْنَ غَيْرَ مُسٰفِحِيْنَ ؕ فَمَا اسْتَمْتَعْتُمْ بِهٖ مِنْهُنَّ فَاٰتُوْهُنَّ اُجُوْرَهُنَّ فَرِيْضَةً ؕ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا تَرٰضَيْتُمْ بِهٖ مِنْۢ بَعْدِ الْفَرِيْضَةِ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ﴿۲۴﴾

ثم روى أبو هريرة وأبو سعيد أنه عليه السلام حرم الجمع بين المرأة وعمتها والمرأة وخالتها وليس هذا إجماعا فعثمان البتي وغيره يرون الجمع بين المرأة وعمتها والمرأة وخالتها حلالا

**மொழிபெயர்ப்பு:** இந்தப் போக்கில் உள்ளவர்கள் சிலரிடம் நான் பின்வருமாறு கேட்டேன். குர்ஆனில் திருமணம் முடிக்கத் தடுக்கப்பட்ட பெண்கள் பற்றிக் கூறப்பட்டு அதன் பின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேலும், உங்களின் அடிமைப் பெண்களைத் தவிர கணவனுள்ள பெண்களும் (மணமுடிக்க விலக்கப்பட்டுள்ளனர். இவை) அல்லாஹ் உங்கள் மீது விதித்த கடமையாகும். இவர்களைத் தவிர ஏனையோரை நீங்கள் விபச்சாரத்தில் ஈடுபடாதவர்களாகவும், கற்பொழுக்கம் உடையவர்களாகவும், உங்கள் செல்வங்களை(மஹராக)க் கொடுத்து அடைந்து கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவர்களில் எவருடன் நீங்கள் இன்பம் அனுபவிக்கின்றீர்களோ, அதற்காக அவர்களின் மணக் கொடைகளைக் கட்டாயமாக அவர்களிடம் கொடுத்து விடுங்கள். (அதனை) நிர்ணயித்த பின் நீங்கள் ஒருவருக்கொருவர் (கூட்டவும், குறைக்கவும்) சம்மதித்துக் கொண்டதில் உங்கள் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானமிக்க வனாகவும் இருக்கின்றான்." (4:24)

என்று அல்லாஹ் கூறுகின்றான். இதன் பின் அபூஹுரைரா(ரழி), அபூஸயீத்(ரழி) ஆகியோர் ஒரு பெண்ணையும் அவளது சாச்சியையும், ஒரு பெண்ணையும் அவளது மாமியையும் ஒரே நேரத்தில் திருமணம் முடிப்பதை நபி(ஸல்) அவர்கள் தடுத்ததாக அறிவிக்கின்றார்கள். இது இஜ்மாவான கூற்று அல்ல. உஸ்மான் அல்பத்தா மற்றும் சிலர் ஒரு பெண்ணையும் அவளது சாச்சியையும் அல்லது மாமியையும் மணமுடிப்பது ஹலாலானது என்கின்றார்கள். (இவ்வாறு கூறினால் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸை ஏற்க முடியாது என்ற தவறான கருத்தில் உள்ளவர்கள்.)

فقال لي ليس هذا الحديث خلافا للآية لكنه مضاف إليها فقلت له فعلى هذا لا سبيل إلى وجود حديث مخالف لما في القرآن أصلا وكل حديث أتى فهو مضاف إلى ما في القرآن ولا فرق وبالله تعالى التوفيق

**கருத்து:** இந்த ஹதீஸ் மேற்படி வசனத்திற்கு முரணானது அல்ல. இந்த ஹதீஸையும் அந்த ஆயத்துடன் இணைத்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்கள். அப்போது அவருக்கு நான் "இவ்வாறு ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்பட எந்த வாய்ப்பும் இல்லை. முரண்படுகின்றது என்று கொண்டுவரப்படக் கூடிய ஹதீஸ்கள் அனைத்தும் குர்ஆனுடன் இணைத்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும். இதில் வேறுபாடு இல்லை. வபில்லாஹித் தஆலா தவ்பீக்! அல் இஹ்காம், இப்னு ஹஸ்ம் (ரஹ்) (2:209)

இவ்வளவும் இருக்க இமாமவர்களும் தமது கருத்தில் இருப்பது போல் ஏமாற்று வேலை செய்துள்ள இந்த நூலாசிரியரை நம்பி இவர்கள் பின்னால் செல்ல முடியுமா?

முஹம்மத் பின் அப்துல்லாஹ் ஒரு அறிஞர். இந்த அறிஞரின் கூற்றை இமாம் இப்னு ஹஸ்ம் தன்னுடைய நூலில் பதிவு செய்துள்ளார் என்றே ஆரம்பிக்கின்றார் நூலாசிரியர். 'இமாமவர்கள் முஹம்மத் பின் அப்துல்லாஹ்வை எதிர்த்தவர்களில் ஒருவர். இது பற்றி இமாமவர்கள் குறிப்பிடும் போது,

وكان محمد بن عبد الله بن مسرة بن نجيح الأندلسي يوافق المعتزلة في القدر وكان يقول أن علم الله وقدرته صفتان محدثتان مخلوقتان وأن لله تعالى علمين أحدهما أحدثه جملة وهو علم الكتاب وهو علم الغيب كعلمه أنه سيكون كفار ومؤمنون والقيامة والجزاء ونحو ذلك والثاني علم الجزئيات وهو علم الشهادة وهو كفر زيد وإيمان عمر ونحو ذلك فإنه لا يعلم الله تعالى من ذلك شيئا حتى يكون وذكر قول الله تعالى عالم الغيب والشهادة

(الفصل في الملل 4 / 150)

முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் முஸிர்ரா இப்னு நஜீஹ் அல் அந்தலூஸி ஆகிய இவர் கத்ர் விடயத்தில் முஃதஸிலாக்களுக்கு உடன்படக் கூடியவராக இருந்தார். அல்லாஹ்வின் இல்ம், குத்ரத் எனும் இரு பண்புகளும் புதிதாக உருவாகக் கூடிய படைக்கப்பட்ட பண்புகள் என்று கூறுபவராக இருந்தார். அல்லாஹ்வுக்கு இரண்டு விதமான அறிவு இருப்பதாகவும் அதில் ஒரு வகை நடக்கும் வரைக்கும் அதைப் பற்றி அல்லாஹ் அறிய மாட்டான் என்றும் கூறுபவராக இருந்தார். (சுருக்கம்: இமாம் இப்னு ஹஸ்ம் அவர்களது அல் பஸ்ல் பில் மிலல் -4/150)

இவ்வாறு வழிகேடன் என இப்னு ஹஸ்ம் கண்டித்து, அவனது கருத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாமவர்கள் மறுப்புக் கூறியிருக்க, அதை நூலாசிரியர் எடுத்து முன்னாலும் பின்னாலும் வெட்டி தனக்கு ஆதாரமாகக் காட்டியுள்ளார் என்றால் இது எவ்வளவு பெரிய மோசடி என்று சிந்தித்துப் பாருங்கள்.

**தெரியாமல் நடந்ததா?**

இவர் ஒரு வழிகேடர் என்று தெரிந்து கொண்டுதான் இந்தத் தில்லுமுல்லைச் செய்துள்ளார். ஏனெனில், ஏனைய அறிஞர்கள் பற்றிக் கூறும் போது,

இமாம் ஷாபிஃயின் கூற்று, இமாம் குர்தூபின் கூற்று - (பக்கம்: 16)

இமாம் ஜுர்ஜானியின் கூற்று, இமாம் சுயூத்தியின் கூற்று - (பக்கம்: 17)

இமாம் இஸ்மாயீலீ அனுகிய முறை - (பக்கம்: 18), இமாம் இப்னு தைமிய்யாவின் வழிமுறை - (பக்கம்: 21)

இவ்வாறு எல்லோருக்கும் இமாம் எனப் போட்ட நூலாசிரியர் இவருக்கு மட்டும் மொட்டையாகப் பெயரைப் போட்டுள்ளார்.

இவர்கள் ஆதாரமாகக் காட்டிய அந்த முஹம்மத் பின் அப்துல்லாஹ் பற்றிய ஏனைய அறிஞர்களின் கூற்றுக்களைப் பாருங்கள்.

"அல் அஃலாம்" என்ற நூலில் இவர் பற்றி குறிப்பிடப்படும் போது,

**ابن مسرة (هـ = 883- 931 م 319 - 269)**

محمد بن عبد الله بن مسرة، أبو عبد الله: متصوف متفلسف أندلسي، من دعاة الإسماعيلية.

من أهل قرطبة.قال الحميدي: (له طريقة في البلاغة وتدقيق في غوامض إشارات الصوفية، وتآليف في المعاني، ونسبت إليه بذلك مقالات نعوذ بالله منها !) وقال ابن الفرضي: (اتهم بالزندقة فخرج فارا، وتردد بالمشرق مدة، ثم انصرف إلى الاندلس. وكان يحرف التأويل في كثير من القرآن، وقد رد عليه جماعة من أهل المشرق). وفي تاريخ قضاة الأندلس أن القاضي ابن زرب وضع كتابا في الرد على ابن مسرة، واستتاب بعض أتباعه، و(أحرق ما وجد عندهم من كتبه وأوضاعه

**மொழிபெயர்ப்பு:**

(இப்னு முஸிர்ரா ஹி. 883-931, 269-319)

முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் பின் முஸிர்ரா அபூஅப்துல்லாஹ். இவர் ஒரு சூபியாவார். அந்துனூஸைச் சேர்ந்த தத்துவ வாதியாவார். ஷீஆக்களைச் சேர்ந்த இஸ்மாயீலிய்யா பிரிவின் பிரச்சாரகர்களில் ஒருவராவார்.

குர்துபாவாசிகளைச் சேர்ந்த ஹுமைதி கூறுகின்றார், அவருக்கு அறபு அணி இலக்கணத்தில் ஒரு வழி உண்டு. சூபித்துவப் போக்கில் மிக நுட்பமான அறிவுண்டு. அணி இலக்கணம் எனும் கலையில் அவருக்கு அதிக தொகுப்புக்கள் உண்டு. இதனால் பல கதைகள் அவருக்கு சேர்க்கப்பட்டுள்ளது. இவைகளில் இருந்து அல்லாஹ் எம்மைப் பாதுகாக்க வேண்டும். இப்னு பர்ழீ என்பவர் கூறுகின்றார்,

மார்க்கமில்லாதவர் என்று சந்தேகம் கொள்ளப்பட்டது. அதனால் அங்கிருந்து விரண்டோடி கிழக்குப் பகுதியில் சில காலம் சுற்றித் திரிந்தார். பின்னர் ஸ்பெய்ன் (அன்துலூஸு)க்கு வந்தார். குர்ஆனில் அதிகமான இடங்களில் கருத்து மாற்றங்கள் செய்தார். கிழக்குப் பகுதியில் உள்ளவர்களில் ஒரு கூட்டம் அவருக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். ஸ்பெய்ன் நீதிபதிகள் வரலாற்றில் நீதிபதி "இப்னு ஸர்ப்" என்பவர் "இப்னு முஸிர்ரா"வுக்கு மறுப்பாக ஒரு புத்தகத்தை எழுதினார். அவரைப் பின்பற்றியோரில் சிலர் தவ்பா செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்

# குனூதுன் னவாஸில் ஓதலாமா?

### கேள்வி:

**முஸ்லிம் சமூகத்திற்குப் பிரச்சினைகள் ஏற்படும் போது எல்லாத் தொழுகைகளிலும் குனூத் ஓதப்படுகின்றதே இது சரியா? தவறா?**

### பதில்:

பிரச்சினைகள், சோதனைகளின் போது ஐவேளைத் தொழுகையிலும் ஓதப்படும் குனூத்துக்கு "குனூதுன்னவாஸில்" என்று கூறப்படும். இது மார்க்கத்தில் அங்கீகரிக்கப் பட்ட சுன்னாவாகவே உள்ளது.

நபி(ﷺ) அவர்கள் மக்காவில் வாழ்ந்த பலவீனமான முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக இந்த அடிப்படையில் துஆ ஓதியிருப்பதைப் பின்வரும் ஹதீஸ்கள் உணர்த்துகின்றன.

**"நபி(ﷺ) அவர்கள் இஷாத் தொழுகையின் இறுதி ரக்அத்தில் 'ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதா' கூறிய பின்னர் குனூத் ஓதினார்கள். அதில்,**

اللَّهُمَّ أَنْجِ عَيَّاشَ بْنَ أَبِي رَبِيعَةَ اللَّهُمَّ أَنْجِ الْوَلِيدَ بْنَ
الْوَلِيدِ اللَّهُمَّ أَنْجِ سَلَمَةَ بْنَ هِشَامٍ اللَّهُمَّ أَنْجِ الْمُسْتَضْعَفِينَ
مِنَ الْمُؤْمِنِينَ اللَّهُمَّ اشْدُدْ وَطْأَتَكَ عَلَى مُضَرَ اللَّهُمَّ
اجْعَلْهَا عَلَيْهِمْ سِنِينَ كَسِنِي يُوسُفَ

**யாஅல்லாஹ்! அய்யாஷ் இப்னு அபீ ரபீஆவைக் காப்பாற்றுவாயாக, யாஅல்லாஹ்! வலீத் இப்னு வலீதைக் காப்பாற்றுவாயாக, யாஅல்லாஹ்! ஸலமா இப்னு ஹிஷாமைக் காப்பாற்றுவாயாக, யாஅல்லாஹ்! நம்பிக்கையாளர்களில் உள்ள பலவீனர்களைக் காப்பாற்றுவாயாக, முழர் குலத்தார் மீது உனது பிடியை இறுக்குவாயாக! யூசுப் நபி காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போன்று இவர்களுக்கும் ஏற்படுத்துவாயாக! என்று பிரார்த்தித்தார்கள்."** (புஹாரி: 6393)

இந்த ஹதீஸை இணைவைப்பாளருக்கு எதிரான பிரார்த்தனை என்ற தலைப்பிலேயே இமாம் புஹாரி(ரஹ்) அவர்கள் இடம்பெறச் செய்துள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட ஹதீஸ் மூலம் பின்வரும் முடிவுகளை நாம் எடுக்கலாம்.

1. தேவையான சந்தர்ப்பங்களில் இவ்வாறு குனூத் ஓதலாம்.
2. அந்த துஆவில் தனிப்பட்டவர்களுக்காகவும் பொதுவாக முஸ்லிம்களுக்காகவும் பிரார்த்திக்கலாம்.
3. முஸ்லிம்களின் எதிரிகளுக்கு எதிராகப் பிரார்த்திக்கலாம்.
4. அந்தப் பிரார்த்தனையை சத்தமாகச் செய்யலாம்.

என்பன போன்ற பல அம்சங்களைப் புரிந்து கொள்ள்லாம். இது தொடர்பாக விரிவாக நோக்குவோம்.

இந்த நடைமுறை நபி(ﷺ) அவர்களுடைய வாழ்க்கையோடே முடிந்து விட்டதா என்று கேட்டால் இந்த ஹதீஸை அறிவிக்கும் அபூஹுரைரா(ரழி) அவர்கள்,

**"ழுஹர், இஷா, சுபஹ் தொழுகைகளில் கடைசி ரக்அத்துக்களில் ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா என்று கூறிய பிறகு,**

فَيَدْعُو لِلْمُؤْمِنِينَ وَيَلْعَنُ الْكُفَّارَ

**முஃமின்களுக்கு சாதகமாகப் பிரார்த்திப் பதுடன் இறை மறுப்பாளர்களை சபிப்பார்கள்."**

(புஹாரி: 797, முஸ்லிம்: 1576, அஹ்மத்: 7454, 7464)

நபி(ﷺ) அவர்கள் குனூத் ஓதிய ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளரே அது தொடராகப் பின்பற்றத்தக்க ஒரு வழிமுறைதான் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். அவர்களிடம் இருந்த இவரின் புத்தகங்கள், எழுத்துக்கள் அனைத்தும் எரிக்கப்பட்டன.

அல் அ்.லாம் லிஷ்ர்கலீ (6/223).

இதே கருத்து 'தாரீகுல் உலாமாஇ பில் அந்தலூஸ்' எனும் கிரந்தத்திலும் 2/41 இல் கூறப்பட்டுள்ளது. 'ஸியர் அ்.லாமின் னுபலா'வில் இவர் பற்றி கூறும் போது இவர் சூபி என்ற கருத்தும், கத்ரை மறுப்பவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டார் என்ற விபரமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (31/118)

مصادر الحافظ ابن الفرضي

என்ற நூலில் 1-165 இல் இவரிடம் மு்.தஸிலாக் கொள்கை இருந்ததாகவும்

كما يوجد عند ابن مسرة ميل واضح نحو الأخذ بعقائد غلاة الباطنية والصوفية ، وأقوال الفلاسفة في الصفات الإلهية وغيرها من الشطحات العقدية

**வரம்பு மீறிய பாதினியாக்கள், சூபிகளின் கொள்கைகளின் பால் தெளிவாகவே ஈடுபாடு உடையவராக இருந்தார். அத்துடன் அகீதாவுடைய விடயங்களில் இறை பண்புகள் விடயத்தில் கூட தத்துவவாதிகளின் தத்துவக் கருத்துக்களை எடுக்கக்கூடியவராக இருந்தார் என்றெல்லாம் விமர்சிக்கப்படுகின்றார்.**

**சூபித்துவம், கத்ர் மறுப்பு, மு்.தஸிலாக் கொள்கை, சீயாயிஸம், தவறான தத்தவக் கோட்பாடு என எல்லா வகையான வழிகெட்ட கொள்ளைகளினதும் ஒட்டுமொத்த வடிவமாகத் திகழும் ஒருவரைத் தான் தமது வழிகெட்ட கொள்கைக்கு ஆதாரமாக முன்வைத்துள்ளார். அதுவும் இவனைப் பகிரங்கமாக விமர்சித்த இமாம் இப்னு ஹஸ்ம் அவர்களின் பெயரிலேயே இந்த அறிவியல் துரோகத்தை அரங்கேற்றியுள்ளார். இமாமவர்கள் இவனது கருத்தை விமர்சிப்பதற்காக எடுத்துக் காட்டியுள்ளார்கள் என்ற உண்மையை மறைத்துவிட்டு, இவனது கருத்தை இமாம் சரிகண்டது போல் எடுத்துக் காட்டி மக்களை மடையர்களாக்க முயன்றுள்ளார் நூலாசிரியர். இதற்குப் பின்னரும் அனுவளவாவது அறிவு உள்ள எவராவது இப்படியெல்லாம் திருகுதாளங்கள் பண்ணி தமது கருத்தைத் திணிக்க முயலும் இவர்களுக்குப் பின்னால் செல்வார்களா?**

**'மு்.மிகள் சிந்தித்துணர்வார்கள்'**

## மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயிலுக்குள் இஸ்ரேல் இராணுவம் கலாட்டா!



**ஞாயிற்றுக்கிழமை (03.03.2013) இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படையினர் பாலஸ்தீனப் பெண்களைத் தாக்கியுள்ளார்கள். அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளியினுள் குர்ஆன் படித்துக்கொண்டிருக்கும் வேளையில் குறித்த அத்துமீறல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பலஸ்தீன ஆக்கிரமிப்பு பூமியின் முகாரபா நுழைவாயிலில் வைத்தே இந்த நிகழ்வு நடந்திருக்கிறது.**

**இது குறித்து அங்கு குர்ஆன் படிக்க வந்த ஒரு பெண் கூறுகையில்,**

**நாங்கள் ஒவ்வொரு நாளும் குர்ஆனை பள்ளிவாசலுக்குள்ளேதான் படிக்கக்கூடியவர்களாக இருந்தோம். இன்றைய குர்ஆன் பாட ஹல்காவை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பொலிஸ் அதிகாரி சீர்குலைத்து அங்கு படித்துக் கொண்டிருந்த பெண்களைத் தாக்கினார். அவர்கள் வைத்திருந்த குர்ஆனை காலால் உதைபந்தாட்டம் ஆடினார். மற்றும் குர்ஆன் பிரதியை பூமியில் வீசினார். எங்களுக்கு பள்ளிவாசலுக்குள் இருப்பதற்கு அனுமதி அளிக்காது விரட்டி விட்டனர். குறிப்பாக முகாரபா எனும் நுழைவாயிலின் பக்கம் போக அனுமதியளிக்கவில்லை. ஆக்கிரமிப்பு குடியேறிகளும் சுற்றுலா செல்பவர்களும் அந்த நுழைவாயிலைப் பயன்படுத்துகிறார்கள். குறித்த அசம்பாவிதம் நடந்த பிறகு அல் அக்ஸா பகுதி மக்கள் பதற்ற நிலையில் உள்ளனர். (ஜே.எம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, "குனூதுன் நவாஸில்" தொடர்பில் பின்வரும் முடிவுகளை நாம் எடுக்கலாம்.

**1. குனூதுன் நவாஸில் ஓதுவது மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகும்.**

இமாம் இப்னு தைமிய்யா குனூத் பற்றிப் பேசும் போது பின்வருமாறு கூறுகின்றார்கள்.

وَالْقَوْلُ الثَّالِثُ : أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَنَتَ لِسَبَبٍ نَزَلَ بِهِ ثُمَّ تَرَكَهُ عِنْدَ عَدَمِ ذَلِكَ السَّبَبِ النَّازِلِ بِهِ فَيَكُونُ الْقُنُوتُ مَسْنُونًا عِنْدَ النَّوَازِلِ وَهَذَا الْقَوْلُ هُوَ الَّذِي عَلَيْهِ فُقَهَاءُ أَهْلِ الْحَدِيثِ وَهُوَ الْمَأْثُورُ عَنْ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ رَضِيَ اللَّهُ عَنْهُمْ فَإِنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ لَمَّا حَارَبَ النَّصَارَى قَنَتَ عَلَيْهِمْ الْقُنُوتَ

மூன்றாவது கூற்று நபி(ﷺ) அவர்கள் ஏதேனும் ஒரு பாதிப்பு ஏற்படும் போது குனூத் ஓதினார்கள். அந்தப் பாதிப்பு நீங்கியதன் பின் ஓதுவதை விட்டுவிட்டார்கள் என்பதாகும். ஹதீஸ் துறை சார்ந்த பிக்ஹுடைய அறிஞர்கள் இந்தக் கருத்தைத்தான் சரிகாண்கின்றார்கள். குலபாஉர் ராஷிதூன்கள் மூலமாகவும் இது நடைமுறையில் வந்துள்ளது. கிறிஸ்தவர்கள் போரிட்ட போது உமர்(رضي الله عنه) அவர்கள் அவர்களுக்கு எதிராகக் குனூத் ஓதியுள்ளார்கள்.

(மஜ்முஉல் பதாவா, அல் அக்வால் பில் குனூத் 23/108)

**2. இந்த குனூத் ஐவேளைத் தொழுகையிலும் கடைசி ருகூவிற்குப் பின்னர் ஓதப்படும்.**

இஃதிதாலில் ஏன் துஆ ஓதப்படும் என்பது பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர்(ரஹ்) அவர்கள் கூறும் போது,

لي أن الحكمة في جعل قنوت النازلة في الاعتدال دون السجود مع أن السجود مظنة الإجابة كما ثبت أقرب ما يكون العبد من ربه وهو ساجد وثبوت الأمر بالدعاء فيه أن المطلوب من قنوت النازلة أن يشارك المأموم الإمام فى الدعاء ولو بالتأمين ومن ثم اتفقوا على أنه يجهر به

**"சுஜூதில் கேட்கப்படும் துஆ விரைவாக அங்கீகரிக்கப்படும் என்றிருக்கும் போது இஃதிதாலில் குனூத் ஓதப்பட வேண்டும் என்று ஏன் ஆக்கப்பட்டுள்ளதென்றால் துஆவில் இமாமுடன் மஃமூம்களும் ஆமீன் கூறுவதன் மூலமாகவது பங்கேற்க வேண்டும் என்பதற்காகத்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகின்றது. அத்துடன் குனூதுன் நவாஸில் சத்தமாக ஓதப்பட வேண்டும் என்பதில் ஏகோபித்த முடிவில் உள்ளனர்."**

(பார்க்க: பத்ஹுல் பாரி 2/491)

**3. சுன்னத்தான தொழுகைகளிலும் ஜும்ஆத் தொழுகைகளிலும் இந்தக் குனூத்தை ஓதுவதில் சர்ச்சை உள்ளது.**

ஷைஹ் ஸாலிஹ் அல் உதைமீன்(ரஹ்) அவர்கள் ஜும்ஆவில் குனூத் ஓதலாம் என்று கூறுகின்றார்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்), இப்னுல் முன்திர்(ரஹ்) போன்றோர் ஜும்ஆவில் குனூத் ஓதப்பட்டதாக எந்த ஆதாரமும் இல்லாததால் ஜும்ஆவில் குனூத் ஓதப்பட மாட்டாது என்று கூறுகின்றனர்.

அறிஞர் இப்னு அப்தில்பர் (ரஹ்) அவர்கள் **"நபி(ﷺ) அவர்கள் ஜும்ஆவில் குனூத் ஓதியதாக ஒரு ஸஹாபி மூலமாகக் கூட செய்தி வரவில்லை என்கின்றார்."**

(அல் இஸ்தித்கார் 2/282)

**4. இந்த குனூத் சிறியதாக இருக்க வேண்டும். மணிக்கணக்கில் இருக்கக் கூடாது. சிறிது ஓதுவார்கள் என ஹதீஸில் தெளிவாக வந்துள்ளதால் மஃமூம்கள் சடைவடையும் அளவுக்கு குனூத்தை நீட்டக் கூடாது.**

**5. காபிர்களை சபிக்கலாமா?**

குனூத்தின் போது காபிர்களில் சிலரைக் குறிப்பிட்டு லஃனத் செய்யலாமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

நாம் யாரைக் குறித்து சபித்து துஆச் செய்கின்றோமோ அவர் இஸ்லாத்தைக் கூட ஏற்க வாய்ப்புள்ளது. எனவே, இன்னாரை சபிப்பாயாக! எனப் பெயர் குறிப்பிட்டு சபிக்க முடியாது என ஷெய்க் அல் உதைமீன்(ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இதே போன்று ஒரு முஃமின் சபிப்பவராக இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலும் சில அறிஞர்கள் சபிக்கக் கூடாது என்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நபி(ﷺ) அவர்கள் குறிப்பிட்ட சிலரை சபித்து குனூத் ஓதினார்கள்.

"(நபியே!) அதிகாரத்தில் உமக்கு யாதொரு பங்கும் இல்லை. (அல்லாஹ்) அவர்களுக்கு மன்னிப்பு வழங்கலாம் அல்லது நிச்சயமாக அவர்கள் அநியாயக்காரர்கள் என்பதால் அவன் அவர்களைத் தண்டிக்கலாம்."

(3:128)

என்ற வசனம் இறங்கியதும் குனூத் ஓதுவதை விட்டுவிட்டார்கள். எனவே, நபி(ﷺ) அவர்கள் குறிப்பிட்டு சபிப்பதை விட்டுள்ளார்கள் என்பதால் குறிப்பிட்டு சபிக்கக் கூடாது என்று கூறுகின்றனர்.

இமாம் அஹ்மத்(ரஹ்) அவர்கள் பெயர் குறிப்பிட்டு சபிக்க முடியும் என்கின்றார்கள். இந்தக் கருத்துடைய அறிஞர்கள் பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றார்கள்.

**"நபி(ﷺ) அவர்களது காலத்தில் ஒருவர் மது குடித்து அதற்காகத் தண்டனை வழங்கப்பட்டார். அவரை ஒருவர் சபித்தார். அப்போது நபி(ﷺ) அவர்கள் 'இவரைச் சபிக்காதீர்கள்! ஏனெனில், அல்லாஹ்வின் மீதாணையாக இவர் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கின்றார் என்றே நான் அறிந்துள்ளேன்' என்று கூறுகின்றார்கள்."**

(புஹாரி:6781 - சுருக்கம்)

இந்த ஹதீஸின் அடிப்படையில் அல்லாஹ்வையும் ரஸூலையும் நிந்தனை செய்பவர்களை சபிக்கலாம் என்று ஆதாரம் எடுக்கின்றனர்.

**"நபி(ﷺ) ஒரு மாதம் சிலரைச் சபித்து துஆ ஓதினார்கள். குர்ஆன் வசனம் அருளப்பட்ட பின்னர் விட்டுவிட்டார்கள் என்ற ஹதீஸைப் பொறுத்த வரையில் நபி(ﷺ) அவர்கள் யாரை சபித்தார்களோ அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்."**

(திர்மிதி: 3005, அஹ்மத்: 5674)

எனவே, இதனை ஆதாரமாகக் கொண்டு தீர்க்கமாக முடிவு செய்ய முடியாதுள்ளது.

இமாம்களான மாலிக், அஹ்மத், இப்னு ஹிப்பான், இப்னு பத்தால், இப்னு குதாமா, இப்னு தைமிய்யா, இப்னுல் கையும், நவவி, இப்னு ஹஸ்ம், ஸன்ஆனி (ரஹ்) போன்ற அறிஞர்கள் சபித்து ஓதலாம் என்ற கருத்தில் உள்ளார்கள்.

இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கடுமையாக எதிர்ப்பவர்களைப் பொறுத்த வரையில் தேவைப்பட்டால் அவர்களை சபித்தும் ஓதலாம். அவர்களது வெளிப்படையான தன்மையை வைத்து இந்த முடிவைச் செய்யலாம்.

அல்லது நபி(ﷺ) அவர்கள் யா அல்லாஹ்! தவ்ஸ் கூட்டத்திற்கு நேர்வழி காட்டுவாயாக! என்று பிரார்த்தித்தது போல் உமர் அல்லது அபூஜஹ்ல் இருவரில் ஒருவர் மூலம் இஸ்லாத்திற்கு உதவி செய்வாயாக! என்று பிரார்த்தித்தது போல் அவர்களின் ஹிதாயத்திற்காகவும் பிரார்த்திக்கலாம்.

**6. சப்தமிட்டு ஓதப்படும்.**

ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஹதீஸ், மற்றும் இமாம் இப்னு ஹஜர்(ரஹ்) அவர்களது கூற்று என்பன இந்தக் குனூத்தை இமாம் சப்தமிட்டு ஓதுவார் என்பதை உறுதி செய்கின்றன.

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் குனூத்தை சப்தமிட்டு ஓதுவது முஸ்தஹப் (விரும்பத்தக்கது) என்று கூறுகின்றார்கள்.

(அல்மஜ்மூ:. 3/482)

**7. கைகளை உயர்த்தி ஓதலாம்.**

**"நபி(ﷺ) அவர்கள் காபிர்களுக்கு எதிராகப் பிரார்த்திக்கும் போது,**

رَفَعَ يَدَيْهِ فَدَعَا عَلَيْهِمْ

**தமது இரு கைகளையும் உயர்த்தி அவர்களுக்கு எதிராகப் பிராத்தித்தார்கள்."**

(அஹ்மத்: 12402, 12429)

அறிஞர் சுஜப் அல் அர்னாஊத் இதை சரியான அறிவிப்பாளர் மூலம் வந்த செய்தி என்று கூறுகின்றார்கள்.

இமாம் குனூதுன் நவாஸிலில் ஓதும் போது பின்னால் இருப்பவர்கள் ஆமீன் கூறுவது ஆகுமானது என்பதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

**"நபி(ﷺ) அவர்கள் சபித்து துஆ ஓதிய போது,**

وَيُؤَمِّنُ مَنْ خَلْفَهُ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் இருப்பவர்கள் ஆமீன் கூறுவார்கள்."

(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரழி), ஆதாரம்: அபூதாவூத் - 1445, 1433, அஹ்மத்- 2746, பைஹகி - 1955, 1002, இப்னு குஸைமா - 618, ஹாகிம் - 820)

அறிஞர் சுஜப் அல் அர்னாஊத் இதை ஸஹீஹானது என்றும், அல்பானி மற்றும் அல் அ.்ழமி ஆகியோர் ஹஸனான அறிவிப்பு என்றும் கூறுகின்றனர். இந்தக் குனூத்தின் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1. பிரச்சினையின் போது ஓத வேண்டும்.
2. பிரச்சினை முடிந்த பின்னர் விட்டு விட வேண்டும்.
3. என்ன பிரச்சினையோ அதைக் குறிப்பிட்டு ஓத வேண்டும். குறித்த ஒரு துஆவைத்தான் ஓத வேண்டும் என்பதில்லை.
4. சிலர் அல்லாஹும்மஹ்தினி என்ற குனூத்தில் ஓத நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த, பொதுவாக எமது நாட்டில் சுபஹில் ஓதப்படுகின்ற குனூத்தையே ஓதுகின்றனர். இது தவறானதாகும்.
5. துஆவின் முடிவில் கைகளை முகத்தில் தடவக் கூடாது.
6. குனூதுன் நவாஸில் ஓதுவதற்கு முன்னர் ஹம்து ஸலவாத்து என்பது இல்லை என்பதைக் க்வனத்தில் கொள்ளவும்.
7. இமாம் குனூதுன் நவாஸில் ஓதினால் பின்னால் இருப்பவர்கள் ஓத வேண்டும். விட்டு விட்டால் பின்னால் இருப்பவர்களும் விட்டு விட வேண்டும். இதில் முரண்பாடு கொள்ளத் தேவையில்லை.

இதுவரை நாம் குறிப்பிட்ட ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது இது ஆகுமான குனூத். எம்மில் சிலருக்கு இதில் உடன்பாடு இல்லையென்றால் எவ்வித ஆதாரமும் இல்லாத பித்அத்தை எதிர்ப்பது போல் எதிர்க்காது அமைதி காப்பது நல்லதாகும்.

# பர்தா ஆடையைத் தடுக்க எவருக்கும் அதிகாரம் கிடையாது

**கருணாரத்ன ஹேரத் தெரிவிப்பு**

முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா, நிகாப் ஆடைகளை அணிய வேண்டாம் என கூறுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது என 'முஸ்லிம் நீதிய' நூலின் ஆசிரியர் சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத் விடிவெள்ளிக்கு வழங்கிய விஷேட செவ்வியின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் ஆடை விடயத்தை ஊடகங்களே பூதாகரமான பிரச்சினையாக சமூகத்திற்கு காட்டுகின்றது.

பௌத்த பிக்குகள் அவர்களின் மேனியில் ஒரு பகுதியை திறந்து ஆடை அணிவது கலாசார சீரகேடு என்று யாராவது குற்றம் சுமத்தும் பட்சத்தில் அவர்கள் அதனை ஏற்று அவர்களின் ஆடைக் கலாசாரத்தை மாற்றிக்கொள்வார்களா?

மேற்கத்தய ஆடைகள் அணியக் கூடாது அல்லது இந்தியக் கலாசார ஆடைகளை அணியக் கூடாது என வாதிட்டால் நாம் எந்த ஆடைகளை அணிவது?

ஒருவர் நிர்வாணமாக பாதையில் சென்றால் அவரை கட்டாயம் சட்டம் தண்டிக்கும். முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையிலிருந்து துர்நாற்றம் ஏற்பட்டாலோ, சூழலை பாதிக்கும் வகையில் ஏதேனும் இரசாயனம் வெளியேறினாலோ அதனை தடுக்க முடியும்.

எமது நாட்டில் ஒரு ஆண் அல்லது ஒரு பெண் குறிப்பிட்ட ஆடையைத்தான் அணிய வேண்டும் என்ற எந்த சட்டமும் கிடையாது. எனவே, யாராலும் முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா நிகாப் ஆடைகளை அணிய வேண்டாம் எனக் கூற முடியாது. அப்படிக் கூறுவதற்கு இலங்கைச் சட்டத்தில் எந்த இடமும் கிடையாது என்றார்.

உண்மை உதயம் ஏப்ரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தின் போட்டி

## இல: 133

01. யூதர்கள் அல்லாஹ்வின் புதல்வர் என்று கூறிய நபி யார்?
02. சுலைமான் (عليه السلام) அவர்களுடன் நேரடித் தொடர்புபட்டிருந்த பறவையின் பெயர் என்ன?
03. முஸ்லிம்கள் ஆபத்தின் சூழ்நிலைகளின் போது ஓதப்படும் குனூத் எவ்வாறு அழைக்கப்படும்?

(இக்கேள்விகளுக்கான விடைகள் இவ்விதழிலேயே இருக்கின்றன)

விடைகளைத் தபால் அட்டையில் மாத்திரம் எழுதிப் போட்டிக் கூப்பனையும் அதனுடன் இணைத்து 2013 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**உதயத்தின் போட்டி இலக்கம் 131 இல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்.**

01. பார்வைகளைத் தாழ்த்துதல், பாதையில் செல்வோருக்கு நோவினை செய்யாதிருத்தல். ஸலாத்திற்குப் பதில் கூறுதல், நன்மையை ஏவுதல் - தீமையைத் தடுத்தல்
02. அபாபீல் பறவை
03. அப்துல்லாஹ் (ﷺ)

## போட்டி இலக்கம் 131 பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| M.A. ரிப்கா<br>புல்மோட்டை - 1 | M.I. மொஹமட்<br>ரந்தெனிகல,<br>மாகோ. | F. சுமையா<br>மஹகொட,<br>பேருவளை. |

## பாராட்டுப் பெறுவோர்

01. மின்னா மிஹ்லார் - கேகாலை
02. கிபாயா தாஜ்தீன் - பஸ்யால
03. இஸ்ரா அப்துல் காதர் - புத்தளம்
04. M.I.L.M. பாரூக் - ஹெம்மாதகம
05. M.M. யுஸ்ரி - எலபடகம
06. M.G.F. சப்ரினா - கம்பொல
07. நாருல் ஸப்னா - ஹின்குல்ல
08. G.M. சுஹைல் - விஜிதபுர
09. A.A.M. இனாமுல்லா - கெகிராவ
10. ப. றோஸ்னாஸ் - பொலன்னறுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka in the Department of Post of Sri Lanka Under QD/110/News/2013

# சேகுவேரா - 1971

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு
அன்று (05.04.1971)
நள்ளிரவில் புரட்சி நாடகம் அரங்கேறியதே!

அரசவிரோத சதி செய்ய எத்தனித்தனரே
பல்லாயிரம் வாலிபர்கள் பலியாகினரே!

பெரும்பான்மை இனத்தினால் விளைந்த பெரும்பாதகம்
இரத்த ஆறு நாடெங்கும் பெருக்கெடுத்ததே!

ஊரடங்கு நீண்ட நாட்கள் நிலைத்திருந்ததே
அதனால், சித்திரைப் புத்தாண்டு சோகமயமானதே!

ஆறு, கடல், ஏரிகளில் சடலங்கள் மிதந்தனவே
வன விலங்குகள் சடலங்களை ருசித்தனவே!

கண்ட காட்சி, பட்ட துன்பம் நெஞ்சம் மறக்குமோ!
கறை படிந்த வரலாற்றை மீண்டும் நோக்குவோம்!

அந்நாளை நாம் நினைவு கூர்வோம்
ஒற்றுமையுடன் எல்லோரும் ஒன்று சேர்வோம்!

புரட்சிக் கவிஞன்
அபூ முஜாஹித் (வரகாபொல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org